# உதயன்

சுடர் 30 | கதிர் 297 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 02, சனிக்கிழமை 19.09.2015

ஆளும் எந்தக் கட்சியாலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வில்லை

பக்கம் 16

# பரிந்துரைகளை இலங்கை செயற்படுத்தாவிட்டால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் தமிழ் சிவில் சமூக அமையம் கோரிக்கை

கொழும்பு, செப். 19

குறிப்பிட்டகால வரையறைக்குள் ஐ.நா. அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால் ஐ.நாவும் அதன் அங்கங்களும், உறுப்பு நாடுகளும் ஐ.நா. பாதுகாப்பு சபை மூலம், இலங்கை விவகாரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தமிழ் சிவில் சமூக அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆண்ணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையை நாம் வரவேற்கின்றோம். இழைக்கப்பட்டுள்ள குற்றங்கள்

பக்கம் 24.....

## புலனாய்வு அதிகாரியிடம் 6 மணி நேரம் விசாரணை

கொழும்பு, செப். 19

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் பிரிகேடியர் அருண வன்னியாராச்சியிடம் ஆறு மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட அவரிடம், பொலிஸ் அதிகாரிகள் ஆறு மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலம் ஒன்றையும் பதிவு

பக்கம் 24.....

## கல்விக்கு அதிக நிதி

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.19

தேசிய உற்பத்தியில் 6 சதவீதமான நிதியைக் கல்விக்காக ஒதுக்கவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில், கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகரிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஐந்து வருட காலப் பகுதியினுள் பாடசாலை மாணவர்களுக்குப் புதிய புத்தகங்களை வழங்க எதிர்பார்ப்பதாகப் பிரதமர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான சர்வதேச புத்தகக் கண்

பக்கம் 24.....

# புலி ஆதரவாளர் தேவைக்காகவே ஐ.நா. அறிக்கை

### சாடுகிறார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தா

கொழும்பு, செப்ரெம்பர் 19

இறுதிப்போர் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்பவே தயாரிக்கப்பட்டுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச குற்றம்



பக்கம் 24.....

# 2016 முதல் சாவுத் தண்டனை

### நிறைவேற்ற ஜனாதிபதி மைத்திரிபால முடிவு
### நாடாளுமன்றின் அனுமதி கிடைத்தால் போதுமாம்

கொழும்பு,செப்.19

அடுத்த வருடம் தொடக்கம் சாவுத் தண்டனையை நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் அனுமதி கிடைத்தால் சாவுத் தண்டனையை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இன்று இடம்பெறும் கொலை, கொள்ளை, சிறு

பக்கம் 24.....

## சர்வதேச விசாரணையே நீதி-நியாயத்தைத் தரும்

### வடக்கு-கிழக்கின் 170 கத்தோலிக்கக் குருக்கள் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செப். 19

ஒற்றுமையில்லாமல் சமாதானம் ஏற்படாது. ஒற்றுமை ஏற்பட நீதி வழங்கப்படவேண்டும். அப்படியான நீதி-நியாயம் சர்வதேச விசாரணையால் மட்டுமே கிடைக்கப் பெறும். எனவே சர்வதேச விசாரணை அவசியமானது என்று வலியுறுத்தி வடக்கு - கிழக்கிலுள்ள 170 கத்தோலிக்க மதகுருமார்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், இலங்கை மீது சர்வதேச விசாரணை தேவை என்று கோரி வந்த அமெரிக்காவும், இப்போது தவறான வழிநடத்தல் காரணமாக தனது நிலையை மாற்றிக் கொண்டுள்ளது. நாட்டில் இரண்டு தேர்தல்கள்

பக்கம் 22.....

## கரையோரத்தை தூய்மையாக்கும் திட்டம் திங்களன்று

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்.மாவட்டத்தின் அனைத்துக் கரையோரப் பிரதேசங்களையும் தூய்மைப்படுத்தும் நிகழ்வுகள், கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபையின் திட்ட முன்னெடுப்புடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற்கரையோரத் தூய்மைப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக, இது நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் மாவட்ட மட்ட நிகழ்வு நாளை மறுதினம் திங்

பக்கம் 24.....

# 1,000 மடங்கு கடினத் தன்மை ஐ.நா அறிக்கையில் குறைப்பு

### நான் ஜனாதிபதியாக வந்தமையால் தான் இது சாத்தியமானது என மைத்திரிபால பெருமிதம்

கொழும்பு, செப்.19

மகிந்த ராஜபக்ச இல்லாத அரசு ஒன்றுதான் நாட்டுக்குத் தேவையாக உள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையால் தற்பொழுது நாடு ஆபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 1,000 மடங்கு கடினத்தன்மை குறைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி மைத்திரிபால

பக்கம் 24.....

## இலங்கையில் நடைபெற்றவை மோசமான போர்க்குற்றங்கள்

### ஐ.நா. அதிகாரிகள் கண்டனம்





ஜெனிவா,செப்.19

இலங்கையில் 2002 முதல் 2011 வரையான காலப்பகுதியில் மோதலில் ஈடுபட்ட சகல தரப்பினராலும் இழைக்கப்பட்ட மிக மோசமான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் குறித்து ஐ.நா. மூத்த அதிகாரிகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

ஐ. நா. செயலாளர் நாயகத்தின் இனப்படுகொலையைத் தடுப்பது தொடர்பான விசேட ஆலோசகர் அடமாடியங் மற்றும் பாதுகாப்பு. பொறுப்புக் குறித்த ஆலோ சகர் ஜெனிபர் வெல்ஸ் ஆகியோரே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள்

பக்கம் 22.....

## விசாரணை அறிக்கைக்கு ஐ.நா. செயலர் வரவேற்பு

### சர்வதேசத்துடன் ஆக்கபூர்வமான உறவைப் பேணுமாறும் வேண்டுகோள்

ஜெனிவா,செப்.19

இலங்கையின் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை வரவேற்கப்படவேண்டியது என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்



பக்கம் 22.....

## நிரந்தர அரசியல் தீர்வு விரைவில் அறிவிப்பு

### பிரதமர் ரணில் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு,செப்.19

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உதலாகம மற்றும் பரணகம ஆணைக்குழு அறிக்கைகள் முன்வைக்கப்பட்ட பின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு அறிவிக்கப்படும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய அரசை அமைத்ததன் ஊடாகத் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் 109 ஆவது ஜனன தின நிகழ்வில் உரையாற்றிய

பக்கம் 24.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு கலப்பு நீதிமன்றில் சிங்கள நீதிபதிகள் கூடாது

## தமிழகக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்து

சென்னை, செப்.19

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமைக்கப்படும் சிறப்பு கலப்பு நீதிமன்றில் சிங்கள நீதிபதிகள் எவரும் உள்வாங்கப் படக்கூடாது என தமிழகத்தின் அரசியல் கட்சித் தலைவர்கள் வ்லியுறுத்தியுள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸ் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ ஆகியோரே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராம்தாஸ் தெரிவித்துள்ளதாவது:-

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது சிங்கள நீதிபதிகள் எவரும் உள்வாங்கப்படக்கூடாது. சிங்கள நீதிபதிகள் விசாரணை நடத்தினால் நீதி கிடைக்காது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் அது சர்வதேச விசாரணைகளின் மூலமே சாத்தியமாகும். சர்வதேச ரீதியில் விசாரணை நடத்தப்பட்டு குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.- என்றார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ இது குறித்துத் தெரிவித்துள்ளதாவது:-

போர்க் குற்றம் குறித்து மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் இலங்கையைச் சேர்ந்த நீதிபதிகள் உள்ளடக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உரிய நீதி, நியாயம் கிடைக்காது. இவ்விடத்தில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கோரிக்கை குறித்து ஐ.நா கவனம் செலுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு சர்வதேச விசாரணையின் மூலமே தீர்வு கிட்டும். தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக சர்வதேச விசாரணைகளுக்கு இந்திய மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் மோடி அரசும் இனச் சுத்திகரிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவே கருதப்பட வேண்டும்.- என்றார். (ற)

# துஷ்பிரயோகத்தின் பின்னர் எட்டு வயது சிறுமி கொலை

## காலி, அக்மீமன ஜனபாலா பகுதியில் சம்பவம்

கொழும்பு, செப்.19

காலி, அக்மீமன ஜனபாலா பகுதியில் எட்டு வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்மீமன குருந்துவத்த பகுதில் உள்ள 8 வயதுடைய சிறுமியே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. குறித்த சிறுமி வீட்டுக்கு அருகில் இருந்த தேயிலைத் தோட்டமொன்றில் இரத்த கறையுடன் கூடிய உடையுடன் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் பிரதேச மக்களால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி கடந்த 16 ஆம் திகதி பாடசாலை முடிவடைந்து தனது 12 வயதுடைய சகோதரியுடன் வீட்டுக்கு வந்துள்ளார். சிறுமியின் அக்கா பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுள்ளார். அம்மா தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்வதற்காகவும், அப்பா மற்றுமொரு வேலைக்காகவும் சென்றுள்ளனர்.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த தாய், வீட்டில் தனிமையாக இருந்த சிறுமியை காணாது தேடியுள்ளார். சுமார் மாலை 6.30 மணியளவில் அக்மீமன பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாய் சிறுமியைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும் பிரதேச மக்களும் மேற்கொண்ட தேடுதலில் சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காலி நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் குனேந்திர குமார இறப்பு விசாரணைகளை மேற்கொண்ட .பின்னர் சிறுமியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக காலி கரபிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனையின் முடிவிலே சிறுமி கழுத்து நெரிக்கப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அதே பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே கம்பஹா, கொட்ட தெனியாவ பகுதியில் இதேபோன்று ஐந்து வயதுடைய சிறுமி ஒருவர் இனந்தெரியாத நபரால் கழுத்து நெரிக்கப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். (ற)

# கொட்டதெனியாவ சிறுமி கொலை; மூன்று பொலிஸ் குழுக்கள் களத்தில்

## மூன்று சந்தேக நபர்கள் விசாரணை வளையத்துக்குள்

கொழும்பு, செப்.19

கொட்டதெனியாவ - படல்கம, அக்கரங்கஹ பகுதியைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறுமி கொடூரமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு துணியினாலான பட்டி ஒன்றால் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் மூன்று பேர் விசேட பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்துள்ள சாட்சியங்களின் படி குறித்த மூவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்படுவோரில் சிறுமியின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த 18 வயதுடைய இளைஞன், சிறுமியின் வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள 35 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை, நடுத்தர வயதுடைய பிறிதொருவர் என்போர் அடங்குகின்றனர் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய குற்றப் புலனாய்வுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சுதத் நாகஹமுல்ல ஆகியோரின் மேற்பார்வையில் கொட்டதெனியாவ - படல்கம, அக்கரங்கஹ பகுதிக்குச் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் 3 பொலிஸ் குழுக்கள் மேலதிகமாக சில சான்றுகளையும் சேகரித்துள்ளது. இந் நிலையில் 6 பொலிஸ் குழுக்கள் சேர்ந்து குறித்த சிறுமியின் கொலை தொடர்பிலான விசாரணைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ் தகவல்களின்படி சிறுமியின் படுகொலை தொடர்பிலான சந்தேகநபர் போதைக்கு அடிமையாகியவராக இருக்க வேண்டும் என்ற உறுதியான தகவல் ஒன்றின் அடிப்படையில் பிரதான விசாரணை இடம்பெற்று வருகின்றது என்று தெரியவருகின்றது. அத்துடன் தற்போது பொலிஸாரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருபவர்கள், போதைக்கு அடிமையானவர்கள் எனவும், நீலப்படங்கள் பார்ப்பதற்கும் அவர்கள் அடிமையானவர்கள் என்றும் உளவுத் தகவல்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் விகாரமான பாலியல் ஆசைகள், நடவடிக்கைகள் குறித்தும் இந்தச் சந்தேக நபர்கள் தொடர்பில் கிடைத்த தகவல்களும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.


தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பொலிஸார் எவ்வித தகவல்களையும் தெரிவிக்க விரும்பாத போதும் புலனாய்வுப் பிரிவினரும் அந் நபர்களை விசாரணை செய்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அதில் ஒருவர் சிறுமியை தேடுவதில் தீவிரமாக செயற்பட்டவர் எனவும் இறுதிக் கிரியைகளின் போது அவர் அங்கு இருக்கவில்லை எனவும் குறிப்பிடும் பொலிஸார், அந் நடவடிக்கைகளும் அவதானத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதனிடையே சிறுமியின் இறுதி நிகழ்வுகளின்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சிறுமியின் தந்தை உபுல் நிஸாந்த,

பொலிஸ் பொறுப்பில் உள்ள வர்கள் தொடர்பில் தமக்கும் தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர்களுக்கும் பிள்ளைகள் உள்ளதால் அவர்கள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்துவது பொருத்த மற்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனின் நேரடி வழிநடத்தலில் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, மேல் மாகாணத்தின் வடக்குப் பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எல்.ஜி.குலரத்ன ஆகியோரின் கட்டுப்பாட்டில் நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அபேவிக்ரமவின் ஆலோசனைக்கு அமைய மூன்று பொலிஸ் குழுக்களும் பிரதான விசாரணையை பொலிஸ் மா அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சுதத் நாக ஹமுல்ல ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய 3 சிறப்புக் குழுக்களும் முன்னெடுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மின்தடை பற்றிய அறிவித்தல்



கிளிநொச்சி, செப்.19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று கிளிநொச்சியில் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

காலை 8 மணிமுதல் பி.ப 5.00 மணிவரை விவேகானந்தநகர், பாரதிபுரம், கிருஷ்ணபுரம், விவேகானந்தா பாடசாலைப் பிரதேசம், மலையாளபுரம், உதயநகர், ஆனந்தபுரம், அம்பாள்குளம், ஆர்.டி.ஏ சந்திப் பிரதேசம், கிளிநொச்சி பொது வைத்தியசாலை, இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனம் ஆகிய இடங்களில் மின்தடைப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# பக்கச்சார்பானது ஐ.நா. அறிக்கை

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.19

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையானது, ஒரு பக்கம் சார்பானதாக இருக்கின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த அறிக்கையானது இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சார்பானது. ஆனால் விடுதலை புலிகள் பலர் இன்று உயிருடன் இல்லை. ஆகவே இவ்வறிக்கையானது ஒரு பக்கம் சார்பானதாகவே காணப்படுகின்றது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வாக முன்மொழியப்பட்டுள்ள, கலப்பு நீதிமன்றத்தினை நிராகரித்துள்ள விமல். அத்தகைய நீதிமன்றம், ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் சபையின் ஒரு கிளையாக மாறிப்போய்விடும் எனவும் எச்சரிக்கை செய்துள்ளார். (ற)

# அரிய சந்தர்ப்பத்தை தவறவிடும் ரசிகர்கள்

## சர்வதேச திரைப்பட விழாவில் பார்வையாளர் குறைவு என ஆர்வலர்கள் கருத்து

யாழ்ப்பாணம், செப்.19

முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டுவரும் சர்வதேச திரைப்படவிழாவில் பார்வையாளர்கள் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச திரைப்பட விழா கர்கில்ஸ் சதுக்கம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கு மற்றும் யாழ். பொது நூலகம் என்பவற்றில் நடைபெற்று வருகின்றது. அதில் சிறந்த திரைப்படங்கள் நாள்தோறும் பல காட்சிகளாகத் திரையிடப்பட்டு வருகின்றன. எனினும் திரைப்படங்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை எதிர்பார்த்தளவு இல்லை என்று கூறப்படுகின்றது.

ஈழத்து சினிமா வளர்ச்சி பெறுவதற்கு இவ்வாறான விழாக்கள் உறுதுணையாக இருக்கும் என்றும், துறைசார்ந்தோருக்கு இவ்வாறான விழாக்கள் வரப்பிரசாதம் என்ற நிலையில் அவர்கள் இதனைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதப்படுகின்றது.

திரைப்பட விழாவின் காட்சிகளுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்ட சிலரிடம் அவர்களது அனுபவம் பற்றிக் கேட்டபோது:-

இந்த விழா பற்றி பத்திரிகை வாயிலாக அறிந்து சென்றிருந்தோம். இங்கு நடைபெறுவது மகிழ்ச்சியான விடயம். குறுந்திரைப்படங்களை இலகுவாக விளங்கிக் கொள்ள முடிந்தது. சிங்கள சினிமாவின் சிறந்த படங்கள் திரையிடப்பட்டன. ஆங்கில உபதலைப்புகளுடன்தான் அவற்றைக் காண வேண்டியிருந்தது. ஆங்கில அறிவு இல்லாதவர்கள் காட்சிகளை மட்டுமே பார்க்க முடிந்தது. இவை குறித்து ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். மிகச் சிறந்த அனுபவமாக இருந்தது.- என்று தெரிவித்தனர்.

குறைவான பார்வையாளர்களே காட்சிகளுக்கு வருகின்றனர் என்று கூறப்படுவதை அடுத்து இதுவரை இந்தக் காட்சிகளுக்குச் செல்லாத சிலரிடம் கருத்துக் கேட்டபோது அவர்கள் பணியின் நிமித்தம் அவற்றுக்குச் செல்லமுடியவில்லை என்றும் வார இறுதி நாள்களில் காட்சிகளுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறான விழாக்களை வார இறுதி நாள்களில் திட்டமிட்டு நடத்தினால் சிறப்பாக இருக்கும்- என்று தெரிவித்தனர். இவ்வாறான விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது மகிழ்ச்சியான விடயம் என்றும் குறிப்பிட்டனர்.

முதல் முறையாக இந்த விழா யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்றது என்பதால் இந்தப் பிரச்சினை ஏற்படுவது சகஜமானது. பார்வையாளர் வருகை என்பது சவாலாகத்தான் இருக்கும். இனிவருங் காலங்களில் இந்தப் பிரச்சினை இல்லாது போகும் - என்று துறைசார்ந்தோர் தெரிவித்தனர். இந்தத் துறைசார்ந்தோருக்கு இது நல்லதொரு வாய்ப்பு. இதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

அதேவேளை, நாளை மறுதினம் திங்கட்கிழமையுடன் யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழா நிறைவடையவுள்ளது.

(ற-10,ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படை முகாம் முன்பாக மீனவர்கள் திடீர் போராட்டம்

## இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்குமாறு



யாழ்ப்பாணம், செப்.19

இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி பருத்தித்துறை முனைப் பகுதி மீனவர்கள் நேற்று அங்குள்ள கடற்படை முகாம் முன்பாக திடீரெனப் போராட்டத்தில் குதித்தனர்.

மீனவர்களின் திடீர் போராட்டத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். சம்பவ இடத்துக்கு கடற்படை உயரதிகாரிகளும் வந்தனர்.

எமது பிரச்சினை தொடர்பில் பல தடவைகள் உரியவர்களிடம் எடுத்துக் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்காமையாலேயே தாம் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறைக் கடற்பரப்புக்குள் கடந்த சில நாள்களாக ஊடுருவும் இந்திய மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களைத் தினமும் சேதப்படுத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டிய மீனவர்கள் கடந்த வாரம் மட்டும் நூற்றும் மேற்பட்ட வலைகள் இவ்வாறு சேதப்படுத்தப்பட்டன என்றும் தெரிவித்தனர்.

இன்று (நேற்று) அதிகாலையும் இந்திய மீனவர்களால் சேதமாக்கப்பட்டன என்று விசனம் தெரிவித்த மீனவர்கள் இலங்கையின் எல்லைக்குள் அஞ்சி அஞ்சிப் பிரவேசித்த இந்திய விசைப்படகுகள் தற்போது எமது கிராம எல்லைவரை துணிச்சலுடன் வந்து செல்கின்றன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடற்படையினரும், அதிகாரிகளும் இவற்றைக் கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களாகவே உள்ளனர் என்று கவலை வெளியிட்ட மீனவர்கள்; அதிக முதல் இட்டு தொழில் செய்யும் நாம் தினத்தோறும் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றோம் என்றும் குறிப்பிட்டனர்.

கடற்படை உயரதிகாரிகள் இந்த விடயத்தை உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக மீனவர்களிடம் உறுதியளித்தனர். அதையடுத்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை கடற்படை அதிகாரியிடம் கையளித்த மீனவர்கள் போராட்டத்தை முடித்து – கலைந்து சென்றனர். (ற–108, 101, 402)

## கிணற்றுக்குள் தவறி விழுந்து பெண் சாவு

சாவகச்சேரி, செப்.19

கிணற்றில் தண்ணீர் அள்ளிய வயோதிபப் பெண் கிணற்றுக்குள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டுவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த வேலன் தெய்வானை (வயது–78) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார். இவரது சடலம் கிணற்றில் இருந்து உறவினர்களால் மீட்கப்பட்டுச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. (த–131)

## கைக்குண்டு மீட்பு

எழுதுமட்டுவாழ் பகுதியில் கைவிடப்பட்ட தோட்டமொன்றில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட கைக்குண்டைப் படையினரின் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் படையினர் மீட்டு செயலிழக்கச் செய்துள்ளனர்.

பொதுமக்கள் நேற்று கொடுத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து அவ்விடத்தில் பாதுகாப்பை ஏற்படுத்திவிட்டு இது தொடர்பாகச் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து படையினரின் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் படைப்பிரிவு மூலம் அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்ய அனுமதியும் கோரியிருந்தனர். சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் அனுமதி கொடுத்ததையடுத்து படையினர் குண்டை மீட்டு செயலிழக்கச் செய்தனர். (த)

# இறுதிப்போரில் நிகழ்ந்தவற்றை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது

## அனைத்துலக மனித உரிமைகள் நிபுணர் யஸ்மின் சூகா தெரிவிப்பு

ஜெனிவா, செப்.19

இலங்கையின் இறுதிக்கட்ட போரின்போது நடைபெற்றவைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என அனைத்துலக மனித உரிமைகள் நிபுணர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் உரையாற்றும் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் குறித்த விசாரணைக்கு அங்கு அமைந்துள்ள புதிய அரசு நடவடிக்கை எடுக்கும் என மனித உரிமைகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக முக்கியமானதாகக் கருதப்படுவது தேசிய தலத்தில் ஒட்டுமொத்த கலந்தாலோசனையே. ஆனால் இந்த தேசிய அளவிலான கலந்தாலோசனையில் ஒடுக்கப்பட்டவர்களின் குரல்கள் பிரதிபலிக்குமா? பாதிக்கப்பட்டவர்கள், ஒன்றுமல்லாமல் சிதைக்கப்பட்டவர் என இலங்கையின் ஒட்டுமொத்த பொதுமக்களின் பங்களிப்பு இருக்குமா? – என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், போர்க்குற்றம் குறித்து விசாரணை நடத்துவதற்கென இலங்கையில் பல்வேறு அமைப்புக்களை அமைத்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவை அனைத்துமே வரலாற்றுப் பிழை அன்றி வேறில்லை.

அடுத்ததாக அனைவருக்கும் எழும் கேள்வி என்பது பாதுகாப்பு சீரமைப்பு குறித்து தான். மனித உரிமை ஆணையம் குறிப்பிட்டுள்ள அறிக்கையில் மட்டுமல்ல பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டுவது கெட்டுப்போன சிலர் குறித்து அல்ல.

இங்கு நாம் சுட்டிக்காட்டுவது பொலிஸ் அல்லது இராணுவ வீரர்கள் களங்கமடைந்திருப்பதாக அல்ல, தவறிழைத்தவர்களை தண்டனையில் இருந்து தப்பவிடக் கூடாது என்பதே.

சாட்சியம் அளிப்பவர்களை பாதுகாப்பது மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. சாட்சியம் அளிப்பவர்களுக்கு பாதுகாப்பை நாம் உறுதி செய்யவில்லை எனில் அவர்களின் குரல்களை நாம் உதாசீனம் செய்வதேயாகும். சர்வதேச அமைப்புக்களாலான நீதிமன்றம் குறித்து மனித உரிமை ஆணையர் குறிப்பிட்டார், ஆனால் அதற்கும் இலங்கை அரசு கட்டுப்பாடுகள் இருப்பதாக தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் நிபுணர்களை கொண்ட ஒரு அமைப்பையே பரிந்



துரைத்திருக்கிறது மனித உரிமைகள் ஆணையம்.

பல்வேறு காரணங்களால் இலங்கையில் பாதிப்புக்குள்ளான மக்கள் அங்குள்ள விசாரணை அமைப்புக்களை நம்ப தயாராக இல்லை. மனித உரிமைகள் ஆணையம் குறிப்பிட்டது போன்று இலங்கை அரசு இதுவரை நடைமுறைப்படுத்தியுள்ள விடயங்கள் குறித்து சர்வதேச சமூகத்தோடு பகிர்ந்துகொள்ள முன்வர வேண்டும். அதுவரையில் நமக்கு அங்குள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பிட முடியாமல் போகும்.

இதுவரையான அறிக்கைகளில் நமக்கு தற்போது கிடைத்திருப்பது மிக முக்கியமான அறிக்கை மட்டுமன்றி, மிக முக்கியமான பரிந்துரைகளும் கூட. மிக முக்கியமாக ஒடுக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டவர்களின் குரல்கள் சர்வதேச சமூகத்தின் முன்பு கேட்கப்பட வேண்டும் என்பதே – என்றார். (ற)

# இந்திய மீனவர் அத்துமீறல் தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு மனு

## சரவணபவன் எம்.பியிடம் கையளித்தனர் மீனவர்கள்

யாழ்ப்பாணம், செப். 19

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவதுடன், இது தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்என்று கோரிதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் மனுவைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:–

வட பகுதி மீனவர்களாகிய நாம் போரின் இழப்புக்களில் இருந்து மீண்டும் வரும் நிலையில் தற்போது இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் அத்துமீறலால் மிகவும் பாதிப்படைந்துள்ளோம்.

இதற்கு 1976 ஆம் ஆண்டு வெளிநாட்டு மீன்பிடி உபகரணங்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதிய அரசுக்கு தங்களால் ஆன அழுத்தங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கொள்கின்றோம் – என்றுள்ளது. (ற–ரி4)

# வடக்கு மாகாண சபைக்கு இரு புதிய உறுப்பினர்கள்

## நேற்று சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றனர்



யாழ்ப்பாணம், செப்.19

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட உறுப்பினர் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் நேற்று தமிழரசுக் கட்சி அலுலகத்தில் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டு தமது பதவிகளைப் பொறுப்பேற்றனர்.

இவர்கள் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபை அமர்வில் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். அதையடுத்து அவர்கள் தமது வடக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதுடன், அது குறித்து அவைத் தலைவருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தர்மலிங்கம் சித்தார்த்தனும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து சி.சிவமோகனுமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில், தர்மலிங்கம் சித்தார்த்தனுக்குப் பதிலாக க.தருமலிங்கமும், சி.சிவமோகனுக்குப் பதிலாக வ.கமலேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 14 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த இருவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டுள்ளனர். (ற–5)

# வேலியடைக்க வந்தவர்கள் மோ.சைக்கிளுடன் மாயம்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, செப்.19

திருடர்களின் தொல்லையில் இருந்து தப்புவதற்காக பணிக்கு அமர்த்தியவர்களே திருடர்களாக மாறினர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப் பகுதியில் நடந்துள்ளது.

கிளிநொச்சி–உருத்திரபுரம் பகுதியில் உள்ள விவசாயி ஒருவர் தனது வீட்டின் சுற்றுவேலி பாதுகாப்பின்றி இருந்ததால் அதைச் சீர் செய்வதற்கு வேலையாள்களைத் தேடியுள்ளார். தெரிந்த ஒருவர் மூலம் அறிமுகமான இருவரை அதற்காக கடந்த புதன்கிழமை பணிக்கு அமர்த்தியுள்ளார். அந்த இருவரும் வீட்டின் உரிமையாளர் இல்லாத சமயம் பார்த்துத் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஒருலட்சத்து 30 ஆயிரம் பெறுமதியான மோட்டார் சைக்கிளை களவாடிக்கொண்டு குறித்த இருவரும் மாயமாகியுள்ளனர்.

உரிமையாளர் வீடு திரும்பியதும் இதுகுறித்துப் பொலிஸில் முறையிட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டு அவர்களில் ஒருவருரின் தொலைபேசி இலக்கத்தைக் கைப்பற்றி, அதனூடாகத் தொடர்புகொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைக்குத் தயாரானபோது, அச்சமடைந்த திருடர்கள் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளைக் கொண்டு வந்து உரிமையாளரின் வீட்டுக்கு அருகே நிறுத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையை தீர்க்க தெரியாமல் பலரும் உயிரை மாய்க்கின்றனர்

## சவால்களை வெற்றி கொள்ள கற்றுக்கொடுக்க வேண்டும்: வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதே பெரும் பிரச்சினையாக உள்ளது. அதனால் பலர் உயிரை மாய்க்கிறார்கள். உயிரை மாய்க்கும் அளவுக்குத் தூண்டப்படுகிறார்கள். அதனாலேயே அவர்கள் நஞ்சு அருந்த முற்படுகிறார்கள். எனவே சவால்களை எப்படி வெற்றிகரமாகச் சமாளிப்பது என்று இளம் சமுதாயத்தினருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். – இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் எஸ். சிவன்சுதன் தெரிவித்துள்ளார்.

வீட்டில் பலவகைகளிலும் அன்றாட செயற்பாடுகளின் போது நஞ்சூட்டப்படுவதைத் தவிர்த்தல் பற்றிய தேசிய விச ஒழிப்பு வாரம் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படுகிறது. நஞ்சூட்டப்படல் பற்றிய செய்தியாளர் சந்திப்பு ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதே பலருக்கும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அந்தப் பிரச்சினைகளை எப்படி வெற்றி கொள்வது என்ற திறன் போதாமையால்தான் உயிர் மாய்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். எனவே வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எப்படி வெற்றிகரமாகச் சமாளிப்பது, அந்த வல்லமையை முக்கியமாக இளைய சமுதாயத்திலே எப்படி வளர்த்துக் கொள்வது என்பது முக்கியமாகக் கொள்ள வேண்டும். இளைய தலைமுறையினர், அவர்களது சவாலை எதிர்கொள்வதற்கான திறனை வளர்த்துக் கொள்ள அனைவரும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

ஒருவருக்கு எதிர்பாராத பிரச்சினை அல்லது மனக்குழப்பம் ஏற்படும்போது அதற்குத் தீர்வாகத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது உண்மையிலேயே கோழைத்தனமான முடிவு. அத்தகைய பிரச்சினைகளில் சிக்குண்டுள்ளவர்களுக்கு உதவுவதற்கு என பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்த உரையாடலில் உங்களைப் பற்றிய ரகசியங்களும் வெளியே தெரியவராது.

### 163 சாவு

மருந்து மாத்திரைகளை உரிய முறைப்படி உட்கொள்ளாததாலும், உயிரை மாய்க்க அலரி விதை உட்கொள்ளல், கிருமி நாசினி அருந்துதல் போன்றவற்றில் ஈடுபட்டு உடலில் நஞ்சு பரவி வருடாந்தம் 900 பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். கடந்த 6 வருடங்களில் 163 பேர் உயிரிழந்துள்ளனர். குடாநாட்டிலுள்ள ஏனைய வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

### அக்கறையின்மை

பொதுமக்கள் நஞ்சூட்டப்படுவது பெரியதொரு சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இங்கு மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் இந்தப் பிரச்சினை உள்ளது. இவ்வாறு பலர் நஞ்சு அருந்தி வருகின்றபோதும் மேலும் பலர் வைத்தியசாலைகளுக்குச் செல்லாமலேயே இருந்து விடுகின்றனர். அதனால் அத்தகையவர்களது இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது. அந்த எண்ணிக்கை எமக்குக் கிடைப்பதில்லை.

### கிருமி நாசினிகள்

டெங்கு போன்ற நோய்களுடன் ஒப்பிடும்போது எமது பிரதேசத்தில் நஞ்சு உடலில் பரவுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகம். பெரும்பாலும் தற்கொலை முயற்சியாகவே நஞ்சு அருந்துகின்றனர். அதற்கான காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனைய தாக்கங்களைவிட நஞ்சுத் தாக்கம் பன்மடங்கு அதிகம். வீட்டில் மண்ணெண்ணெய், முக்கியமாகக் கிருமி நாசினிகள், பீடை கொல்லிகள் என்பனவற்றை எங்கு வைப்பது என்பதில் விவசாயிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவற்றைச் சிறார்கள் காணாதவாறு அல்லது அவர்களுக்கு எட்டாத உயரத்தில் வைக்க வேண்டும். அவற்றை எவ்வாறு பாதுகாப்பாகக் கையாள்வது என்பது முக்கியம்.

தற்கொலை முயற்சியாகச் சிலர் அதனை முன்னெடுத்து வருகிறார்கள். சிலர் தவறுதலாகவும் நஞ்சுப் பொருள்களை முன்னெடுத்து வருகிறார்கள். இதற்கு மேலதிகமாகச் சுற்றாடல் மாசடைதலாலும் நச்சுத் தன்மை அதிகரித்து வருகிறது.

### விச ஜந்துகள்

இவை மட்டுமன்றி மனிதருக்கு பாம்பு, கொடுக்கன், தேனீ, நுளம்பு போன்ற விச ஜந்துகள் – கிருமிகள் கடிப்பதனாலும் நஞ்சு ஊட்டப்படுகிறது. தவறுதலாகவோ அல்லது தற்கொலை செய்யும் முயற்சியாகவோ நச்சுப் பொருள்களை எடுப்பதனால் குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் பெரிய பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது. அது அனைவருக்கும் தெரியும்.

நஞ்சூட்டப்படுகிறோம் என்பது தெரியாமலேயே நாம் நஞ்சூட்டப்படுகிறோம். அன்றாடம் உண்ணும் உணவுகள் பழுதடைவதாலும் நாம் நஞ்சூட்டப்படுகிறோம். இது உடனடியான தாக்கங்களை ஏற்படுத்தாது விட்டாலும் நீண்ட கால அடிப்படையில் பல தாக்கங்களை, சுகாதாரப் பிரச்சினைகளை, நுரையீரல், சிறுநீரகப் பாதிப்புக்களை, புற்று நோய்களை நீண்டகால அடிப்படையில் ஏற்படுத்தக் கூடியன.

நுளம்புச் சுருள்களை கொளுத்தி விட்டு கதவுகள், ஜன்னல்கள் எல்லாவற்றையும் மூடிவிட்டு நித்திரை கொள்வதும் ஒரு வகையில் நஞ்சூட்டல்தான். எனவே இயன்றவரை நுளம்பு வலைகளைப் பாவிப்பதே நன்மையளிக்கும்.– என்றார். (ற–4)

## தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் விளக்கமறியலில்

சாவகச்சேரி செப் 19

மந்துவில் பகுதியில் வர்த்தகரைத் தாக்கிய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையமொன்றில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் தனது சொந்த இடமான மந்துவிலுக்கு விடுமுறையில் வந்திருந்தார். அங்குள்ள வர்த்தக நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் தருமாறு கேட்டுள்ளார். அவர் பெற்றோல் விற்பனைக்கு இல்லையென்று கூறியதால் அவரைக் காலால் உதைத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வர்த்தகர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த)

## புதிய தொழில்நுட்பத்துடன் அமைகிறது பிரமந்தனாற்றுக் குள அணைக்கட்டு

கிளிநொச்சி, செப்.19

புதிய தொழில் நுட்பத்துடன், அலைக்கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு வரும் பிரமந்தனாற்றுக் குளஅணைக்கட்டின் கட்டுமானப் பணிகள் ஒரு மாதகாலத்துக்குள் நிறைவு செய்யப்படவுள்ளன.

வட மாகாணத்தில் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியம் மீண்டு வரும் செலவினம் என்பவற்றினூடாக ஒதுக்கப்பட்ட 9 மில்லியன் ரூபா செலவிலே பிரமந்தனாறு குளம் புனரமைக்கப்படவுள்ளது என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

குளம் அமைக்கப்பட்டது முதல் மண்ணாலான அணையே காணப்பட்டது. குறித்த பகுதியில் காற்றின் வேகம் அதிகமாக உள்ளதால் ஏற்பட்ட வேகமான அலையடிப்பின் காரணமாக, அணைக்கட்டு அரிப்புக்குள்ளாகியிருந்தது. அதையடுத்தே குறித்த அணை புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இதனூடாக சுற்றுப் பகுதியிலுள்ள 600 ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாயிகள் பயன்பெற முடியும்.



நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் மேற்படி புனரமைப்பை நேற்று முன்தினம் வடமாகாணத்தின் விவசாயத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.(ற–ரி5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.19

முதலீட்டாளர்களுக்காக யு.எஸ்.ஏ.ஐ.டி. நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் இன்று மு.ப. 10 மணிக்கு யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ள குறித்த கலந்துரையாடலில் யு.எஸ்.ஏ.ஐ.டி நிறுவனத்தின் பிரதிநிதிகள், மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் யாழ். அலுவலக அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ். வர்த்தக தொழிற்துறை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (த–ரி5)

## தாபரிப்புப் பணம் செலுத்தாதவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப்.19

கணவரால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த மனைவிக்குரிய தாபரிப்புப் பணத்தை தொடர்ச்சியாக செலுத்தாமல் வந்த கணவனுக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்தால் நேற்று ஒருவருட சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் மனைவி ஒருவரால் அவருடைய கணவருக்கு எதிராக தாபரிப்பு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. கணவர் தன்னை ஒழுங்காக பராமரிப்பதில்லை என்றும் தன்னோடு சேர்ந்து வாழ மறுப்பதாகவும் தெரிவித்தே தாபரிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் நீதிமன்றால் தாபரிப்பு தொகையாக ஏழாயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் கணவன் தொடர்சியாக பணத்தை ஒழுங்கான முறையில் செலுத்தாமல் இருந்ததுடன் அடிக்கடி நீதிமன்றத்திற்கு சமுகம் கொடுக்காமலும் இருந்து வந்துள்ளார்.

இவரால் மனைவிக்கு தாபரிப்புத் தொகையாக ஒன்றரை லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை செலுத்தப்படவேண்டியிருந்தது. நேற்று இவ்வழக்கு அழைக்கப்பட்டபோதும் கணவனால் தாபரிப்பு பணம் செலுத்தப்படவில்லை. இதனையடுத்து நீதிமன்றத்தால் இவருக்கு ஒருவருட சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ற–103)

## மாகாணப் பாடசாலைகள் மத்திய அரசின் கீழ்?

யாழ்ப்பாணம், செப். 19

மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளை தற்காலிகமாக மத்திய அரசின் கீழ் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டம் மற்றும் பல்வேறு வேலைத்திட்டங்களை சிறந்த முறையில் மேற்கொள்ளும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மாகாண முதலமைச்சர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமத்திய மாகாண சபை உறுப்பினர் கைது

கொழும்பு, செப்.19

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமத்திய மாகாண சபை உறுப்பினர் ஜிஜி.சந்திரசேன கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எஞ்சின் இலக்கம் மற்றும் நிறம் மாற்றி கெப் வாகனம் ஒன்றைப் பயன்படுத்தினார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தை மாகாண சபை உறுப்பினருக்கு விற்பனை செய்த பாணந்துறை – உடகஹாமுல்ல பிரதேச நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் ஹிங்குராகொட நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)




'ஊழல் பேர்வழிகள் சுதந்திரமாக நடமாட்டம். டீல் வேண்டாம். சட்டத்தை உடனடியாக அமுல்படுத்து.' என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் யாழ். குடாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியினரால் ஒட்டப்பட்டுள்ளன. புதிய ஆட்சியிலும் ஊழல் பேர்வழிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்று குறிப்பிட்டு இவர்களுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இத்துண்டுப் பிரசுரங்கள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.(ற–101)

# கலப்பு நீதிமன்றத்துக்கு இடமளிக்கவே கூடாது

### வலியுறுத்துகின்றார் அனுரகுமார



கொழும்பு, செப்.19

கலப்பு நீதிமன்றம் அமைக்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக் கூடாது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை குறித்த அறிக்கையில் "கலப்பு நீதிமன்றமொன்றை அமைப்பது குறித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நீதிமன்றம் அமைப்பது நாட்டின் அரசியல் அமைப்புக்கு புறம்பானது.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்களமொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும் இலங்கைக்கும் இடையிலான பிரகடனங்களின் அடிப்படையிலும் இவ்வாறு கலப்பு நீதிமன்றம் அமைக்க முடியாது.

ஜனாதிபதியும் பிரதமரும் முழு நாடாளுமன்றமும் நாட்டின் அரசமைப்பை பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர். எனவே எவருக்கும் அரசியல் அமைப்பை மீறிச் செயற்பட அனுமதியளிக்கப்பட மாட்டாது.

கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு பரிந்துரை செய்தமைக்கான காரணம், மகிந்த ராஜபக்ச அரசு நீதிமன்றை கைப்பொம்மையாக பயன்படுத்தியமையேயாகும். புதிய அரசு ஆட்சியில் இருப்பதால் இலங்கைக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். – என்று கூறியுள்ளார். (ற)

# நாட்டில் சட்டமா அதிபர் ஒருவர் இல்லை என்றே உணர்கின்றேன்

### அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, செப்.19

நாட்டில் சட்டமா அதிபர் ஒருவர் இல்லை என்பதனையே உணர்கின்றோம் என சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன், அவன்கார்ட் நிறுவனம் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் கிடையாது என கூறப்படுவதால் நாட்டில் சட்ட மா அதிபர் ஒருவர் இல்லை என்றே நான் உணர்கின்றேன். மேற்குறிப்பிட்ட நபர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அன்று சுமத்திய குற்றச்சாட்டுக்களை நான் இன்றும் சுமத்துகின்றேன். அந்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காக மூடிமறைக்க இடமளிக்கப்படமாட்டாது. ஆட்சி மாற்றத்தால் அனைத்து விடயங்களும் மாறவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு சேவகம் செய்து பதவிகளைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் தொடர்ந்தும் அந்தப் பதவிகளை வகித்து வருகின்றனர்.

இவ்வாறான அதிகாரிகளை பணி நீக்க அரசால் முடியவில்லை என்றபோதிலும், விரைவில் இந்த விடயம் குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டில் நல்லாட்சி காணப்படுவதால் ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கண்டு கொள்ளாத நிலைமை ஏற்படலாம்.

பணம் இருந்தால் நாட்டில் எதனையும் செய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எனினும், குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தி தண்டனை விதிக்கப்படும் வரையில் முயற்சிகள் தொடரும். – என்றார். (ற)

# கிழக்கு மா்காணத்தையும் கருத்தில் எடுத்து தமிழர் பிரச்சினை குறித்துப் பேச வேண்டும்

### வடக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவிப்பு

தமிழர்களின் தாயகம் தொடர்பிலோ அல்லது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாகவே பேச்சு முன்னெடுக்கப்படும்போது வடக்கின் தலைமைகளுடன் மட்டும் அல்லாது வடக்கின் தலைவர்களான எம்முடனேயே பேச வேண்டும் என இங்குள்ள சிலர் கூற முற்படுவது கிழக்கு மக்களுக்கு செய்யும் துரோகம் அல்லது அவர்களை மறந்த நிலை என்பதனை மறக்கக்கூடாது –இவ்வாறு வட மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கோப்பாய் கோமகன் வன்னிய சிங்கத்தின் 56ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் நீர்வேலி வாழைக் குழைச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

எமது நாட்டில் இடம்பெற்ற இனப் பிரச்சினை ஆகட்டும், இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்டது ஒட்டுமொத்த தமிழ்மக்களும்தான். குறிப்பாக வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ் மக்களும் இழப்புக்களைச் சந்தித்தனர்.

எண்ணிக்கைகள் அளவுகள் மாறுபடலாம். ஆனால் கிழக்கு மாகாண மக்களும் எம்மைப் போன்ற தியாகங்களைப் புரிந்து இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். எனவே தமிழ் மக் களின் பிரச்சினைகள் தொடர்பான பேச்சு மற்றும் சந்திப்புக்களின் போது வடக்குத் தலைவர்கள் மட்டும் பேச வேண்டும் என்றோ அல்லது வடக்குத் தலைமைகள் மட்டும் கலந்துகொள்ள வேண்டும் என்றோ எதிர்பார்க்கக் கூடாது. நாடாளுமன்றத்திலும் சரி மாகாண சபையிலும் சரி கிழக்கு மாகாணத்திலும் கூட்டமைப்பின் சார்பில் உள்ள பிரதிநிதிகளையும் கருத்திற்கொண்டு கருத்துக்களை வெளியிடுவதே பொருத்தமானது.– என்றார். (ற–101)

# இராணுவத்தினரின் கொடூரம் ஐ.நா. அறிக்கையில் அம்பலம்

### உலகத் தமிழர் பேரவை கூறுகிறது

லண்டன், செப் 19

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை விசாரணை அறிக்கைப் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை கோரியுள்ளது.

இந்த அறிக்கையின் மூலம் தமிழ் மக்கள், இலங்கை அரச படையினரால் எவ்வாறு துன்புறுத்தப்பட்டனர் என்பது அம்பலமாகியுள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித் துள்ளது.

பொதுமக்கள் வாழும் பகுதிகளில் எறிகணைத் தாக்குதல், பாலியல் வன்கொடுமை, சித்திரவதைகள், மனிதாபிமான உதவி மறுப்பு உள்ளிட்ட பல்வேறு வழிகளில் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர் என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

கலப்பு சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்து சர்வதேச நீதிவான்களின் பங்களிப்புடன் பூரண சுயாதீன அடிப்படையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

விசாரணைகள் மற்றும் தண்டனை விதித்தல் பொறிமுறைமையில் சர்வதேசத்தின் தலையீட்டை உறுதி செய்யும் வகையில் தீர்மானம் நிறை வேற்றப்பட வேண்டியது உறுப்பு நாடுகளின் பொறுப்பாகும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

விசாரணை அறிக்கையின் அனைத்துப் பரிந்துரைகளையும் முழுமையான அளவில் அமுல்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை அரசிடம் ஐ.நா. உறுப்பு நாடுகள் கோரவேண்டும் எனவும் உலகத் தமிழர் பேரவை மேலும் தெரிவித்துள்ளது. (த–சி)

# கோமகன் வன்னியசிங்கத்தின் 56ஆவது நினைவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.19


கோப்பாய் கோமகன் வன்னியசிங்கத்தின் 56ஆவது நினைவு தினம் நேற்றுமுன்தினம்தினம் நீர்வேலி வாழைக்குழை சங்க கட்டடத்தில் வட மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி தலைமையில் இடம் பெற்றது.

நினைவுச் சுடரேற்றலுடன் நிகழ்வு ஆரம்பித்தது. அதன்பின்னர் கோமகனின் உருவச்சிலைக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமானமாவை சேனாதிராசா மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மாலை அணிவித்து அக வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துடன் நினைவுக் கூட்டம் இடம் பெற்றது.

நிகழ்வின் இறுதியில் வன்னிய சிங்கத்தின் நினைவாக பாடசாலை மாணவர்களில். போக்குவரத்து நெருக்கடிப் பிரதேசத்தில் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (ற–101)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

**மேடம்**: குடும்ப வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவர். இல்லறத்துணை விரும்பிய பொருள்கள் வாங்கித் தருவீர்கள்.

**இடபம்**: வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் ரீதியான வெளியூர் பயணம் வெற்றி தரும். உடன் பிறந்தவர்களுக்குத்தேவையான உதவிகளைச் செய்வீர்கள். பிள்ளைகளின் செயலால் பெருமிதம் ஏற்படும்.

**மிதுனம்**: அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர விஷயத்தில் நாட்டம் செலுத்துவர். மாணவர்கள் பாதுகாப்புக் குறைந்த இடத்திற்குச் செல்வதைத் தவீர்க்கவும்.

**கடகம்**: நிதானத்துடன் இருந்தால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி இலாபம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். தாயின் ஆறுதற் பேச்சு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

**சிங்கம்**: தாராள மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்குத் தாய் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி**: பெற்றோரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழிலில் உற்பத்தியும், இலாபமும் மிதமான அளவில் இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**துலாம்**: இலட்சிய நோக்குடன் செயற்படுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**விருச்சிகம்**: பொறுமையுடன் செயற்பட்டால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**தனுசு**: எண்ணம் அனைத்தும் செயல் வடிவம் பெறும். அன்றாடப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை சிறக்கும்.

**மகரம்**: கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்பால் உயர்வு ஏற்படும். பெண்கள் வீட்டுச் செலவுக்குக் கடன் வாங்க நேரிடும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**கும்பம்**: பொறுப்பு, நாளுக்கு நாள் அதிகரிக்கும். தொழிலில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள், பிள்ளைகளின் நலன் குறித்து ஆலோசிப்பர். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்**: மாறுப்பட்ட கருத்து உள்ளவர்களிடம் இருந்து விலகுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

# இணையத்தை கலக்கும் கபாலி



ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்க ஒப்புக் கொண்ட படம் கபாலி . ராதிகா ஆப்தே, தன்ஷிகா, கலையரசன் உள்ளிட்ட பலர் ரஜினியுடன் இணைந்து நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்கள். சந்தோஷ் நாராயணன் இசையமைக்க இருக்கும் இந்தப் படத்தைத் தாணு தயாரிக்க இருக்கிறார். இந்தப் படத்தின் முதல் தோற்றப் போஸ்டர்கள் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட்டன. அந்தப் போஸ்டர்களில் உள்ள ரஜினியின் தோற்றம் அவருடைய ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது

படத்தில் ரஜினியின் தோற்றம் எப்படி இருக்கும்? இந்தக் கேள்வியை தங்களுக்குள் கேட்டுக் கொண்ட ரஜினி ரசிகர்கள் அனைவரும், இத்தனை நாட்களாக அதற்கான விடையையும் தாங்களே தேடித் திருப்திப்பட்டுக் கொண்டிருந்தனர் படம் அறிவித்த நாளிலிருந்து. இந்தப் படத்தைப் போல வேறு எந்தப் படத்துக்கும் ரசிகர்களால் உருவாக்கப்பட்ட ஒளிப்படங்கள் வெளியானதில்லை. ஒவ்வொரு ஒளிப்படமும் அத்தனை தொழில்முறை நேர்த்தியுடன் வந்தன. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட ஒளிப்படங்களை இரசிகர்கள் உருவாக்கி உள்ளனர். இந்த நிலையில் கடந்த புதன்கிழமை மாலை கபாலி படத்தின் முதல் தோற்ற ஒளிப்படங்கள் வெளிவிடப்பட்டு. பத்திரிகைளுக்கும் அனுப்பப்பட்டன. ரஜினியும் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த முதல் தோற்றப் போஸ்டர்களை வெளியிட்டுள்ளார். இந்த போஸ்டர்கள் வெளியான அடுத்த நொடியே திரையுலகம் காணாத அளவுக்கு பெரும் வரவேற்பைப் பெற்றன. இரசிகர்கள் எவரும் யோசிக்காத வகையில் முற்றிலும் வித்தியாசமாக இந்த ஒளிப்படங்கள் அமைந்து விட்டன.

இந்த ஒளிப்படங்கள் சமூக வலைத் தளங்களையும், பொது ஊடகங்களையும் கலக்கி வருகின்றன. டுவிட்டர், பேஸ்புக், வாட்ஸ்அப் போன்றவற்றில் பலரும் கபாலி ரஜினி போஸ்டரையே தங்கள் அடையாளப் படங்களாக மாற்றிக் கொண்டுள்ளனர். டுவிட்டரில் தொடர்ந்து இரு தினங்களாக உலகளவில் கபாலி பெயர். டிசைன்கள் வெளியான இரண்டாம் நாளில் கூட 33.5 ஆயிரம் டுவீட்கள் கபாலி பற்றியே இருந்தன. இதுவரை எந்தப் படத்தின் முதல் தோற்றத்துக்கும் கிடைக்காத வரவேற்பு இது. சர்வதேச அளவில் எந்த திரைப்படத்தின் முதல் தோற்றத்துக்கும் இப்படி ட்ரெண்டிங் ஆனதில்லை என தகவல் வெளியாகியுள்ளது.



# நிறுவனப் புலியார் என்ன ஒரு இறுமாப்பு..!

காட்டுக்குள் இருந்து வழி தவறி வந்த அந்தப் புலி, எப்படியோ அந்தத் தனியார் நிறுவனத்தின் ஓய்வு அறைக்குள் நுழைந்துவிட்டது. ஆளரவத்தில் அரண்டு மிரண்டு போன புலி, அந்த அறையின் ஓர் இருட்டு மூலையில் பதுங்கிக்கொண்டது.

மூன்று நாட்கள் மூச்சுக் காட்டாமல் இருந்த புலிக்கு, பசி வயிற்றைக் கிள்ளியது. நாலாவது நாள்... பசி தாங்க முடியாமல் ஓய்வு அறைக்குள் தனியாக வந்த ஓர் ஆளை அடித்துச் சாப்பிட்டது. அவர், அந்த நிறுவனத்தின் உதவி பொது முகாமையாளர். அவர் காணாமல் போனதைப்பற்றி அலுவலகத்தில் எவருக்கும் கவலை இல்லாததால், எந்த அதிர்வு நிகழ்வும் இல்லை. பயப்படும் படியாக எதுவும் நிகழவில்லை என்பதால் இரண்டு நாட்கள் கழித்து, இன்னும் ஒரு நபரை அடித்துச் சாப்பிட்டது புலி. அவர், அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளர். யாரும் அவரைத் தேடவும் இல்லை, காணவில்லையே என்று பதறவும் இல்லை. (சொல்லப்போனால் அவர் அலுவலகத்தில் இல்லையே என்று சந்தோஷப்பட்டவர்கள்தான் அதிகம்!)

பிரச்சினைகள் எதுவும் இல்லாத உற்சாகத்தில் அடுத்த நாள் அறைக்குள் மிடுக்காக வந்த நிறுவனத்தின் உபதலைவரை ஏப்பம்விட்டார் புலியார். நிறுவனத்தில் குண்டூசி விழுந்த சலனம்கூட இல்லை.

இதனால் குளிர்விட்டுப்போன புலியார் நாம் வசிக்க ஏற்ற இடம் இதுதான் என்று தீர்மானித்து அங்கேயே சொகுசாக இருப்பதற்கு முடிவுசெய்து. அடுத்த நாள் பசியே இல்லாவிட்டாலும் சும்மா இருக்கட்டுமே என்று இறுமாப்பில் ஒரு நபரை அடித்து மூர்ச்சையாக்கி, தனக்குப் பக்கத்தில் இருத்திக்கொண்டது. தேனீர் கோப்பைகளைக் கழுவ வந்த அந்த நபர்தான் அலுவலகத்தின் உதவியாள். தேனீர் வாங்கச் சென்ற உதவியாளைக் காணவில்லை என்று மொத்த அலுவலகமும் பதகளிப்பட்டு தேடுதல் வேட்டையைத் துவங்கியது. அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஓய்வு அறைக்குள் மூர்ச்சையாகிக்கிடந்த உதவியாளையும், தொடர்ந்து புலியையும் கண்டுபிடித்து விட்டார்கள். ஈற்றில் புலியை அடித்துத் துவைத்து கூண்டுக்குள் அடைத்து மிருகக்காட்சி சாலைக்கு அனுப்பி வைத்தார்கள்!

***நீதி உங்களுக்கான நட்பு அல்லது மரியாதையை நிர்ணயிப்பது உங்கள் பதவியோ, செல்வமோ அல்ல.***
***நீங்கள் மற்றவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே.***



உன் தலைமுடி இவ்வளவு நீளமா,
அடர்த்தியா இருக்கே எப்படி?
காலையிலே ஷம்பு போட்டுக் குளிப்பேன்....
சாயங்காலம் ஹேர் ஓயில் தடவுவேன்...
அப்போ நைட்டு...
கழட்டி ஆணியிலே மாட்டிடுவேன்.





உன் வாய்ப்புக்காகக்
காத்திரு
அப்படிக்
கிடைக்கையில்
வீரன் என்ற
சொல்லுக்கும்
வெற்றி என்ற
சொல்லுக்கும்
உண்மை அர்த்தத்தை
காட்டிவிடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உஷ்ணமடையும் நாடுகள் பட்டியலில் இலங்கையும்

## இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப்.19

பூமி உஷ்ணமடையும் நாடுகள் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்கியிருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக உஷ்ணமடைதல் அதிகரித்து வரும் 21 நாடுகள் தற்போது இனங்காணப்பட்டுள்ளன என்றும், அந்த 21 நாடுகளிடையே இலங்கையும் உள்ளது என்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவிக்கிறது.

இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, பிரதியமைச்சர் துனேஷ் கன்கந்த ஆகியோரின் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி மேற்படி அமைச்சில் இடம்பெற்ற நிறுவனத் தலைவர்களுடனான ஒரு நாள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை முகம் கொடுத்து வரும் 26 ஆபத்தான நிலைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன என்றும் அந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளப்பெருக்குகள், மண்சரிவுகள், வறட்சி, யானை மற்றும் மனிதர்களுக்கிடையிலான மோதல்கள் மற்றும் குடிதண்ணீரில் நஞ்சு கலத்தல் ஆகிய ஆபத்தான நிலைப்பாடுகள் அவற்றிடையே முன்னிலை வகிக்கின்றன என்று இது சம்பந்தமாக கருத்து வழங்கியிருந்த அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உஷ்ணம் அதிகரித்து வரும் 21 நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றமை எவ்வாறு என்பதும் மற்றும் அதற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள காரணிகள் எவை என்பது சம்பந்தமாக விரிவான ஆய்வு ஒன்று உடனடியாக மேற்கொள்ளப்பட்ட வேண்டியுள்ளது என்று அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா அந்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

2020 ஆண்டாகும்போது மாலை தீவு, கடலுக்குள் மூழ்கிவிடுமென்றும், அந்த மக்களை முழு உலக சமூகங்களும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்றும் உலகமய உஷ்ணம் சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ள ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-22)

# நாகர்கோயில் பகுதியில் மாதாந்தம் 580 லோட் மணல் அகழ அனுமதி

## வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பிரதேசத்தில் மாதாந்தம் 580 லோட் (டிராக்டர்) மணல் அகழ்வுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

ஏற்கனவே ஓகஸ்ட் மாதத்துக்கான 580 லோட் மணல் அகழப்பட்டுள்ளது என்றும் தற்போது செப்ரெம்பர் மாதத்துக்கான மணல் அகழப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அகழப்படும் மணல் இந்திய வீட்டுத் திட்டப் பணிக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் அவை பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

மாதாந்தம் 580 லோட் மணலுக்கு மேற்பட்ட மணல் அகழ் வுக்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, குடாநாட்டில் மணலுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் கட்டடப் பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மணல் இன்மையால் அனேகமான இடங்களில் கட்டடப் பணிக்கு பெருக்கன் மணலே (பாலியாறு மணல்) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பெருக்கன் மணல் அரிக்கப்பட்டு அதில் இருக்கும் சிறிய கற்கள் வேறாக்கப்பட்டு கட்டடப் பூச்சு வேலைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-17)

# சங்கானை, கொடிகாமம் சங்கங்களுக்கு புதிய இயக்குநர் சபைகள்

யாழ்ப்பாணம், செப். 19

சங்கானை மற்றும் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய இயக்குநர் சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சங்கங்களுக்கும் கிளைக்குழுத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அதன் ஊடாகப் பொதுச்சபை கூட்டப்பட்டுச் சங்கங்களுக்கான புதிய இயக்குநர் சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் தெரிவிததார்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவு கடந்த ஆறாம் திகதியும், கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை தெரிவு சென்ற 11ஆம் திகதியும் இடம்பெற்றன.

இந்த சங்கங்களின் புதிய இயக்குநர் சபைகள் உடனடியாகவே பதவியேற்றும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

# வனங்களுள் நுழையும் மாடுகளால் யானைகளுக்கு உணவுத் தட்டுப்பாடு

கொழும்பு, செப்.19

தேசிய வனங்களுக்குள் மாடுகள் உள்நுழைவது அந்த வனங்களில் வாழும் யானைகளின் உணவுத் தட்டுப்பாட்டுக்குக் காரணமாக அமைகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வஸ்கமுவ, மாதுரு ஓயா, லுணுகம் வெஹர மற்றும் மின்னேரியா போன்ற தேசிய வனங்களில் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட வளர்ப்பு மாடுகள் நடமாடுகின்றன என்று அகில இலங்கை வனஜீவ ராசிகள் கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் சங்கம் தெரிவிக்கிறது.

வளர்ப்பு மாடுகள் அந்த வனங்களுக்குள் உட்புகுந்து புல்வகைகளை அடியோடு மேய்வதால், காட்டு யானைகளுக்குத் தேவைப்படும் உணவுகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. புல்வகைகளில் குருத்து வந்ததன் பின்னர் அவற்றை உணவாகக் கொள்வதே யானைகளின் வழமையாகும். மாடுகளின் அடிமட்டம் வரையான மேய்ச்சலின் காரண மாக புல்வகைகளில் குருத்துக்கள் வராதிருப்பது காட்டு யானைகளின் உணவுத் தட்டுப்பாட்டுக்குக் காரண மாகின்றது என்று வனஜீவராசிகள் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

வளர்ப்பு மாடுகள் போன்றே உரிமையாளர்கள் அற்ற மாடுகளும் கூட இந்த வனங்களில் நடமாடுகின்றன என்றும் அந்த உத்தியோகத்தர்கள்சுட்டிக்காட்டுகின்றனர். (ற-22)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், செப்.19

அரியாலை சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு மன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி இ.தனுஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதாசிவம், தேசிய இளைஞர் சேவைக்கால மன்றப் பிரதிப்பணிப்பாளர் ஏ.தவேந்திரன், சரா புவனேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர் பு.தஜிதரன், பொறியியலாளர் பூரணச்சந்திரன், பொறியியலாளர் தயாபரன், த.தனதீரன், யோசெப் பாலா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-7)

# வைத்தியகலாநிதி அகிலேந்திரனின் இடமாற்றம் தற்போதைய நிலையில் ஏற்புடைய ஒன்றல்ல

## வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, செப்.19

மருத்துவ நிர்வாகத்துறை சார்ந்தவர்கள் எமது பிரதேசங்களில் இல்லாத நிலையில் வைத்திய கலாநிதி அகிலேந்திரனின் இட மாற்றம் தற்போதைய நிலையில் ஏற்புடைய ஒன்றல்ல என்று வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கு. அகிலேந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை நிறுத்த என்னாலான முயற்சியை மேற்கொள்வேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது என்று வெளியான தகவல் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பணிப்பாளர் அகிலேந்திரனுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது என்று நான் அறிந்திருந்தேன். இவ் இடமாற்றம் மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் ஓர் இட மாற்றமாகும். எனினும் வைத்தியசாலைக்கு சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்துறையைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் தற்போது இதற்குப் பெரும் வெற்றிடம் காணப்பட்டு வரும் நிலையில் மருத்துவத்துறையில் நிர்வாக அதிகாரியான வைத்திய கலாநிதி கு. அகிலேந்திரனை இவ்வாறு இடமாற்றம் செய்வது எமது பிரதேசங்களுக்கு பெரும் இழப்பாகும். – என்று அவர் குறிப்பிட்டார்.

வவுனியா வைத்தியசாலை இவருடைய காலத்தில் பல்துறையிலும் அபிவிருத்தி அடைந்து வருவதுடன் அவர் சிறந்த முகாமைத்துவத்தையும் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் அவருக்கு பணி இடமாற்றம் வழங்கப்படவுள்ளது என்று அறிந்திருந்தேன். எனினும் இடமாற்றத்தை நிறுத்துமாறு மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர்களுடன் கலந்துரையாடுவேன். சுகாதார அமைச்சருடனும் இதுகுறித்து எடுத்துக் கூறுவேன். – என்றார். (ற-402)


**கண்ணீர் அஞ்சலி**

என்றென்றும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராய் இருந்த

**திருமதி பொன்மலர் சிவகிரீடம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி மகாதேவன்(நல்லூர்), வன்னியசிங்கம் குடும்பம். (அவுஸ்திரேலியா)



**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

**சிவக்கொழுந்து சண்முகலிங்கம்**

பிறப்பு 02.10.1940

இறப்பு 19.09.2013

ஆண்டுகள் இரண்டு ஓடியது அப்பா!
நீங்கள் இன்னமும் எங்களுடன் தானப்பா
ஈராண்டுகள் சென்றால் என்னப்பா
ஈரேழு ஜென்மமும் நீங்கள் தான் எம் - அப்பா

**குடும்பத்தினர்.**

இராஜ வீதி, கோப்பாய் தெற்கு.



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

அமரர் **பராசக்தி குணரத்தினம்**

தோற்றம் 13.06.1945

மறைவு 20.08.2015



கடந்த 20.08.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் பராசக்தி குணரத்தினம் அவர்களின் இறப்புச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உடன் வந்து உதவி புரிந்த சகல நண்பர் களுக்கும், உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

மேலும் அன்னார் நோய்வாய்ப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவேளை அன்புடன் பராமரித்த வைத்திய நிபுணர், வைத்தியர்கள்,தாதியர்கள்,சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.09.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

44/2, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: Dr. சுரேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.19
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நடப்பாண்டுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவ, மாணவியர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் க.கமலசேகரம் கேட்டுக்கொண்டுள்ளார். (ற-ரி2)

# கல்முனை பழைய கல்விக் கந்தோர் வீதிக்கு வைத்தியர் எம். முருகேசப்பிள்ளையின் பெயர்

## கல்முனை மாநகரசபையில் தீர்மானம்

அம்பாறை, செப்.19
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் கல்முனைப் பிராந்தியத்தில் நாற்பது வருடங்களுக்கு மேல் மக்கள் அபிமானம் பெற்று வைத்திய சேவை ஆற்றியவருமான அமரர் வைத்திய கலாநிதி எம். முருகேசப்பிள்ளையை என்றும் நினைவு கூரும் வண்ணம் கல்முனை மாநகரிலுள்ள வீதியொன்றுக்கு அன்னாரது பெயர் சூட்டிக் கௌரவமளிக்கப்படவுள்ளது.
இதுகுறித்த பிரேரணை கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மேயர் சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்ற போது முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
மாநகரசபை பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஏ.எம்.றியாசினால் முன்மொழியப்பட்ட வீதிக்குப் பெயரிடல் தொடர்பான இந்தப் பிரேரணையின்படி அமரர் வைத்திய கலாநிதி எம்.முருகேசப்பிள்ளையின் பெயரை கல்முனையில் அவர் வசித்த பழைய கல்விக் கந்தோர் வீதி எனும் மணற்சேனை வீதிக்கு சூட்டுவதென ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
குறித்த பிரேரணையை சபையில் முன்மொழிந்து உறுப்பினர் ஏ.எம். றியாஸ் (பெஸ்டர்) உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் வைத்திய கலாநிதி எம்.முருகேசப்பிள்ளை வைத்திய சேவைக்காகக் கல்முனைக்கு வந்து நாற்பது வருடங்களுக்கு மேல் மக் கள் மனங்களை வென்றவராக வைத்திய சேவையைத் தொடர்ந்தார்.
வடக்கு–கிழக்கின் உறவுப் பாலமாகத் திகழ்ந்த அமரர் முருகேசப்பிள்ளை தாம் இங்கு வாழும் காலத்தில் தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே நல்லுறவை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன் சமாதான காவலனாகவும் திகழ்ந்தார்.
தன்னை நாடி வரும் வறிய மக்களுக்கு இலவச வைத்திய சேவையை வழங்கவும் தவறாத அமரர் முருகேசப்பிள்ளளையின் அளப்பரிய சேவைகளைப் பாராட்டி அன்னாருக்கு கல்முனை மாநகரில் பெரு விழா எடுத்து அவர் வாழும்போதே வாழ்த்திய வரலாறும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கதாகும்.
அன்னாரை என்றும் நினைவு கூரும் வண்ணம் கல்முனை மாநகரில் அவர் வசித்த கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் பழைய கல்விக் கந்தோர் வீதி எனும் மணற்சேனை வீதிக்கு அவரது பெயரைச் சூட்டி எமது மாநகரசபை கௌரவிக்க வேண்டுமென்ற பிரேரணையை முன்மொழிகின்றேன் – என்றார்.
மேயர் நிஸாம் காரியப்பர் உரையாற்றுகையில் இதுகுறித்துத் தெரிவித்ததாவது:–
கிழக்கு முஸ்லிம்களுடன் மிக நேசம் கொண்டு திகழ்ந்த அமரர் முருகேசப் பிள்ளையின் சேவைகள் என்றும் மறக்க முடியாதவை. கல்முனை மாநகர மேயரென்ற வகையில் இந்தப் பிரேரணையை பெரிதும் வரவேற்கின்றேன் – என்றார்.
பிரதிமேயர் ஏ.எல். அப்துல் மஜீத் இது குறித்துத் தெரிவிக்கையில்; வைத்தியத்துறையில் ஒரு தீர்க்கதரிசியாகத் திகழ்ந்த வைத்திய கலாநிதி முருகேசப்பிள்ளை எம் மத்தியில் பல்லாண்டு வாழ்ந்த பண்பாளராவார்.
முஸ்லிம் மக்களை மிகவும் நேசித்த அவர் சமூகங்களின் ஒற்றுமைக்காக உழைத்ததுடன் மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்புடன் மிக நெருக்கம் கொண்டவராகவும் திகழ்ந்தார். வீதிக்கு அவரது பெயர் சூட்டுவது மிகவும் பொருத்தமானது –என்றார்.
தமிழரசுக்கட்சி உறுப்பினர் வீ.கமலதாஸன் பிரேரணையை வழிமொழிந்ததுடன் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. உறுப்பினர் ஏ.ஏ.பசீர் உட்பட உறுப்பினர்கள் பலரும் பிரேரணை மீது உரையாற்றினர். (ற-30)

# நிறைகுறைந்த பாண் விற்பனை: பேக்கரி உரிமையாளருக்கு அபராதம்

சாவகச்சேரி, செப்.19
நிறை குறைந்த பாணை விற்பனைக்கு வைத்திருந்த நாவற்குழி பேக்கரி உரிமையாளருக்கும், திகதி காலாவதியான பிஸ்கெட்டை விற்பனைக்கு வைத்திருந்த வரணி வர்த்தகரொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை அபராதம் விதிக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் நடத்திய திடீர் பரிசோதனையின்போது நாவற்குழிப் பகுதியில் 402 கிராம் பாணை 450 கிராம் பாண் என விற்பனை செய்த பேக்கரி உரிமையாளருக்கும், வரணிப் பகுதியில் திகதி காலாவதியான பிஸ்கட்டை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகரொருவருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.
இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து பேக்கரி உரிமையாளருக்கு 9 ஆயிரம் ரூபாவும் வர்த்தகருக்கு 6 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ற)


# சர்வதேச கரையோர சுத்திகரிப்பு தின நிகழ்வுகள்

முல்லைத்தீவு, செப்.19
சர்வதேச கரையோர சுத்திகரிப்பு தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவிலுள்ள சாலை தொடங்கி கொக்கிளாய் வரையான கரையோரத்தில் 50 கிலோ மீற்றர் தூர கடற்கரை நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணி முதல் 11 மணி வரை சுத்திகரிப்புச் செய்யப்படவுள்ளது.
பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் , பொது மக்கள், இராணுவம், பொலிஸ் ஆகியோர் இணைந்து இந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.
பிரதான நிகழ்வு முல்லைத்தீவு மணற்குடியிருப்பு பகுதியில் மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-433)

# இலங்கைக்கு திரும்ப முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், செப் 19
இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சட்ட விரோதமாக வர முயன்ற ஒருவர் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த நபர் சிறுவயதாக இருக்கும்போது தனது பெற்றோருடன் இந்தியாவுக்குச் சென்றுள்ளார். அங்கு வளர்ந்து இலங்கைப் பெண் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார்.
இந்நிலையில் அவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பும் நோக்கில் படகில் வந்து மணல் திட்டு ஒன்றுக்கு அருகே சென்ற நிலையில் இலங்கைக் கடற்படையினர் குறித்த நபரைக் கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவரை பொலிஸார் மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர்.
அவர் சார்பில் சட்டத்தரணி பிறிமுஸ் சிராய்வா மன்றில் முன்னிலையாகியிருந்தார். ஆரம்ப விசாரணையின் பின்னர் நீதிமன்று அவரை ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவித்துள்ளது. அவர் தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-4)

# மரண அறிவித்தல்கள்



## கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற C.T.B.சாரதி)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, மந்துவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசரத்தினம் 16.09.2015 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவஸ்திகா (ஜேர்மனி), பகிரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம், நவரத்தினம், செல்வரத்தினம், ஜெயரட்ணம் மற்றும் இந்திராதேவி, புனிதவதி, அன்னலட்சுமி, வசந்தாதேவி, அருமைரத்தினம், பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காந்திகரனின் அன்பு மாமனும், கர்ணிகா,கபித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11 மணியளவில் இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.
021 205 04 67 (64663) (13.15)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தவமணி பஞ்சாட்சரம்

பிறப்பு 14.02.1944 இறப்பு 17.09.2015



பூநகரி ஞானிமடத்தினைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி பஞ்சாட்சரம் 17.09.2015 வியாழக்கிழமை மன்னாரில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின் னத்தங்கம் - சின்னத்தம்பி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற முருகேசு - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும், பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும், நவரத்தினம், செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,காலஞ்சென்ற தனபாலசிங்கம், அமிர்தினி (நிருபா - மன்னார்), கண்ணன் (பிரான்ஸ்), சுதாகர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், பாஸ்கரன்,பானுப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியும், லக்சினி, தக்சயா (மன் - சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் உள்ள மருமகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணியளவில் மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாஸ்கரன் அமிர்தினி (நிருபா)
இல.36/1, புதிய வீதி,
உப்புக்குளம் - மன்னார்.
தொடர்பு:077 979 9410 (64675) (13.15.17)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி மிரியம் பொன்மலர் சீவகிரீடம்



தோற்றம் 13.11.1935 மறைவு 17.09.2015

இல.41, கிறேக்கறீஸ் றோட், தெகிவளை, கொழும்பில் வசித்து வந்த திருமதி மிரியம் பொன்மலர் சீவகிரீடம் 17.09.2015 வியாழக்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் மகிமையடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான டானியல் கந்தையா - செல்லம்மா (ஆசிரியர் - செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு) தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா சீவகிரீடத்தின் அன்பு மனைவியும், மோகன் (U.K), மகிமலர் (இலங்கை), காலஞ்சென்ற சயந்தன் (கனடா) மற்றும் பாலன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், காந்திமதி, சச்சிதானந்தகுமார், பிரதீபா, தர்சி ஆகியோரின் அன்பு மாமியும், நிருபன், கடம், சுஜீவன், திலினி, அமிர்தன், றுவணி, டிசான், நயோமி, நியோரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அழகராஜா, தங்கராஜா, மற்றும் பூமலர் சந்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பெலா சின்னத்துரை, பரமானந்தம், அருளானந்தம் மற்றும், Dr.விவேகானந்தன், சத்தியதேவி பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 19.09.2015 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிவரை இல.41, கிறேக்கறீஸ் றோட், தெகிவளையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு பின்னர் 20.09.2015 கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 3.00 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று பி.ப 4.00 மணிக்கு கல்கிசை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சச்சி (இலங்கை) +94773918674, காந்திமதி (U.K) - +442076022356
பிரதீபா (கனடா) +19054724637, தர்சி (U.K) - +442086475228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரிடையே மோதல்: ஒருவர் படுகாயம்

வவுனியா, செப்.19

வவுனியா செட்டிகுளம் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலையில் மாணவர்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக மாணவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை பாடசாலை வகுப்பறைக்குச் சென்ற மாணவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் 14வயதுடைய மாணவன் சக மாணவனால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த மாணவன் சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய மாணவனை செட்டிகுளம் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இஸ்லாமிய கலைகள் சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்.சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் வட மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் ஹஜ் பெருநாளை முன்னிட்டுப் பாடசாலை மட்டத்தில்திறந்த சித்திரப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் அந்தந்த வலய மத்திய நிலையங்களில் இந்தப் போட்டிகள் இடம் பெறவுள்ளன என்று வட மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சித்திரப் போட்டிகளில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் இரு மாணவர்கள் பங்குபற்ற முடியும். போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி, யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, சாவகச் சேரி மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகிய மத்திய நிலையப் பாடசாலைகளில் இடம் பெறவுள்ளன. (ற-ரி2)


### தேவை

இங்கிலாந்து நொட்டிங்கத்திலுள்ள துர்க்கை அம்மன் கோயிலுக்கு உதவி அர்ச்சகர், தவில், நாதஸ்வரம் வாசிப்பவர்கள் (ஒரு சோடி) தேவை. ஆங்கில அறிவு மிக மிக முக்கியம்.

தொடர்பு : 0777732214, 00447525831901
Email - amvijay@yahoo.com

(60599.11.15)

### கல்வி வளர்ச்சி அறக்கட்டளை கிளிநொச்சி பணி நிலை வெற்றிடம்

கணக்கு பதியுநர் - ஒப்பந்த அடிப்படை

எமது நிறுவனத்தின் கணக்கு பதிவு வேலைகளை நிறைவேற்றக்கூடிய தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை - வணிகத்துறையில் பட்டப்படிப்பினை அல்லது டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து இருத்தல்.

அல்லது க.பொ.த/ உயர்தர வணிகத்துறையில் அனைத்துப் பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்று இருப்பதுடன் C தரத்துக்கு மேல் ஆங்கில கணினி அறிவு உள்ளவர்கள்.

வயது 21 - 35 வரை. சமூக சேவையில் விருப்பம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் - நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவிக்கு தகுதியானவர்கள் தயவு செய்து சுயவிவரத்தினை Biodata நேரில் எமது அலுவலகத்திலோ அல்லது தபால் மூலமாகவோ 03.10.2015 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய விலாசம்
தலைவர்
கல்வி வளர்ச்சி அறக்கட்டளை கிளிநொச்சி,
82A, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு
021 228 0205, 077 344 0834

(63508)(14.15.17)

### சேவைநலன் பாராட்டு

கொழும்பு கோட்டை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதான புகையிரத நிலையங்களில் பிரதம சார்ஜன்ற் ஆகத் தொடர்ந்து 35 வருடங்கள் சேவையாற்றி நாளை (20.09.2015)ஞாயிற்றுக்கிழமை ஓய்வு பெறும்

**அல்பிரட் குணரட்ணம்**

அவர்களின் நீண்டகால அர்ப்பணிப்புடனான சேவையைப் பாராட்டி நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
யாழ்ப்பாணம் பிரதம புகையிரத நிலைய அதிபர், நிலைய அதிபர்கள், உத்தியோகத்தர்கள், சக ஊழியர்கள்.

### பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர் கட்டாய சேமம் தொடர்பான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களாக 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொழில் புரிந்தவர்களில் இதுவரை தங்களின் கட்டாய சேமப்பணத்தினை மீளப்பெறாதவர்கள் தங்களின் சேமப்பணம் தொடர்பான விவரத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் உரியவர் நேரடியாக சமுகமளித்து பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர், பூநகரி.ப.தெ.வ.அ.கூ.சங்கம்
A- 32 வீதி, மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி. (64676)(14.15.17)

### நீ தோற்றுப் போனவனல்ல

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்"
யோவான் 14:06

கடைசி நாள்களில் 49 நாடுகளில் தேவன் வல்லமையாய் எடுத்துப் பாவிக்கும் **Apostle Daniel** யை வல்லமையான தீர்க்க தரிசன ஜெபங்களினால் தேவன் எடுத்துப் பாவிக்கிறார்.



அவரின் வல்லமையான ஜெபத்தால்
❖ வியாதி ❖ கட்டுக்கள்
❖ குடும்பப் பிரச்சினை ❖ தீராத பிரச்சினை
இவற்றில் இருந்து விடுதலையாகிக் கொண்டிருக்கும் ஜனங்களின் தொகை எண்ணற்றவை.

இதோ! உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
வருவீர் விடுதலை பெறுவீர்

காலம் :- 19.09.2015 சனிக்கிழமை பி.ப 4.00 மணி
20.09.2015 ஞாயிறு முற்பகல் 10.00 மணி

இடம் :- Church of Christ
மாம்பழம் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: Church of Christ - 021 222 6821, Bro Harish - 077 8544 133
Pastor Ravi - 077 940 5652, Sis. Ganga - 077 4766 875

(C18877)(10.15.17)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Lion German sheperd இன 2½ மாதம் நிரம்பிய black and brown நிறமுடைய 02 ஆண் நாய்க்குட்டிகள் உடனடி விற்பனைக்குண்டு. (சாவகச்சேரி, மீசாலை) தொடர்பு : 077 525 8639

(64723.11.15)

### ஆள்கள் தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு : சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(64750)(12.15.17)

### வைத்தியர் தேவை

பிரபல்யமான வைத்தியசாலைக்கு பல் டாக்டர் தேவை. தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : 311.ஜம்பட்டா வீதி,
கொட்டாஞ்சேனை.
011 2421 882

(64730)(12.15.17)

### மோட்டார் வாகனம் விற்பனைக்கு

NP.LD---- தொடர் இலக்கமுடைய TATA 207 Di, Diesel 2007 (Body open) Colour Red வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 540 2723
077 987 1686

(58539.11.15)

### Spoken English With Grammar

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பித்துத்தரப்படும்.

தொடர்பு : 077 814 3927

(64678)(13.15.17)

### மணமக்கள் தேவை

* 80 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 29½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 71 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 45½ பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகள் தேவை.
* 77 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 19 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 15½ பாவமுடைய அமெரிக்கா பிரஜா உரிமை பெற்ற ஆக்கிரெக் மணமகளுக்கு இஞ்சினியர் மணமகன் தேவை.
* 83 இல் பிறந்த 7இல் செவ்வாய் 33 பாவமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 74 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 37¾ பாவமுடைய அரசநிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
* 72இல் பிறந்த 3 இல் சூரியனும் செவ்வாயும் 9¼ பாவமுடைய அரசநிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலையடி,மூடமாவடி.
077 607 0862


### உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண சபை - முதலமைச்சரின் அமைச்சினால் நடத்தப்படும் புகைப்படப் போட்டி

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வட மாகாண சபையின் முதலமைச்சர் அமைச்சினால் நடத்தப்படுகின்ற புகைப்படப் போட்டி பற்றிய விளம்பரம் 05.09.2015 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இப்போட்டியின் இறுதித் திகதி 24.09.2015 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

போட்டி விதிமுறைகளுக்கும் விண்ணப்ப படிவத்தினை பெற்றுக் கொள்ளவும் வடமாகாண சபையின் இணையத்தளத்தினை (www.np.gov.lk) பார்வையிடவும். அல்லது 021 205 7114 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ளவும்.

இ. வரதீஸ்வரன்
செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு,
வடமாகாண சபை.

(10662)(14.15.17)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## கேள்வி அறிவித்தல் - 2015

2015ஆம் ஆண்டிற்கான சபை நிதியில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க் காணப்படும் வேலைக்கு பின்வரும் இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ. இல | வேலையின் விவரம் | வேண்டப் படும் தரம் | ஒப்பந்த காலம் | மதிப் பீட்டுத் தொகை (மில். ரூபா) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப் படாத கேள்விப் படிவ கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|---|
| 01 | பண்ணாகம் காளையடி வீதி புனரமைத்தல் வேலை | C9 அல்லது அதற்கு மேல் (Roads) | 02 மாதங்கள் | 0.624 | 6,250.00 | 1,000.00 |

கேள்விப்படிவம் வழங்கல் :- 21.09.2015 தொடக்கம் 05.10.2015 பி.ப 03.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றல் :- 06.10.2015 பி.ப 01.00 மணி வரை
கேள்வி திறத்தல் :- 06.10.2015 பி.ப 02.00 மணி

1. செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக கேள்விகளை கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப் பத்திர பணத்துடன் மீளளிக்கப்படாத 11% பெறுமதி சேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விகாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளித்தல் வேண்டும்.
6. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **"செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடல் வேண்டும். மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
19.09.2015

திருமதி.சாரதா உருத்திரசம்பவன்,
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(C18883)(10.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
29.07.1954



மறைவு
20.08.2015

## அமரர் கமலாதேவி சிவலிங்கம்

கடந்த 20.08.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், உள்நாடு வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.09.2015) சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்றுக் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(64709) (13.15)

நீருவத்தம்பை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.


# நினைவுத் தூபி திறப்பு விழா

நாகர்கோவிலில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களின் 20ஆம் ஆண்டு நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி திறப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யா/நாகர்கோவில், மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. 1995ஆம் ஆண்டு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் 23 மாணவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் நினைவாகவே இந்தத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ற-422)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியஅழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
22
10
1931



உதிர்வு
20
08
2015

## அமரர் மருதப்பு புரந்திருபசிங்கம்(மாவை அண்ணர்)

மாதம் ஒன்று ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது
மீண்டும் ஒருமுறை திருமுகம் காண உள்ளம்
கிடந்து பரிதவிக்கின்றது- எம்மைப் பிரிந்து
நீர் போனாலும் மனத்திலேயே
பசுமையாய்க் குடியிருக்கின்றீர்கள் அப்பா!

கடந்த 20.08.2015 சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.09.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.68, 6 ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.

# மணி விழா

வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அழகேஸ்வரசாமி ஸ்ரீகரனின் 60வது ஆண்டு மணிவிழா நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு யா/விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக் கழக ஓய்வு நிலை பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஸ்ரீநாதம் எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

(ற-422)

# நெஞ்சத்தில் நீங்கா நினைவுகளுடன் ஆண்டுகள் பதினைந்து

## அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



பதினைந்து ஆண்டுகள் உங்களைப்பிரிந்து
ஆறாத்துயரொடும் அழுதவிழிகளோடும்
தவிக்கின்றோம்.
எங்களுக்கு நிழல் தந்து அடைக்கலம் காத்த
ஆலமரம் நீங்கள்
உங்களைப் பிரிந்து அழுதோம், துடித்தோம்
ஆறுதலற்று அலைந்தோம்
உங்கள் ஞாபகமும், ஆசீர்வாதமும்
என்றும் எங்களை வழிநடத்தும் என்ற
நம்பிக்கையைச் சுமந்து
உங்கள் நினைவுகளுடன் நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
அன்புமனைவி, அருமைப்பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இல.02, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மலர்வு
1948.12.08

உதிர்வு
2000.09.19

(62947) (14,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிமுகமாகின்றது புதிய எல்.ஜீ. கிளாஸ் (LG Class..!)

கைத்தொலைபேசி சந்தையில் தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்துள்ள LG நிறுவனம் LG CLASS எனும் புதிய ஸ்மார்ட் கைத்தொலைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது. Android 5.1.1 Lollipop இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்தக் கைபேசி 5.7 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 1.5GHz வேகத்தில் செயல்படக் கூடிய Qualcomm Snapdragon 615 Proce ssor, பிரதான நினைவகமாக Qualcomm Snapdragon 615 Processor சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் கொண்டுள்ளது.

இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவற்கான கமெரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. எனினும் இதன் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

## புதிய வகை சவர் மூடி

வீட்டில் உள்ள டெட்டால் ஹேண்ட் வாஷ், ஏரியல், துணி துவைக்கும் சோப்பு, குளிக்கும் சோப்பு, சவர, பாத்திரம் தேய்க்கும் சோப்பு, பேஸ்ட், சாம்பு இவை எல்லாம் எமது தண்ணீர்ப் பயன்பாட்டை பலமடங்கு செலவு செய்ய வைக்கிறது. மேற்கூறிய பொருள்களில் அனேக பொருள்களை மூன்று நிறுவனங்கள் மட்டுமே உலக அளவில் விற்பனை செய்து வருகின்றன. இவற்றுள் குளிக்கப் பயன்படும் சவர் வழியே வரும் தண்ணீரை சுமார் 70 சதவீதம் வரை குறைத்து வழங்கும் புதிய வகை சவர் மூடி ஒன்றை நீபியா எனும் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த சவர் மூடி நிறுவனத்தில், ஆப்பிள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி Tim Cook, கூகுள் முன்னாள் தலைமை அதிகாரி Eric Schmidt போன்றோர் முதலீடு செய் துள் ளனர்.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள ஒவ்வொருவரும் இந்த வகை 'சவரை' பயன்படுத்திக் குளித்தால் ஒட்டு மொத்த ஐக்கிய அமெரிக்க நாட்டின் தண்ணீர் பயன்பாட்டில் 1.5 சதவீதம் குறையும் என இந்த நிறுவனம் தெரிவிக்கிறது.





## முற்றுமுழுதாக மின்சக்தியில் இயங்கும் உலகின் முதலாவது செயற்கைக்கோள்

ABS-3A எனும் செயற்கைக் கோள் முற்று முழுதாக மின்சக்தியில் இயங்கக்கூடிய உலகின் முதலாவது செயற்கைக்கோள் என Boeing நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தச் செயற்கைக் கோள், பேர்முடாவைத் தளமாகக் கொண்டுள்ள செயற்கைக்கோள் வலையமைப்பின் ஊடாக இயக்கப்படவுள்ளதுடன், தொலைக் காட்சி, இணையம் மற்றும் தொலைபேசிச் சேவை என்பவற்றை உலகெங்கும் வழங்குவதற்கு பயன்படுத்தப் படவுள்ளது. இதேவேளை முன்னைய செயற்கைக் கோள்கள் அனைத்தும் பெரும்பாலும் இரசாயன சக்தியில் இயங்கக் கூடியவையாகவும், அவற்றில் பகுதியாகவே மின் சக்தி பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் செயற்கைக் கோள் செனன் அயனை ( Xenon-Ion) அடிப்படையா கக் கொண்டு உருவாக்கப்படும் மின் சக்தியியல் இயங்கக் கூடியதாக இருப்பதுடன், இது இரசாயன சக்தியில் இயங்கும் செயற்கைக் கோள்களை விட 1000 மடங்கு வினைத்திறன் வாய்ந்தது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பயனுள்ள பல்வேறு அம்சங்களுடன் கிழக்கின் விவசாய எழுச்சிக் கண்காட்சி

### நேற்றுமுன்தினம் ஆரம்பமானது



திருகோணமலை, செப்.19

கிழக்கின் விவசாய எழுச்சிக் கண்காட்சியும், விற்ப னையும் மட்டக்களப்பு, சித்தாண்டி, வந்தாறுமூலை மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை ஆரம்பமானது.

கிழக்கு மாகாண விவசாயிகள், கைப்பணியாளர்கள், மீன் வளர்ப்போர், கால்நடை மற்றும் கோழி வளர்ப் போர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சியும் விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு விவசாயத் திணைக்கள விரிவாக்கற் பணிப்பாளர் ஆர். கோகுல தாஸன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சியும் விற்பனையும் தொடர்ந்து இன்று வரை காலை 9 மணிமுதல் இரவு 9.30 மணி வரை நடைபெறவுள்ளது.

புதிய நெல் இனங்கள் மற்றும் ஏனைய உப உணவுப் பயிர்கள். விவசாய இரசாயன மற்றும் பசளை வகை, விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திர வகை, உயிர்வாயு உற்பத்தி, பாற்பண்ணை முகாமைத்துவம், கால்நடைத் தீவனம் மற்றும் புல் உற்பத்தி, கோழி வளர்ப்பும் முட்டை உற்பத்தியும், மீன்பிடி உபகரணங் களும் செயற்பாடுகளும், அலங்கார மீன் வளர்ப்பு முறைகளும், கூட்டுறவுத்துறைச் செயற்பாடுகள், நவீன விவசாய நீர்ப்பாசனத் தொழிநுட்பங்கள் என்பன இந்தக் கண்காட்சியில் இடம்பிடித்துள்ளன.

மட்டக்களப்பு விவசாயத் திணைக்கள விரிவாக்கற் பணிப்பாளர் ஆர். கோகுல தாஸன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் விநியோக அமைச்சர் கே.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாளேந்திரன், அலிஸாஹிர் மௌலானா, ஆர்.துரைரெத்தினம் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ற)

## கிழக்கு வர்த்தகக் கண்காட்சி ஒக்ரோபர் முதலாம் திகதி

### மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது

அம்பாறை, செப்.19

கிழக்கு மாகாண வர்த்தகக் கண் காட்சி மற்றும் உலக சிறுவர் தினக் கொண்டாட்டம் என்பன எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடத்தப் படவுள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

சிறு கைத்தொழில் அமைச்சு, அம்பாறை மாவட்ட செயலாளர் காரியாலயம், அம்பாறை மாவட்ட வர்த்தக கைத்தொழில், விவசாய சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இவை நடத்தப்படவுள்ளன. அம்பாறை எச்.எம்.வீரசிங்க விளையாட்டரங்கில் பி.ப 2 மணியி லிருந்து இரவு 11 மணிவரை கண் காட்சியும் சிறுவர் தினக் கொண்டாட்டமும் நடைபெறவுள்ளன.

விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்து நிறுவனங் களும் இலங்கை மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிகள், கைத்தொழில் அபிவிருத்திச்சபை, அறு வடைக்கு பிந்திய தொழில் நுட்ப நிறுவனம், காணி ஆணையாளர் திணைக்களம், ஏற்று மதி அபிவிருத்திச்சபை, முதலீட்டுச் சபை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், இலங்கை பொறியியலாளர் ஆராய்ச்சி நிறு வனம், லக்சல, ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம், உணவு செயற்பாட்டா ளர் சங்கம், தொழில் பயிற்சி அதி காரசபை, பல்கலைக்கழகம், தேசிய செப்பமிடல் மத்திய நிலையம், தொழிலாளர் காரியாலயம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், அரச வர்த்தக நியாய சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, ஹிங்குரானை சீனி கைத் தொழில் நிலையம், நுகர்வோர் சம்பந்தமான அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியனவும் ஆடைகள், கட்டட சேவைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள், மின் உபகரணங் கள், விவசாய உப கரணங்கள், விசேட ஆலோ சனை சேவைகள் ஆகிய துறைகளில் இலங்கை யிலுள்ள முதன்மையான வர்த்தக நிறுவனங்களும் இந்த வர்த்தக கண்காட்சியில் பங்கெடுக்கவுள்ளன.

உலக சிறுவர் தினக் கொண்டாட்டத்துக்காக சிறார்களுக்காக நவீன விளையாட்டு விநோத நிகழ்வுகளுடன் போட்டி நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டி, சித்திரப் போட்டி, எல்லே, கரப்பந்து, வலைப் பந்து, கிரிக்கெட் போட்டிகள் ஆகியனவும் நடத்தப்பட்டு வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குவதற்கும் ஏற்பாட் டுக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.- என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ற)

## புத்தளம்- திருமலை வீதியில் புதிய பஸ் தரிப்பிடங்கள்

திருகோணமலை, செப்.19

திருகோணமலை,மொறவெவ பிரதேச சபையின் வேண்டுகோளுக்கிணங்க,ரிலைன்ஸ் அமைப்பால் பிரயாணிகளின் நலன் கருதி பஸ் தரிப்பிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச சபையின் செயலாளர் ஐ.ஜுட் ராஜசிங்க தெரிவித்தார்.

புத்தளம்-திருகோணமலை பிரதான வீதியில் ரொட்டவெவ தொடக்கம் பன்குளம் வரையான பகுதிகளில் அவை அமைக்கப்படுகின்றன என்றும், ஐந்து பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தரிப்பிடங்கள் விரைவில் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நேற்று முன்தினம் இந்தியாவில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டங்களின் சுவாரஷ்யக் காட்சிகள். (த–ரி4)

# விமானப் படைத்தளம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

## பாகிஸ்தானின் பெஷவாரில் சம்பவம் ஆறு இராணுவச் சிப்பாய்கள் சாவு



இஸ்லாமபாத் ,செப் .19,

பாகிஸ்தானின் பெஷவாரிலுள்ள விமானப்படைத் தளம் தாக்கப் பட்டதில், 6 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 2 பேர் காய மடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

துப்பாக்கி ஏந்திய 10 மர்ம நபர்கள் , காவலரைத் தாக்கிப் படாபர் விமானத்தளத்தினுள் நுழைந்தனர் என மேஜர் ஜெனரல் அசிம் பஜ்வா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், படையினரால் சுற்றிவளைக்கப்பட் டுத் தேடுதல் தேடுதல் நடத்தப்பட் டது. தாக்குதலுக்கான உடனடிப் பதில் தாக்குதலுக்கு இராணுவம் தயார் நிலையில் உள்ளது –என் றார்.

செய்தியாளருக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலில், பாகிஸ்தானிய தலி பான்கள் தாக்குதலுக்குப் பொறுப் புக் கூறியுள்ளனர். பெஷவார் அடிக்கடி தீவிரவாதிகளின் தக்கு தலுக் குட்படுவது குறிப்பிடத்தக்கது. தாலிபான் அமைப்பின் தற் கொலைப் படையினரால் இந்தத் தாக்குதல் நிழ்த்தப்பட்டது எனப் பாகிஸ் தானிய தலிபான்களின் ஊடகப் பேச் சாளர் முகமது குரசனி மின்னஞ் சலில் தெரிவித்துள்ளார். (த–ரி4)

## தோண்டி எடுக்கப்பட்டுள்ளது நெப்போலியன் எலுப்புக்கூடு



பிராங்போர்ட் , செப் .19,

ஜேர்மனியின் பிரங்போர்ட் நகரில் கட்டட வேலைக்காகத் தோண டப்பட்ட குழியில், நெப்போலியனின் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்த 200 வீரர்களின் எலும்புக்கூடுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் ஒன்று நெப்போலியனின் எலும்புக்கூடு என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

1813 ஆம் ஆண்டில் நெப்போலியனின் படைகள் ரஷ்யாவில் இருந்து பின்வாங்கியிருக்கலாம். அல்லது அவர்கள் போர்க்காயங்களாலோ , நோயினாலோ இறந்திருக்கலாம்.1813 ஆம் ஆண்டில் ஜேர்மனிக்கு அருகே நடைபெற்ற போர்களில், 15,000 சாவடைந்தனர்–என்றனர். எலும்புக்கூடுகள், நகரின் மேற்கு ரியோடில் ஹீம் மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. (த–ரி4)

## ஆப்கானில் ஐ.எஸ். பள்ளிகளை மூடியது

இஸ்லாமிய அரசு என்று தன்னை வர்ணித்துக்கொள்ளும் குழுவினர் ஆப்கானிஸ்தானின் கிழக்கே 30 பள்ளிக்கூடங்களை மூடிவிட்டனர் என்று ஆப்கானிஸ்தான் கல்வி அமைச்சு கூறுகிறது. நங்கர்ஹார் என்ற இந்த பாதிக்கப்பட்ட மாகா ணத்தில் கல்வி அமைச்சுக்காகக் குரல் கொடுக்கத்தக்க ஒருவர், இந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 57ஆக இருக்கும் என்று கூறினார். சுமார் 30,000 பள்ளி மாணவர்கள் வரை வகுப்புகளுக்குச் செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டிருப்ப தாக அவர் கூறினார். அவர்கள் அங்கு தலிபான் குழுவினருடன் மோத லில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் அவர்கள் அங்கு சுமார் 130 பேரைச் சிறைப் பிடித்தும் வைத்தி ருக்கிறார் கள் என்று செய்திகள் கூறுகின்றன. (த–ரி4)

## இந்தியாவுக்கு சுற்றுலா சென்ற அமெ.பெண் மீது வன்புணர்வு

இந்தியாவுக்குச் சுற்றுலா சென்ற அமெரிக்கப் பெண் பாலியல் வன்புணர் வுக்குஉட்படுத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

இந்திய , இமாச்சலப் பிரதேசத்தின் மலை வாசஸ்தலமான தர்மசா லாவுக்குச் சுற்றுலா சென்ற அமெரிக் கப் பெண்ணையே இருவர் பாலி யல் வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளனர். அமெரிக்காவின் கலிபோர்னியா வைச் சேர்ந்த அவர் முதல் முறை யாக இந்தியாவுக்கு வந்துள்ளார். கடந்த திங்கட்கிழமை இரவு சாப் பிட்டுவிட்டுத் தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு செல்லும் போது இந் தச் சம்பவம் இடம் பெற் றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்பொலிஸ்விசாரணை யில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:- 46 வயதான குறித்த அமெரிக்கப் பெண் சம்பவத்தன்று இரவு 9 மணிக்குச் சாப்பிடுவதற்காக வெளியே சென்று நள்ளிரவில் ஹோட்டலுக்கு வந்துகொண்டிருந்த போது 2 நபர் கள் அவரை இழுத்துச் சென்று போதை மருந்தைக் கொடுத் துள்ளனர். இதனை அடுத்து அவர் மயங்கி விழுந்துள்ளார். இதன்போதே அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்டதாகத் தெரிவித்துள்ளனர். சம்ப வம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் விசார ணைகள் இடம்பெற்றுவருகின்றன.(த)

## நீரிழிவால் அவதியுறும் 3 வயது சிறுமி

வொஷிங்டன் , செப் .19,

இரண்டாம் ரக நீரிழிவு நோய் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று வயதுச் சிறுமி பற்றி அமெரிக்க மருத்துவர்கள் பரிசிலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் சிறுவர், சிறுமியர் அதீத உடல் பருமனடைவது என்ற பிரச்சினை குறித்துப் புதிய கவலைகளைத் தோற்றுவித்துள்ளது. இந்தச் சிறுமி அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர். அந்தக் குழந் தையை மருத்துவர்களிடம் எடுத்துச் சென்றபோது, அதன் எடை 35 கிலோ வாக இருந்ததாம். உணவைக் குறைத்து, மேலதிக உடற்பயிற்சி மற்றும் மருந்துகள் மூலம் அக்குழந்தையின் இரத்தத்தில் இருந்த சீனியின் அளவு ஆறு மாதங்களுக்குப் பின்னர் இயல்பான நிலைக் குத் திரும்பி யதாம்.இந்த சம்பவம் நீரிழிவு நோய் குறித்த ஆய்வுக்கான ஐரோப்பியச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இந்த மாதம் விவாதிக்கப்படவுள்ளது. (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைக் கடவைகளை மூடியது குரோஷியா

## குடியேறிகளின் நெருக்கடியால்

பரிஸ், செப் .19,

மேற்கு ஐரோப்பாவைச் சென்றடைய முயற்சிக்கும் ஆயிரக்கணக்கான அகதிகள் மற்றும் குடியேறிகளின் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் திணறி வரும் குரோஷியா, சேர்பியாவுடனான தனது எல்லையில் எட்டு எல்லைக் கடவை மையங்களை மூடியுள்ளது.எல்லைப் பகுதிகளுக்குச் செல்லும் அந்தச் சாலைகள் மூடப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறுகின்றது. சேர்பியாவுடனான எல்லையில் உள்ள டொவார்னிக் ரயில் நிலையத்தில், கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேரைக் கலவரக் கட்டுப்பாட்டுப் பொலிசார் சுற்றிவளைத்து நிறுத்தியுள்ளனர். தலைநகர் ஸக்ரெப்பில் உள்ள நூற்றுக்கணக்கான குடியேறிகள், ஸ்லோவேனியா பக்கத்திலுள்ள பிரெகானா நகருக்குச் செல்லத் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர்.





அங்கு சென்றடைய ஆறு மணி நேரம் எடுக்கும் ஒரு நடை பயணத்தைப் பலரும் மேற்கொண்டுள்ளனர். அகதிகளுக்கு வழிவிடுவதா இல்லையா என்பதில், ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாடு நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருப்பதால், தாமதமாகிவிடும் என்ற பயத்தில், பலரும் தூங்காமலேகூடத் தொடர்ந்து நடப்பதாகச் சிரியாவிலிருந்து வெளியேறியுள்ள நபர் ஒருவர் ஊடகங்களுக்குக் கூறினார். (த–ரி4)

## நைஜீரியாவில் இருந்து 5 லட்சம் சிறார் தப்பினர்

அபுஜா, செப் 19

நைஜீரியாவில் கடந்த 5 மாதங்களில் இஸ்லாமியவாதக் குழுவான போகோ ஹராமின் தாக்குதலால் 5 லட்சம் சிறார்கள் தமது இருப்பிடங்களை விட்டுத் தப்பி ஓடியுள்ளதாக ஐ.நா. கூறியுள்ளது. இதன் மூலம்



நைஜீரியாவிலும், அண்டைய நாடுகளிலும் இருந்து தப்பி ஓடிய சிறார்களின் எண்ணிக்கை 14 லட்சமாக மாறியுள்ளது.

இவர்களில் அரைவாசிப் பேர் 5 வயதுக்கும் குறைவானவர்களாவர். பல்லாயிரக்கணக்கான சிறார்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் பள்ளிக் கூடங்களுக்குப் போவதில்லை. அவர்கள் முகாம்களில் வாழ்கிறார்கள். பலர் அண்மையில் கொலராவினால் பாதிக்கப்பட்டனர். (த–ரி4)




கடிகாரம் தயாரித்துப் பாடசாலைக்குக் கொண்டு சென்றவேளை அது வெடிகுண்டு எனத் தவறாக வழங்கப்பட்ட தகவலினால் கைது செய்யப்பட்ட சிறுவனைப் பற்றி, அமெரிக்க அதிபர் ஒபாமா டுவிட்டரில் இட்ட பதிவு இது. அத்துடன் அவர் சிறுவனைச் சந்தித்ததும் குறிப்பிடத்தக்கது.(த–ரி4)

## போலி முட்டைகளை தயார் செய்யும் சீனர்கள்





பீஜிங்,செப்.19

பிளாஸ்ரிக் அரிசியைத்தயாரித்து வந்த சீனர்கள் தற்போது போலியான கோழி முட்டைகளை உற்பத்திசெய்யத்தொடங்கி விட்டனர். போலிமுட்டை தயாரிக்க 7 விதமான ரசாயனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இரசாயனங்களைக் கலந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட மஞ்சள் கரு மோல்ட்டில் ஊற்றப்படுகிறது. மஞ்சள் கருவின் மேலே கல்சியம் கார்பனேட் மற்றும் சில ரசாயனங்கள் உதவியால் வெள்ளைக் கரு உருவாக்கப்படுகிறது.சற்று நேரத்தில் மஞ்சள் கருவைச் சுற்றி வெள்ளைப்பகுதி தயார். பின்னர் இது ஒரு மணி நேரம் காய வைக்கப்படுகிறது. பரபின் மெழுகில் தோய்த்தெடுக்கப்படும் போலி முட்டையின் மேல் செயற்கை ஓடு பொருத்தப்படுகிறது.

இந்தப் போலி முட்டை ஓடு, நிஜக் கோழி முட்டையின் ஓட்டைவிட எளிதாக உடையக் கூடியது.நிஜ முட்டைக்கும் போலி முட்டைக்கும் சுவையில் பெரிய வித்தியாசமில்லை என்று சொல்வதை விட போலி முட்டையின் சுவை அதிகமாக இருப்பதாகக் கூறுகிறார்கள்.அரை அவியல் தயார் செய்யும்போது மஞ்சள் கரு கொஞ்சம்கூடச் சிதறாமல் பந்து போல் முழுதாக நிமிர்ந்து நிற்கிறது. மேலும், வெள்ளைக்கரு பரவும் போது நுரையும் அதிகமாக எழுகிறது.போலி முட்டையை உண்பதால் உடலில் மெது மெதுவாக விஷம் ஏறுகிறது. இதன் விளைவுகள் மோசமாக இருக்கும் என்றும் உணவுத்துறை அறிவியலாளர்கள் எச்சரிக்கை விடுக்கிறார்கள். உணவுக் கலப்படம் மற்றும் போலி உணவுகளால் உடல் நலம் பாதிக்கப்பட்டு சீனாவில் இறப்பவர்கள் எண்ணிக்கை சமீப காலத்தில் அதிகரித்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. (த–ரி4)

## மக்கா ஹோட்டலில் பெரும் தீ விபத்து

### 1000 ஆசிய ஹஜ் யாத்திரிகர்கள் வெளியேற்றம்

இஸ்லாமியர்கள் சவுதி அரேபியாவிலுள்ள புனித மக்கா நகருக்குப் புனித ஹஜ் பயணம் மேற்கொள்கிறார் கள். இந்த ஆண்டுக்கான ஹஜ் யாத்திரை கடந்த 15 ஆம் திகதி தொடங்கியது. எனவே இதுவரை சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் மெக்கா நகருக்குச் சென்று அங்குள்ள ஹோட்டல்களில் தங்கியுள்ளனர்.இந்த நிலையில் மக்கா அருகேயுள்ள கஷிஸியா நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் நேற்று அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. ஹோட்டலின் 8ஆவது மாடியில் பயணிகள் தங்யிருந்த அறைக்கு வெளியே தீப்பிடித்தது. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன. தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த ஹோட்டலில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் தங்கியுள்ளனர். எனவே, அங்கிருந்து 1000 திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். (த–ரி4)

## உங்களிடமுள்ள திறமையை வெளிப்படுத்தத் தயங்காதீர்

### தவறுதலாக கைது செய்யப்பட்ட சிறுவனின் நம்பிக்கை வார்த்தைகள்

வொஷிங்டன், செப் .19,

விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் நமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று வெடிகுண்டு தயாரித்ததாகத் தவறுதலாகக் கைது செய்யப்பட்ட சிறுவன் தெரிவித்துள்ளான். அமெரிக்காவைச் சேர்ந்த அகமத் முகமது என்ற சிறுவன் தான் செய்த கடிகாரத்தை ஆசிரியரிடம் காண்பிப்பதற்காகப் பள்ளிக்கு எடுத்து சென்றுள்ளான்.

ஆனால் அதை வெடி குண்டு என்று நினைத்த பள்ளி நிர்வாகம் பொலிசாருக்குத் தகவல் அளித்தது. இதையடுத்து அந்த சிறுவன் கைது செய்யப்பட்டு பின்னர் உண்மை தெரிந்ததும் விடுவிக்கப்பட்டான். இந்த நிலையில் அகமத் முகமதுக்கு ஏராளமான மக்கள் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இந்தசம்பவம் குறித்து அகமத் முகமது பத்திரிகை[illegible]களிடம் கூறியதாவது, என் ஆசிரி[illegible]ரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக தான் நான் கடிகாரத்தை உருவாக்கினேன். ஆனால்



அவர் என்னை தவறுதலாகப் புரிந்து கொண்டார். இதனால் பொலிசாரால் கைது செய்யப்பட்டேன். தற்போது அந்தப் பள்ளியில் இருந்து வேறு பள்ளிக்கு இடம் மாறலாம் என்று கருதுகிறேன்.என்னைப் போல் ஆர்வம் உள்ள சிறுவர்களுக்கு உதவி செய்வதற்கு ஆர்வமாக இருக்கிறேன். எப்படிப்பட்ட விளைவுகள் [illegible] —என்றார். (த–ரி4)

## கண்ணிவெடிகள் அகன்ற மொசாம்பிக்

மொசாம்பிக், செப் .19,

மொசாம்பிக் நாட்டைப் பொறுத்த வரை அங்கு 1990 களின் ஆரம்பம் வரை நிலக்கண்ணி வெடிகளால் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளார்கள். அதன் பின்னர் அங்கு கண்ணிவெடி அகற்றுவதற்கான பெரிய திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இப்போதுதான் மொசாம்பிக் முற்றாகக் கண்ணிவெடி அகற்றப்பட்ட நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகில் மிகவும் மோசமாகக் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருந்த ஒரு நாடு இந்த அந்தஸ்தைப் பெறுவது இதுதான் முதல் தடவையாகும். (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம் அநியாயத்துவம் ஆகலாமா?

உடுவிலூர் கலா

ஆணாதிக்கம் உடல் உள ரீதியான வன்முறைகளாக உருவெடுத்து பலதரப்பட்ட பெண்களை ஆதிக்கம் செலுத்தத் தவறுவதில்லை. போதைக் கலாசாரம், வன்புணர்வு, கூட்டுவன்புணர்வு, கொலை, தற்கொலை என்பவற்றின் பின்னணியில் காரணகர்த்தாக்களாக ஆண்களே உள்ளனர். வித்தியா என்கிற அரும்பை உடலாலும் உள்ளத்தாலும் தொட்டுச் சாகடித்த ஆணாதிக்கம், அடுத்தொரு மாணவியான திவ்யாவின் உள்ளத்தைச் சாகடித்து தற்கொலைக்கு பலவந்தமாக தள்ளியுள்ளது. வவுனியா விபுலானந்தாக் கல்லூரி உயர்தர மாணவி திவ்யா, பாடசாலை அதிபரின் நடவடிக்கை காரணமாகத் தனது இலட்சியக்கனவுகள் யாவற்றையும் கிணற்று நீரில் கரைத்து விட்டு, பெற்றதாய், உடன்பிறப்புக் கள்ளை மட்டுமல்ல, இந்த உலகை விட்டே போய்விட்டாள்.

சமுதாயம் என்கிற கட்டடத்தின் பெரிய தூண்கள் மாணவச் செல்வங்களே. இந்தத் தூண்களை உருவாக்குகின்ற ஆசிரியப்பணி மிகவும் மகத்தானது, மேன்மையானது, ஆசிரியத்துவம் என்பது மாணவச் செல்வங்களின் உயிர்களோடும், உடல்களோடும் முழுமையாக தொடர்பு கொண்டுள்ளது. ஆசிரியத்துவத்தின் முழுமையான ஆளுமை மாணவர்களின் வளர்ச்சியின் பலமான அத்திபாரம், எழுச்சியுள்ள நேரிய சிந்தை கொண்ட கல்விச் சமுதாயத்தை செயற்றிறன் கொண்ட பரந்துபட்ட சேவை மனப்பான்மையுள்ள ஆசிரியத்துவத்தால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும். பல சிரமங்களையும் சவால்களையும் எதிர்நோக்குகின்ற ஆசிரியத்துவம், எந்த நிலையிலும் தனது தனித்துவத்தை இழக்கலாகாது. கல்வி தேடிப் பள்ளி சென்ற மாணவியை காவு கொண்டது ஆசிரியத்துவம் என்றால் இதனை எப்படி ஏற்றுக் கொள்வது? எப்படி ஜீரணிப்பது?

கணிதம் என்பது பெரும்பாலான மாணவர்களுக்கு எட்டாக்கனியே. கணித பாட சித்தியின்றி உயர்தரம் கற்கமுடியும் என்ற வரையறை கடந்த அரசின் ஆட்சியில் இருந்தது. கணிதபாடச் சித்தி இல்லை எனத் தெரிந்தும் விண்ணப்பத்தை அனுப்பியது பெரும் தவறல்லவா? அனுமதி அட்டை வந்தபின், அதனைக் கொடுக்காது திருப்பியனுப்பியதும், திவ்யா பலமுறை கெஞ்சியும் காதில் வாங்கிக் கொள்ளாது நடந்து கொண்டதும் பாரதூரமான, ஏற்றுக் கொள்ள இயலாத தவறல்லவா? எதிர்காலக் கனவுகள் பலவற்றைந் சுமந்து பாடசாலையை சுற்றி வந்த திவ்யா இன்று உயிருடன் இல்லை. விபுலானந்தாக் கல்லூரியின் உயிர்நாடியான அதிபர் அவளது அனுமதி அட்டையோடு விளையாடிய காரணத்தால் உயிரை மாய்த்து விட்டாள். ஒவ்வொரு மாணவரதும் உடல் உள ரீதியான பாதிப்புக்களுக்கும் விடயங்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டியது அதிபரது தலையாய கடமையாகும். அந்த வகையில் இன்று திவ்யாவின் கல்வி, வாழ்க்கை, உயிர் யாவற்றுக்கும் அதிபர் சொல்லப்போகும் பதில் என்ன? ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி முக்கியம். அதைவிட பிள்ளையின் உயிர் பெற்றோருக்கும் உடன் பிறப்புக்களுக்கும் முக்கியம் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

திவ்யா மீது அதிபருக்கு ஏதாவது பகையா? இல்லை பழிவாங்கும் நோக்கமா? உயிரைப் போக்கிக் கொள்ளும் அளவுக்கு பழிவாங்குவது எந்த வகையில் நியாயம்? பொறுப்புள்ள ஒரு பாடசாலை அதிபர் இப்படிச் செய்வது எவ்வளவு கொடூரமானது? தினசரி கையாள்கின்ற, பகிர்ந்தளிக்கின்ற ஆசிரியத்துவம் அதிபரின் பிடிவாதத்தால் திவ்யாவை சாவுக்குள் தள்ளி விட்டுள்ளது. கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை. திவ்யா அவரது மகளாக இருந்திருந்தால் தாங்குவாரா அவளது இழப்பை? தனது மகளுக்கு அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்றால், தன் பதவியின் பலத்தால் கல்வி அமைச்சின் சந்துபொந்து எல்லாம் புகுந்து இருப்பார் அல்லவா? எது எப்படி இருப்பினும் மாணவரை வழிநடத்த வேண்டிய ஆசிரியத்துவம் தன்னிலையினின்றும் இறங்கி திவ்யாவை வழியனுப்பி வைத்துள்ளது. மாணவரின் கல்விப்புலத்தில் ஆசிரியரின் சக்தி என்பது அன்போடும் இரக்கத்தோடும் இழையோடி இருக்க வேண்டுமே தவிர பாசக்கயிறை



வீசுவது என்பதை ஏற்கமுடியாதது.

உலக மயமாக்கலில் தொலைத் தொடர்பு சாதனங்களோடு நாளாந்தம் வலம் வருகின்றது மாணவர் சமூகம். திவ்யா அனுமதி அட்டை கிடைக்கவில்லை. உடனடியாக கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டிருக்கலாம். தொலைத் தொடர்பு வசதிகள் பல இருந்தும் தற்கொலையை முடிவாக்கிக் கொண்டமை திவ்யாவின் அறிவீனம். உரிய நடவடிக்கை எடுத்து பரீட்சைக்குத் தோற்றியிருக்கலாம். மனதை உடனே சோர்வு நிலைக்கு இட்டுச் சென்றதால் பலன் என்ன? திவ்யாவை நிரந்தரமாகப் பிரிந்துவிட்ட பெற்றோர், உடன்பிறப்புக்களின் இடைவெளியை எப்போதும் எவராலும் நிரப்ப முடியாது. கிருஷாந்தி, ஞானந்தி, வித்யா வரிசையில் திவ்யாவும் தற்போது இணைந்து விட்டாள்.

கல்வியமைச்சு கணிதபாடம் சம்பந்தமாகவும் பொறுப்பற்ற அதிபர், ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கணிதபாடம் காரணமாக எந்த ஒரு மாணவ மாணவிக்கும் வாழ்வியல் மாற்றங்களோ தற்கொலை மரணங்களோ ஏற்படக்கூடாது என்றால் தீர்வு ஒன்று காலத்தின் கட்டாயமாகின்றது. கணிதபாடம் இல்லா[ம]ல் கற்கும் விருப்பத்தோடு கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு மாற்றுக் கல்வி வழியொன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பரீட்சை எழுதமுடியவில்லையே என்பதால் தற்கொலை செய்து கொள்வது இலட்சியக் கனவில் தோற்றுவிட்ட மனநில என நான் உணர்கிறேன்.

ஆக, இனியாவது எம்மாணவர்களின் உடல், உள பிரச்சினைகள் குறித்து ஆசிரியத்துவம் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். மாணவர்களின் தற்கொலைக்கு முற்றுப்புள்ளியிட வேண்டும். திவ்யாவின் பெற்றோரின் கண்ணீருக்கு எவரால் பதில் சொல்ல முடியும்? கல்விச் சமூகம் ஒரு மாணவியின் உயிரைக் காவு கொண்டு விட்டது என்பதே உண்மை.

# புதிய லங்கம் இல்லம் ஆரம்பம்

லங்கெம் சிலோன் பி.எல்.சி. நிறுவனமானது இல.46/56, நவம் மாவத்தை, கொழும்பு -2 என்ற முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்துக்கு சொந்தமான கட்டடத் தொகுதிக்கு அண்மையில் இடம் மாறியுள்ளது. 30,000 சதுரஅடி பரப்பளவு கொண்ட இந்தப் புதிய அலுவலகக் கட்டடத்தொகுதியானது, நிறுவனத்துக்கு இலாபம் ஈட்டித் தரும் பல்வேறு செயற்பாட்டு நிலையங்களை ஒரே அமைவிடத்தில் ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கான வசதியை முதல் தடவையாக வழங்குகின்றது.



கொழும்பின் வர்த்தக ரீதியான கேந்திர மையத்துக்கு நிறுவனத்தின் தொழிற்பாடுகளை இடம் மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, இலங்கையின் மிகப் பெரியதும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து செல்வதுமான கைத்தொழில் சார் கூட்டு நிறுவனமாக திகழும் லங்கம் தனது தோற்றப்பாட்டை மேலும் பலப்படுத்துவதற்கு உதவியாக அமையும்.

குழுமத்தின் வணிகப் பிரிவுகளானது – பயிர் பாதுகாப்பு, வர்ணப்பூச் சுக்கள், கைத்தொழில், கனிப்பொருள், நுகர்வோர் மற்றும் அதனது ஆதர வுச் சேவைகள் பிரிவுகளாக காணப் படும் தகவல் தொழில்நுட்பம், மனித வளம், வணிகம், நிதி, இணக்கப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பிரிவுகளில் மொத்தமாக கடமையாற்றும் 300 ஊழியர்களும் தற்போது புதிய [illegible] தொகுதியினுள் இருந்தவாறே பணியாற்றுகின்றனர். மேலும் இரு துணை நிறு வனங்களின் தொழிற்பாடுகளை [illegible] மாற்றியமைக்கவுள்ளது.

"பல்வகை கூட்டுநிறுவன துறையிலே மிக வேகமாக முன்னேறிச் செல்லும் ஒரு செயற்பாட்டாளராக லங்கெம் சிலோன் பி.எல்.சி. காணப்படுகின்றது. லங்கெம் குடும்பம் ஆனது இலங்கையில் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக பெறுமதியை கட்டியெழுப்பியுள்ளதுடன், செல்வத்தையும் உருவாக்கியிருக்கின்றது. முக்கியமான ஒன்பது கைத்தொழில் துறைகளில் செயலாற்றும் இருபத்தைந்து துணை நிறுவனங்களை உள்ளடக்கியதாக அதனது முதலீடுகள் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. அந்த வகையில் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் துறைகளில் முன்னணியில் திகழ்வதற்காக துணை நிறுவனங்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன" என்று லங்கெம் சிலோன் பி.எல்.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுஸ்மன் ராஜரத்னம் தெரிவித்தார்.

லங்கெம் ஆனது 1964ஆம் ஆண்டு "ரோயல் டச் ஷெல்" இனால் ஒரு விவசாய இரசாயன வர்த்தக நிறுவனமாக உருவாக்கப்பட்டது. கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக அதனுடன் தொடர்புபட்ட ஏனைய பல வர்த்தக துறைகளுக்குள் நுழைந்ததன் மூலம் லங்கெம் தனது வர்த்தகத்தை பல்வகைப்படுத்தி இருக்கின்றது. லங்கெம் நிறுவனத்தின் பயிர் பாதுகாப்பு, உற்பத்திகள், வர்ணப்பூச்சு (பெயின்ட்) வகைகள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் போன்றவை சம்பந்தப்பட்ட கைத்தொழில் துறைகளில் முன்னணி வகிக்கும் புதிய உற்பத்தி உருவாக்கங்களாக காணப்படுகின்றன.

லங்கெம் நுகர்வோர் உற்பத்திகள் பிரிவானது நுளம்புச் சுருள்கள், சலவை இயந்திரங்களுக்கான சலவைத் தூள்கள் மற்றும் திரவ வடிவிலான சலவை உற்பத்திகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதில் இலங்கையில் முன்னோடியாக திகழ்கின்றது. இன்று லங்கெம் நுகர்வோர் உற்பத்திகள் அனைத்தும் நாடு முழுவதிலும் உள்ள வீடுகளில் பயன்படுத்தப்படும் வர்த்தக நாமமாக காணப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு சி.டபள்யூ. மெக்கி நிறுவனத்தை கையகப்படுத்தியதன் ஊடாக FMCG துறையிலான தனது பிரசன்னத்தை லங்கெம் மேலும் பலப்படுத்தியது. கம்பனி பெருந் தோட்ட துறையின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட தனது முதற்தர இறப்பர் உற்பத்திகளுக்கான இறப்பர் பதப்படுத்தல் நிபுணத்துவம் மற்றும் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனைய நிறு வன ஒன்றிணைப்பு மற்றும் கையகப்படுத்தல் நடவடிக்கைகளுள் – ஜேஎஃப். பெக்கேஜிங் (இலங்கையின் நெகிழ்வுத் தன்மையுள்ள பொதியிடல் துறையில் ஒரு முன்னோடி நிறுவனம்), யூனியன் கொமோடிற்றீஸ் (தேயிலை தரகர்கள்) மற்றும் சிலோன் டேப்ஸ் போன்றன உள்ளடங்கும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கிலியன் சிலைக்கு அவமானம் தமிழர்கள் தொடர்ந்து பொறுமை காப்பு

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள மன்னன் சங்கிலியனின் சிலையில் காணப்படும் வாளில் குளிர்பான நிறுவனமொன்று விளம்பரம் ஒன்றைப் பொருத்தியுள்ளமை தொடர்பாக வெளிவந்த செய்திகளும், படங்களும் தமிழ் மக்களிடையே கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன.

யாழ்ப்பாணத்தை இறுதியாக அரசாண்ட தமிழ் மன்னனான சங்கிலியன் தமிழர்களின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த ஒருவர் தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படுபவர். குதிரையில் அமர்ந்தவாறு கையில் வாள் ஏந்திய நிலையில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் சங்கிலியனின் சிலை காண்போரைப் பரவசப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்த நிலையில் குளிர்பான நிறுவனமொன்று தமிழர்களை அவமானப்படுத்தும் விதமாக விளம்பரம் ஒன்றைச் சங்கிலியனின் கையிலுள்ள வாளில் பொருத்தியுள்ளமை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. ஆனால் எம்மால் அதனைப் படம் பிடித்துப் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு மட்டுமே முடிகின்றது.

சங்கிலிய மன்னனின் சிலைக்குப் பொறுப்பாகவுள்ள யாழ்.மாநகரசபை, குறித்த குளிர்பான நிறுவனத்துக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிவதற்கு மக்கள் ஆவலாக இருக்கின்றார்கள்.

மேலும் வடமாகாண சபை இதில் உடனடியாகத் தலையிடுவதுடன் அந்த விளம்பரத்தை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழர்கள் எதிலும் இளக்காரமானவர்கள் என்ற துணிவுடன் சங்கிலிய மன்னனின் சிலையை இழிவுபடுத்திய அந்தக் குளிர்பான நிறுவனத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

இதை விடுத்து நாம் மௌனமாக இருப்போமாயின் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறத்தான் போகின்றன.

**சி.யசோதை,**
நாயன்மார்கட்டு.

## அபிவிருத்தியைக் காணாத பிரதேசம்


வலிகாமம் தென்மேற்குப் பிரதேசம் வடக்கே மாதகல் தொடக்கம் தெற்கே காக்கைதீவு வரை பரந்த பிரதேசமாக அமைந்துள்ளது. இந்தப் பிரதேசம் 1995 ஆம் ஆண்டும் அதற்குப் பின்பும் குறிப்பாக முன்னோக்கிப் பாய்தல் என்ற இராணுவ நடவடிக்கையின்போது, பாதிக்கப்பட்டது. வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளுமைக்குட்பட்ட இந்தப் பிரதேசம் அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் மிகவும் குன்றிய நிலையில் உள்ளது. இந்தப் பிரதேச சபையில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஒருவர் பின் ஒருவராக மூன்று தவிசாளர்களும் மூன்று செயலாளர்களும் கடமை செய்துள்ளார்கள். 2012 ஆம் ஆண்டு தொடக்கம் பாதீட்டில் முன்னுரிமைப்படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் இன்றுவரை திருத்தம் செய்யப்படாமல் உள்ளன. மயானங்கள் பற்றைகளாகவும், வீதிகளுக்கு வெளிச்சம் போடாததனால் இருட்டில் நடமாட வேண்டியுள்ளதாலும் மக்கள் சொல்லொணாக் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். இவைகளை நிவர்த்தி செய்ய பிரதேசசபை தீர்மானங்களை நிறைவேற்றியும் நிதிக்குழு அங்கீகரித்தும் இன்றுவரை எதுவுமே நடைபெறவில்லை. காரணம் கேட்டால் நிதியில்லை என்று கூறப்படுகிறது. முத்திரை வரிப்பணம் நிரந்தர வைப்பில் உள்ளதை மீளப்பெற்று அபிவிருத்தி செய்ய சபை ஏகமனதாகத் தீர்மானம் செய்தும் அதற்கு அனுமதி கோரி வடமாகாண முதலமைச்சருக்குச் செயலாளர் கடிதம் இருமுறை அனுப்பியும் இன்னும் பதில்வரவில்லை எனக் கூறப்படு கிறது. மழைகாலம் ஆரம்பமாகப் போகிறது. வீதிகள் திருத்தம் செய்யாவிடில் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கவுள்ளார்கள்.

அரச நிர்வாகங்கள் ஆமை வேகத்தில் செயற்பட்டால் அபிவிருத்தி என்பதும் நல்லாட்சி என்பதும் வெறும் கேலிக் கூத்தாகும். ஆகவே வடமாகாண முதலமைச்சர் வலி.தென்மேற்குப் பிரதேச அபிவிருத்தி இதுவரை நடைபெறாத காரணங்களைத் தீர விசாரித்துத் திருத்தப்படாத வீதிகள் மழைகாலத்துக்கு முன்பு திருத்தம் செய்யப்பட்டு மக்களின் கஷ்டங்களைப் போக்க வேண்டுகிறோம்.

**– ஆ.சி.கணேசவேல் J.P,**
*ஆனைக்கோட்டை,*




## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# மறந்து போன மனிதநேயம்

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுக் கழுத்து நெரிக்கப்பட்டு 5 வயதுச் சிறுமி கொலை செய்யப்பட்டு ஒரு வாரம் நாளையுடன் முடிவடைகின்றது. இந்தக் குரூரத்தை மேற்கொண்டவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவர் மீது வழக்கு விசாரணை நடைபெறும். அத்துடன் இந்த விடயமும் மறந்து விடப்படும்.

இன்னும் மூன்று அல்லது நான்கு மாதங்களின் பின்னர் மீண்டும் இதே போன்றதொரு சம்பவம் நடக்கும். அந்தச் சம்பவமும் ஒரு வாரத்துக்குப் பேசு பொருளாக இருக்கும். பின்னர் மறக்கப்பட்டு விடும். இது தொடர் - கோர்வையாக நடக்கின்றது.

கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு மாணவி, ஒருவரும் இவ்வாறு குரூரமாக வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம், ஓர் அதிர்வலையை உருவாக்கியிருந்தது. அது யாழ்ப்பாணம் என்ற எல்லையைத் தாண்டி வடக்கு - கிழக்கு என்று விரிவடைந்தது. புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்காக, ஒட்டுமொத்த இலங்கையும் இன - மொழி - மத பேதமின்றி திரண்டது.

தென்பகுதியில் பெரும்பான்மையினத்தவர்கள் கூட வித்தியாவின் படுகொலைக்காக நீதி வேண்டிப் போராடினார்கள். தொடர்ச்சியாக நடந்த இந்தப் போராட்டம், யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதலுடன் திசைமாறியது. அதன் பின்னர், போராட்டம் மௌனிக்கப்பட்டது.

தற்போது கம்பஹா மாவட்டத்தில் 5 வயதுச் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தேப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதற்காக தெற்கில் குரல்கள் ஒலிக்கின்றபோதும், வடக்கிலிருந்து எந்தக் குரலும் எழுப்பப்படவில்லை. பெண்கள் அமைப்புக்கள் கூட, இழுத்து மூடிப் படுத்துறங்குகின்ற நிலையிலேயே இருக்கின்றன. பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக இன - மொழி - மத பேதங்களைக் கடந்து குரல் கொடுக்க வேண்டும். புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு தென்பகுதி மக்களால் குரல் கொடுக்கக் கூடியதாக இருந்தால், கம்பஹா சிறுமியின் படுகொலைக்கு வடக்கு மக்களால் ஏன் குரல் கொடுக்க முடியாது. குரல்கள் பலமாக ஓங்கி ஒலிக்கின்றபோதுதான், இனிமேலாவது இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்ற முடிவுகளை அரசுகள் மேற்கொள்ளும்.

தண்டனை மீது பயமிருந்தால்தான், தப்புக்கள் - தவறுகள் குறையும். 2005 ஆம் ஆண்டு வெளிவந்த அந்நியன் திரைப்படத்தை யாரும் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். 'தப்பு என்ன பனியன் சைஸா ? சின்னது பெரிசு என்று வேறுபடுத்திப் பார்க்க. தண்டனை கிடைக்கும், தண்டனை மீது பயமிருந்தா எவனும் தப்பு பண்ண மாட்டான்' என்று நடிகர் விக்ரம் அந்தப் படத்தில் இவ்வாறு பேசியிருப்பார்.

உண்மையில், துஷ்பிரயோகம் - வன்புணர்வு மீதான தண்டனை என்பது, இன்னொருவரை அவ்வாறு செய்வதை எண்ணுவதற்கே பயப்படும் அளவுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் இத்தகைய குற்றங்களை ஓரளவுக்காவது குறைக்க முடியும்.

இல்லையேல், கடந்த மே மாதம் புங்குடுதீவில், செப்ரெம்பர் மாதம் கம்பஹாவில், அடுத்து எங்கே ? என்று தொடர்ந்து கொண்டிருக்கும். மேலும், இந்த விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் ஓரணியில் திரண்டு குரல் எழுப்ப வேண்டும்.

புங்குடுதீவு மாணவிக்காக எல்லைகள் கடந்து குரல் எழுப்பப்பட்டது போன்று, கம்பஹா சிறுமிக்காகவும் எல்லைகள் கடந்து குரல் எழுப்பப்பட வேண்டும். மகளிர் அமைப்புக்கள், வெறுமனே மகளிர் தினத்தைக் கொண்டாடுவதுடன் மாத்திரம் நின்று கொண்டிராமல், இதற்கு எதிரான தண்டனை கடுமையாக்கப்பட வேண்டும் என்ற கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

ஒட்டுமொத்த மக்களையும் திரட்டிக் கையெழுத்துப் போராட்டத்தை நடத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து, சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துன்புறுத்தல்களுக்குக் கடுமையான தண்டனையை அறிமுகப்படுத்தவேண்டும். இதனைச் செய்வார்களா? அல்லது அடுத்த சம்பவம் நடக்கும் வரை காத்திருப்பார்களா ?

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர் இடரால் பாதிப்புற்ற எமது மக்களை மறந்து விடாதீர்!

இலங்கை அரசின், அதனைச் சூழ்ந்து பல்வகை நலன்களை அனுபவித்த பிரகிருதிகளின், மனித நேயத்துக்கும் மனித உரிமைகளுக்கும் விரோதமான அட்டூழியங்களைப் புரிந்த அரச பிரகிருதிகளின், பொட்டுக்கேடுகள் இப்போது அனைத்துலகுக்கும் அம்பலமாகிவிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை நேற்றுமுன்தினம் வெளிவந்த கையோடு, கொழும்பு அரசின் ஓர்மம் ஒடுங்கிப்போய் விட்டது.

அந்த அறிக்கை வெளியான நிமிடம் முதல் (இப்போதைய) கொழும்பு அரசு, உள்ளூர ஆடிப் போய் நிற்கிறது. அனைத்துலக மட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட உள்நாட்டு விசாரணையே தேவை என்று அது அடம்பிடித்துக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் இருபத்தி நான்காம் நாள், தீர்மானம் குறித்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட உள்ளன. அதனை முன்னிறுத்தி, தமிழர் அரசியல் தலைமைகள் தமது வீட்டு வேலையை (Home Work) செம்மையாகவும், மக்கள் நலன் நாடியும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமையும் அவர்களினது கைகளிலேயே தங்கியுள்ளன. அதனைத் தவறாது நிறைவேற்ற அவர்கள் மனம் கொள்ள வேண்டும்.

இது குறித்து ஒருமித்த கருத்துடன், ஆக்கபூர்வமான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். நான் சொல்வதே சரி, நீ சொல்வது உரிய பயன் தராது என்று அரசியல் குத்து வெட்டுகளில் ஈடுபடக் கூடாது.

தமக்கிடையே உள்ள அரசியல் சார் பேதங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, மனிதாபி மானத்தை மிதித்துக் கொண்டு கொழும்பு அரசுகள் நடத்திய போரை, அதன் விளைவுகளை ஒரே குரலில் - தொனியில் அனைத்துலகத்துக்கு அக்குவேறு ஆணிவேறாகப் புட்டுக் காட்ட வேண்டிய வேளை இது.

குறுகிய அரசியல் சுயலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்பட வேண்டும் என்பதை நெஞ்சிருத்திச் செயற்பட வேண்டியவேளை இது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு விடிவு காலம் பிறப்பதற்கான நல்லதோர் சந்தர்ப்பத்தை நழுவ விடலாகாது. அதனை ஊன்றி உணர்ந்து, ஆக்கபூர்வமான நகர்வுகளை ஒரு மனப்பட்டு முன்னெடுங்கள்.

குறை சொல்வதாகக் கொள்ளாதீர்கள். ஏனைய விவகாரங்கள், விடயங்களில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவது போன்று, கன்னை பிரிந்து செயற்படும் தன்மையை நீங்கள் அனைவரும் புறம் ஒதுக்க வேண்டும். தமிழ் மக்கள் சார்பிலான நலன் நாடி, முழு மனதுடன் செயற்பட வேண்டிய வேளை இது.

மறுதரப்புகளை தூற்றும் எண்ணம் இது விடயத்தில் கவ்வைக்கும் உதவாது.

தமிழர் தரப்பின் தலைமைகள் தம்மைத் தாமே போற்றுவதும், அடுத்த சாரார்களை மட்டம் தட்டுவதும் அவர்களின் மரபணுவில் நிறைந்து, பொதிந்து கிடக்கின்றதோ என்று சந்தேகிக்க வைக்கும் போக்கு வேண்டாமே!

பாதிப்புற்ற எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கையே தாரக மந்திரம் ஆக்கிச் செயற்பட வேண்டிய வேளை இது.

கறுவிக் கொள்ளாதீர்கள்! ஒரு தரப்பினரை மறுதரப்பினர் தூற்றும் கெட்ட வழக்கத்தை -- பழக்கத்தை -- தூக்கி வீசுங்கள்.

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்கவல்ல, ஏற்ற வழித்தடத்தில், இணைந்து செயற்பட மனங்கொள்ளுங்கள். நீங்கள் அர சியல் செய்வது மக்களுக்கே என்பதனை ஒரு கணமேனும் (கனவிலும் கூட) மறந்து விடாதீர்கள்.

எல்லாவற்றுக்கும் இறுதியாக ஒன்றை மட்டும் உங்களுக்கு ஞாபகமூட்டுவது மக்கள நலன் சார்ந்த எமது கடமையாகும். தீதும் நன்றும் பிறந்தர வருவதில்லை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். ஒரு மணித்துளி பிந்தினாலும், போரினால் பாதிப்புற்ற ஒவ்வொரு தமிழனுக்கும் கொடுமை ஆற்றிய பாவம் உங்களை வந்து தொற்றிக் கொள்ளும். உங்கள் கால்களை நாக பாம்பு வந்து சுற்றிக் கொண்ட நிலைமை மேலெழும். அதனை ஒரு கணமேனும் மறந்துவிடாதீர்கள்; தமிழர் அரசியல்வாதிகளே!

# ஆளும் எந்தக் கட்சியாலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வில்லை

■ சேரலாதன்

நாட்டில் இன்று தேசிய அரசு ஒன்றை அமைத்து ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாகக் கடந்த காலங்களில் எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாட்டையும் மேற்கொண்டதில்லை என்பதை நாம் மறந்துவிட முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க இனவாதத்தை மூலதனமாகக் கொண்டே தமது அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார். மெத்தப்படித்தவரான இவர் இந்த நாட்டின் தலைவராக வர வேண்டுமானால் இனவாதத்தைக் கையில் எடுத்தாலே அது சாத்தியமாகும் என்ற தத்துவத்தை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருந்தார். இதன் விளைவாகவே 1958 இல் நாடு அதுவரை காணாத தமிழர்களுக்கு எதிரான பெரும் கலவரம் இடம்பெற்றது. இந்த நாடு தமது சொந்த நாடு என்று எண்ணிக்கொண்டிருந்த தமிழர்கள் தாம் அந்நியர்கள் என எண்ணத் தலைப்பட்டமை இந்தக் கொடிய கலவரத்தின் பின்னர் தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக பண்டாரநாயக்க போன்ற இனவாதிகள் விதைத்த இனவாத விதைகள் இன்று பெரும் விருட்சங்களாக வளர்ந்து நிற்கின்றன.

பண்டாரநாயக்கவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கியதேசியக் கட்சியும் தனது பங்குக்கு தமிழர்களை இன்னல்படுத்தத் தவறவில்லை. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட இன்னல்கள் மிகக் கொடியவை. குறிப்பாக 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற கறுப்பு ஜூலையின் கொடிய நிகழ்வுகள் இன்றும் தமிழர்களால் அச்சத்துடன் நினைவு கூரப்படுகின்றன. இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் என்றென்றுமே மறக்க முடியாத இரத்தக்கறை படிந்த வரலாற்றுப் பக்கமாக 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமைந்து விட்டது. இந்தக் கறுப்பு ஜூலை கலவரம் தொடர்பாக அப்போது ஜனாதிபதியாக பதவி வகித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி, சிரேஷ்ட அமைச்சர்களாக இருந்த ஆர்.பிரேமதாஸ, காமினி திஸாநாயக்க, வீரசிங்க மல்லிமாராச்சி, சிறில் மத்தியூ ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவராக இருந்தவரும், சிரேஷ்ட அமைச்சராக விளங்கியவருமான காமினி திஸாநாயக்க யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டதன் பிரதான சூத்திரதாரியாக அப்போது இனம் காணப்பட்டார்.

இன்றைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற போதிலும் அவர் மீது குற்றம் எதுவும் சுமத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் கூட அவர் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாக இதுவரை ஒரு துரும்பைக்கூட கிள்ளி எறியவில்லை என்பது தான் உண்மை. அவர் இன்றும்கூட ஒற்றை ஆட்சிக்குள் மட்டுமே தமிழர்களுக்கான தீர்வு வழங்கப்படுமென்ற கனவில் மிதக்கின்றார். அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற போதும் கூட அவர் இதையே சூசகமாகக் குறிப்பிட்டிருந்தார்.

பெரும்பான்மையின மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழர்களுக்குத் தீர்வு எதையும் வழங்குவதை ஒரு போதுமே ஆதரிக்கப்போவதில்லை. ஏனென்றால் அந்த அளவுக்கு அவர்களின் மனங்களில் இனவாத வித்துக்கள் விதைக்கப்பட்டு விட்டன. இவற்றை அழிப்பதோ அல்லது அப்புறப்படுத்துவதோ இலகுவான காரியமல்ல. இத்தகையதொரு கைங்கரியத்தை நிறைவேற்றி வைத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும்தான் இன்று ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இவை தமிழர்களுக்குரிய அதிகாரங்களை வழங்குமா என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. சில வேளை ரணில் விக்கிரமசிங்க ஓரளவு விட்டுக்கொடுப்புடன் நடக்க

> **பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற போதிலும் அவர் மீது குற்றம் எதுவும் சுமத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் கூட அவர் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாக இதுவரை ஒரு துரும்பைக்கூட கிள்ளி எறியவில்லை என்பது தான் உண்மை.**

முற்பட்டாலும் அவர் தலைமை தாங்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் இனவாதிகள் அவரது முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவதற்கே முனைவார்கள். இதைப் போன்றே மறுபக்கத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் மகிந்த தரப்பு இனவெறியர்கள் இதற்கு ஒரு போதுமே சம்மதிக்கப் போவதில்லை.

இதேவேளை – இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட விசேட நீதிமன்றத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் பரிந்துரை செய்துள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிப்போர் இடம் பெற்ற போது பெருந்தொகையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மனித உரிமை மீறல் செயற்பாடுகளும் வகைதொகையின்றி இடம் பெற்றன. ஆனால் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றபோது ஆட்சியில் இருந்த மகிந்த அரசு அப்படி எதுவும் இடம்பெறவில்லையென மறுதலித்து வந்தது. அத்துடன் பொது மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத வகையில் போர் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறியும் வந்தது. ஆனால் அரசின் கூற்றுக்கள் பொய் என்பதை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது. இதேவேளை– ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்ற கருத்தை எதிர்த்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இறுதிப்போர் ஓய்ந்துவிட்ட போதிலும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கு நீண்ட காலம் தேவைப்படும் என்பதை எவரும் மறுக்க முடியாது. அதே வேளை போலித்தனமான அரசியல் நடவடிக்கைகளும், பசப்பு வார்த்தைகளும் இழப்புக்களை எதிர்கொண்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைக்கப்போவதில்லை. அழிவுகளை எதிர்கொண்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அபிவிருத்தி, புனரமைப்பு என்பவை மட்டுமன்றி ஆற்றுப்படுத்துகையும் அவசியமாகத் தேவைப்படுகின்றது. வெறுமனே வீரவசனங்களைப் பேசி மக்களுக்கு உசுப்பேற்றும் நடவடிக்கைகள் எந்தவொரு தீர்வையும் பெற்றுத்தரமாட்டாது என்பதுதான் யதார்த்தமாகும்.

ஆனால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு நியாயமான, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் விதமான தீர்வு ஒன்றை வழங்கப் போவதில்லை என்பதுதான் பட்டறிந்த உண்மையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.விசாரணை அறிக்கை

ஆங்கில மூலம்:
பினான்சியல் ரைம்ஸ்
தமிழில்: ரஜீபன்



# தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா?

தனது கணவரை எப்போது இறுதியாகப் பார்த்தார் எனத் தெரிவிக்கும்போது முருகதாஸ் கஜந்தினியின் கண்களில் கண்ணீர் வர ஆரம்பிக்கின்றது. இலங்கையின் மிகவும்கொடூரமான உள்நாட்டுப் போர் முடிவடைந்து இருபத்திநான்கு மணி நேரத்தின் பின்னர் இலங்கை இராணுவ முகாம் ஒன்றில் அவரது குடும்பத்தினர் சரணடைந்த வேளையே அவர் தனது கணவரை இறுதியாகப் பார்த்தார். 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி அவர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர்.அன்றைய தினமே தமிழ்ப் புலிகளின் இராணுவம், இலங்கை இராணுவத்துடனான கடும் மோதல்களுக்குப் பின்னர் தோற்கடிக்கப்பட்டது.இதன் மூலம் இரு தசாப்தங்களுக்கு மேற்பட்ட மோதல் இரத்தம் தோய்ந்த, ஆனால் நிச்சயமான முடிவுக்கு வந்தது.

தமிழர்கள் அதிகமாக வாழும் வடபகுதியின் தலைநகரமான யாழ்ப்பாணத்தில் ஒரு பூங்காவில் அமர்ந்தபடி தனது கணவர் காணமற்போனது குறித்து கஜந்தினி நினைவு கூர்ந்தார், விடுதலைப்புலிகளின் ஆதரவாளரான அவரை விசாரணைக்கான இராணுவ பஸ் ஒன்றில் ஏறுமாறு படையினர் பணித்துள்ளனர். அவர் ஏற்கனவே ஒரு கையை இழந்தவர் என்பதால் அவரை அடையாளம் காண்பது இலகுவானதாகக் காணப்பட்டது. சில காலத்துக்கு முன்னரே அவர் போரின்போது எறிகணைத் தாக்குதல் காரணமாக தனது கையை இழந்தார்.

நான் அவர் இராணுவத்திடம் செல்வதை எனது கண்ணால் பார்த்தேன்,அவர்கள் அவரது பெயரை சொல்லி அழைத்தனர் என கஜந்தினி மெதுவான குரலில் தெரிவித்தார். ஆனால் அதன் பின்னர் அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியாது. அவர் உயிருடன் இருக்கின்றாராஎன்பது கூட தெரியாது என கஜந்தினி குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பிரதமர் பதவிக்கான தோல்வி தங்கள் குடும்பத்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கு உதவியாக அமையும் என நம்பிக்கை கொண்டுள்ள ஆயிரக்கணக்கான இலங்கையர்களில் கஜந்தினியும் ஒருவர். இலங்கையில் இவர்கள் காணமற்போனவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

இராணுவத்தின் வெற்றிக்குப் பின்னால் உள்ள கசப்பான உண்மைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை தனது பதவிக்காலத்தின் போது ராஜபக்ச தடுத்தார்.அவரது பிடிவாதமான போக்கை சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், தோற்கடிக்கப்பட்ட தமிழர்களும் கடுமையாகக் கண்டித்தனர்.

போரின்போது இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக உலகநாடுகளை பொறுப்பு கூறச்செய்யும் திறன் சர்வதேச சமூகத்துக்கு உள்ளதா என்பதைப் பரீட்சித்து பார்க்கும் களமாக மெதுமெதுவாக இலங்கை மாறியது.

தற்போது ராஜபக்ச அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள நிலையில் 20 மில்லியன் மக்களை கொண்ட இந்த நாட்டினால் சாதகமான நல்லெண்ணத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.


நல்லெண்ணத்துக்கான சிறந்த வாய்ப்பு தற்போது காணப்படுகின்றது என நாங்கள் கருதுகின்றோம், ஆனால் இந்த வாய்ப்பு மீண்டும் கிடைக்காது என தெரிவித்தார் இலங்கையின் முக்கிய தமிழ் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மதியாபரணம் சுமந்திரன்.

எதையெல்லாம் செய்யவேண்டுமோ அதனையெல்லாம் தற்போதே செய்யவேண்டும், விரைவில் நடவடிக்கைகளை எடுப்பது சிறந்தது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனினும் இதன் காரணமாக ஜனாதிபதி சிறிசேனவும், அவரது சகாவான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பல அரசியல் சாவல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர். போர்க் குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.நா மேற்கொண்ட விசாரணை அறிக்கையின் பிரதியொன்றை அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

2014 இல் வடகொரியா குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பாணியிலேயே இந்த விசாரணையும் அமைந்துள்ளது. ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச தோல்வியடைவதற்கு முன்னர் அவருக்கான அழுத்தங்களை அதிகரிக்கும் நோக்கிலேயே விசாரணை உண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

புதிய விசாரணைகள் குறித்து உறுதியுடன் காணப்படுவதாக தெரிவிக்கும் புதிய அரசிடம் விசாரணை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. கடும் எதிர்வலைகளை, எதிர்ப்புக்களை உண்டுபண்ணும் குறிப்பிட்ட அறிக்கை காணமற்போனவர்கள் குறித்து குறிப்பிடுவதுடன், இரு தரப்பு இராணுவத்தினராலும் இழைக்கப்பட்ட பெரிய போர்க்கால அநீதீகள் குறித்தும் பல விடயங்களை பகிரங்கப்படுத்தும். ராஜபக்சாக்களின் கண் காணிப்பின் கீழ் போருக்குப் பின்னர் இடம்பெற்ற சித்திரவதைகள் ஏனைய துஷ்பிரயோகங்கள் குறித்தும் குறிப்பிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இலங்கை இவை குறித்து எவ்வாறு விசாரணைகளை முன்னெடுக்கப்போகின்றது என்பது தெளிவற்ற விடயமாகக் காணப்படுகின்றது. [illegible] வருடங்களாக ராஜபக்சவை விமர்சிப்பவர்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வந்தனர்.

எனினும் கடந்த மாதம் அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றியது,சிறிசேனவின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அது ஆதரித்தது.பல தமிழ்க் குழுக்கள் இதனைக் கண்டித்துள்ளன.

சர்வதேச ஆலோசகர்கள் இடம்பெறும் உள்நாட்டு விசாரணை என்ற வகையில் இந்த விடயத்தில் சமரசம் ஏற்படலாம்.

மேலும் குறிப்பிட்ட விசாரணைகள் எந்த மாதிரியைப் பின்பற்றவேண்டும் என்பது குறித்தும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன, விக்கிரமசிங்க தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து தெளிவற்ற விதத்தில் கருத்துத் தெரிவித்து வருகின்றார், குற்றவாளிகள் என உறுதிசெய்யப்பட்டவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்படும் என்கிறார் அவர், இது பல கேள்விகளை எழுப்பியுள்ளது–நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறுமா?விசேட சட்டவாளர்கள் இடம்பெறுவார்களா? என்பது போன்ற பல விடயங்களுக்கு தெளிவான விடைகளில்லை என்கிறார் கொழும்பைச் சேர்ந்த மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் இயக்குநர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.

ஆனால் இவை குறித்த தீர்மானங்கள் அனைத்தும் அரசியல் ரீதியாக நெருக்கடியை உருவாக்கக் கூடியவை–

போரை முன்னெடுத்த அரசஇராணுவ தலைமைப்பீடம் முழுவதையும் விசாரிப்பதா [illegible] கொழும்பின் அரசியல் [illegible] தீர்மானிக்கவேண்டியிருக்கும்.

அதேவேளை இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகித்த ராஜபக்சவை சிங்கள பெரும்பான்மை சமூகத்தினர் போரில் வெற்றிபெற்ற வீரனாக கருதுகின்றனர், அதேவேளை ஏனைய பலர் அவரைப் போர்க் குற்றவாளி என்கின்றனர்.

எந்த நடைமுறையும் இரு தரப்பும் பொறுப்பு கூறுவதாக அமைந்திருக்கும்,இதனால் தமிழர்களும் கடினமான கேள்விகளை எதிர் நோக்க நேரிடலாம்.

கொழும்பில் கடந்த மாதம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை ஆதரித்தவேளை அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் டொம் மலினொவ்ஸ்கி எச்சரிக்கை கலந்த தொனியில் கருத்து வெளியிட்டார். இந்த நடைமுறை செயற்படுத்தப்பட நீண்ட காலம் பிடிக்கும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம், எவரும் அதிசயங்களை எதிர் பார்க்க கூடாது என்றார்.

எனினும் யாழ்ப்பாணத்தின் கஜந்தினி போன்றவர்கள் (காணமற்போனவர்கள் குடும்பத்தினர்) தங்களின் கேள்விகளுக்கு விடைகள் கிடைக்கவேண்டும் என்கின்றனர்.

தனது மகனின் இரண்டாவது பிறந்தநாளன்று எடுக்கப்பட்ட தனது கணவரின் புகைப்படத்தை கஜந்தினி வைத்திருக்கின்றார், கஜந்தினி எதிர்கால விசாரணை நடைமுறைகள் குறித்த தனது நம்பிக்கையின்மையை தெரிவிக்கும்போது அந்தப் 10 வயதுச் சிறுவன் அருகில் விளையாடிக்கொண்டிருக்கிறான்.

எனக்கு இந்த அரசில் நம்பிக்கை யில்லை, எனது கணவரையும் காணாமற்போன ஏனையவர்களையும் கண்டுபிடிப்பதற்கு ஏனைய உலக நாடுகள் உதவேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன்,எனது கணவர் எங்கேயோ உயிருடன் இருக்கின்றார் என்பதே எனது நம்பிக்கை என்கிறார் கஜந்தினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதுவளையின் மருத்துவக் குணங்கள்



தூதுவளையின் மருத்துவ குணங்களைப் பற்றி நேற்று முன்தினம் உதயன் பத்திரிகையில் பார்த்தோம் அதன் தொடர்ச்சி வருமாறு:

தூதுவளைக் காயை சமைத்தோ, அல்லது வற்றல், ஊறுகாய் செய்து ஒருமண்டலம் கற்பமுறைப்படி உண்டு வந்தால் கண்ணில் உண்டான பித்த நீர் அதிகரிப்பு, கண் நோய் நீங்கும். தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கி பாலில் கலந்து அருந்தி வந்தால் ஆண்மையைப் பெருக்கி உடலுக்கு வலு கொடுக்கும். தூதுவளைப் பழத்தை வெயிலில் காயவைத்து பொடியாக்கி தேன் கலந்து சாப்பிட்டால் மார்புச்சளி, இருமல் என்பன நீங்கும். பாம்பின் விஷத்தைமுறிக்கும். நாளுக்கு இருமுறை மலத்தை வெளியேற்றும். தூது வளைக் கீரை, வேர், காய், இவற்றை வற்றல், ஊறுகாய் செய்து நாற்பதுநாள்கள் சாப்பிட்டு வந்தால் கண்ணெரிச்சல் கண் நோய்கள் நீங்கும்.

தூதுவளை இலையை குடிநீர் செய்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் அணுகாது. மேற்கண்டமுறைப்படி தூதுவளையை உண்டு வந்தால் நீண்ட ஆயுளைப் பெறலாம். தூதுவளை துவையலை சாப்பிடும்போது காலை, மதியம், இரவு நேர உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் நல்ல பலனை உடனே காண முடியும். இவ்வாறு வாரத்தில் இரண்டு தினங்களாவது சாப்பிட்டு வந்தால் நோய்த் தடுப்பாகவும், நோய் தீர்க்கவும் பயன்படும். இம்முறையில் பயன்படுத்தினால் நுரையீரல் நோய்கள் வராமல் நுரையீரல் பாதுகாக்கப்படும். ஆஸ்துமா, ஈசனோபீலியா நோய் வராமல் தடுப்பு மருந்தாகவும், வந்தபின் நோய் நீக்கவும் பயன்படுகிறது. தூதுவளையைப் பயன்படுத்துவதால் மூளை நரம்புகள் வலிமையடைகின்றன. இதனால் நினைவாற்றல் பெருக உதவியாக இருக்கிறது.

தூது வளங்காயைச் சேகரித்து மோரில் ஊற வைத்து வற்றலாகக் காயவைத்து வைத்துக் கொண்டு பனி மற்றும் மழை காலங்களில், எண்ணெயில் பொரித்து ஆகாரத்தில் சேர்த்துக் கொண்டால் ஆஸ்துமா நோய் தணியும். நுரையீரல் வலுவடையும். தூதுவளை இலையைப் பொடி செய்து வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம் இப்பொடியை எருமை மோரில் கலந்து சாப்பிட்டால் இரத்த சோகை நீங்கி இரத்த விருத்தி உண்டாகும்.

(தொடரும்)

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## மதம் என்பது வளர்ச்சி பற்றியதே



மதம் என்பது வளர்ச்சி பற்றியது என்பதை உணர வேண்டும்; அது வெறும் பொருளற்ற பிதற்றல்கள் அல்ல . இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மனிதன் கடவுளைக் கண்டான். புதரில் கடவுளை கண்டார் மோசஸ். மோசஸ் கடவுளைக் கண்டபோது என்ன செய்தாரோ, அது உங்களைக் காப்பாற்றுமா? ஒருவன் கடவுளைக் கண்டதும் உங்களையும் உற்சாகப் படுத்தி அவ்வாறு செய்யும்படி தூண்டலாம், அதற்கும் மேலாக அது உங்களுக்கு உதவி செய்யாது. அதற்குமேல் ஒன்றுமில்லை. செல்லும் வழியிலுள்ள கைகட்டிய கம்பங்கள் அவை. ஒருவன் உண்டால் இன்னொருவனின் பசி தீராது. ஒருவன் கடவுளைக் காண்பது மற்றொரு மனிதனைக் காப்பாற்றாது. நீங்களே கடவுளைக் காண வேண்டும். இப்போது சண்டை எல்லாம் கடவுளுக்கு உடலில் மூன்று தலைகளா அல்லது ஆறு தலைகளா என்பது பற்றியே! ஆனால் நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா என்றால் இல்லை, காண முடியும் என்று நம்புவதும் இல்லை. நாம் எவ்வளவு மதிகெட்ட முட்டாள்கள்! நிச்சயமாக பைத்தியகாரர்களே.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 70 | 50 | 60 | 60 | 40 |
| கத்தரி | 70 | 90 | 70 | 80 | 60 | 80 | 80 | 40 |
| கரட் | 80 | 140 | 80–100 | 150 | 80 | 120 | 100–120 | 110 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50 | 60 | 50–60 | 50 |
| பயிற்றை | 70 | 50 | 80 | 60 | 70 | 80 | 80–100 | 80 |
| பாகல் | 100 | 90 | 100 | 80 | 100 | 120 | 100–110 | 80 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 80 | 120 | 80 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 90 | 90 | 120 | 100–120 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 100 | 120 | 100–120 | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 40 | 50 | 25 |
| தக்காளி | 60 | 50 | 50 | 50 | 50 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 50 | 70 | 60 | 60 | 25 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 10 | 30 | 10 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 140 | 140 | 120 | 120 | 200 | 200 | 120 |
| புடோல் | 40 | 40 | 40 | 50 | 50 | 60 | 80 | 25 |
| கோவா | 70 | 80 | 60 | 60 | 60 | 100 | 100 | 50 |
| வெண்டி | 40 | 40 | 40 | 50 | 60 | 80 | 50 | 25 |
| போஞ்சி | 160 | 150 | 180 | 160 | 170 | 200 | 160 | 150 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 | 80 | 60 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 80 | 40–50 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 90 | 75 | 90 | 100 | 90 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 100 | 110 | 240 | 160 | 120 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 120 | – | 180 | – |
| முருங்கைக்காய் | 120 | 120 | 120 | 80 | 120 | 80 | 120 | 20 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 700 | 700 | 700 | 550 |
| நண்டு | 350 | 350 | 300 | 300 | 300 | 400 |
| கணவாய் | 700 | 550 | 300 | 600 | 600 | – |
| பாரை | 550 | 450 | 500 | 500 | 500 | 430 |
| சுறா | 500 | 500 | – | 700 | 600 | 500 |
| சீலா | 300 | 250 | 300 | 400 | 500 | 350 |
| விளை | 650 | 600 | – | 450 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | – | 350 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 350 | 400 | 350 |
| கிழாக்கன் | 500 | 700 | 300 | 500 | 300 | – |
| ஓரா | 400 | 300 | 300 | 450 | – | – |
| திரளி | 200 | 250 | 100 | 350 | 100 | 250 |
| நகரை | 150 | 250 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 150 | 80 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 200 | 200 | 100 | 300 | 200 | – |
| திருக்கை | 100 | 250 | 250 | 280 | 550 | 150 |
| பாலை | 400 | 200 | – | 400 | – | – |
| வாளை | 100 | 150 | – | 300 | – | – |
| கொய் | 100 | 100 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 100 | 200 | – | 300 | – | 250 |

## நாளை

புரட்டாதி–03
ஞாயிற்றுக்கிழமை
20.09.2015

*திதி: ஸப்தமி*
*மு.இ.09.56 வரை*
*நட்சத்திரம்: கேட்டை*
*பி.இ.03.42 வரை*
*சுபநேரம்:*
*09.03–10.33 வரை*
*இராகுகாலம்:*
*04.33–06.03 வரை*

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | | | 9 | 2 | | 7 | |
| | 5 | | | | | 4 | | |
| | | 2 | 3 | | | 8 | | 9 |
| 5 | | | | | 3 | 9 | | 4 |
| 9 | 8 | 3 | 4 | 5 | 6 | 1 | 2 | 7 |
| 4 | | 7 | 8 | | | | | 6 |
| 6 | | 8 | | | 4 | 2 | | |
| | | 4 | | | | | 3 | |
| | 3 | | 9 | 6 | | | 4 | 8 |


**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 3 | 1 | 7 | 2 | 4 | 9 | 8 |
| 2 | 1 | 7 | 8 | 4 | 9 | 5 | 6 | 3 |
| 8 | 9 | 4 | 5 | 3 | 6 | 7 | 2 | 1 |
| 1 | 7 | 9 | 2 | 8 | 3 | 6 | 4 | 5 |
| 4 | 8 | 5 | 9 | 6 | 7 | 3 | 1 | 2 |
| 3 | 2 | 6 | 4 | 1 | 5 | 9 | 8 | 7 |
| 5 | 3 | 8 | 6 | 2 | 4 | 1 | 7 | 9 |
| 9 | 4 | 2 | 7 | 5 | 1 | 8 | 3 | 6 |
| 7 | 6 | 1 | 3 | 9 | 8 | 2 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டகரமான வாழ்க்கை



பிறவியிலேயே சிலருக்கு அதிர்ஷ்ட அமைப்புக்கள் அமைந்திருக்கும். சிலர் தங்கள் உழைப்பினாலும், தெய்வ வழிபாட்டினாலும், சாமர்த்தியத்தினாலும் அதிர்ஷ்டகரமான நல் வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். அந்த வகையில், ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தையும் மேன்மேலும் பெருகச் செய்யும் ஆற்றல் மிக்கவை நவரத்தினங்கள் ஆகும். நவரத்தினங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆற்றல் உண்டு. அவற்றில் தங்கள் பிறந்த எண்ணுக்கேற்ற அதிர்ஷ்டக்கல்லை வாங்கி உடலில் படும்படி அணிந்து கொண்டால்,அந்தக் கற்களின் ஆற்றல் உடலில் பாய்ந்து, உடல் நலக் குறைபாடுகளைப் போக்குவதோடன்றி, அதிர்ஷ்டகரமான வாழ்வையும் அள்ளித் தருகின்றன.

**மாணிக்கம்:**

மாணிக்கத்துக்கு ஆங்கிலத்தில் ரூபி (RUBY) என்று பெயர். மாணிக்கம் சிவப்பு நிறமுடைய, பூமியில் விளையக் கூடிய ஒரு கல்லாகும். ரோஸ் கலந்த சிவப்பு நிற முடையதாகவும் அல்லது சுத்த சிவப்பு நிறமுடையதாகவும் விளங்கும் இந்தக் கற்கள் ஒளி ஊடுருவக் கூடியதாகவும், ஒளி ஊடுருவ இயலாத கல்லாகவும் இரு வகையாகக் கிடைக்கின்றன. வெல்வெட் போன்ற தன்மையையும் வைரத்துக்கு அடுத்த கடினத் தன்மையையும்கொண்டது மாணிக்கக் கல்லாகும்.



மாணிக்கம் மிகுந்த உயர்தரமானது. தற்போது கிடைப்பது அரிதாக இருப்பதால் இதற்கு இது தான் விலை என்று நிர்ணயிக்க முடிவதில்லை. அதனால் தான் மாணிக்கத்தை விலையில்லா மாணிக்கம் என்கிறார்கள். மாணிக்கத்தை கேரட் முறையில்தான் மதிப்பீடு செய்கிறார்கள். உண்மையான உயர்ந்த வகை மாணிக்கக் கற்கள் வைரத்தை விடவும் விலை உயர்ந்தவையாகும். மாணிக்கம் மியன்மார், இலங்கை போன்ற நாடுகளில் கிடைக்கின்றது.

உயர்தர மாணிக்கங்கள் சாதாரண வெளிச்சத்தில் ஒரு சிவப்பு நிறத்தையும், அதிக வெளிச்சத்தில் நல்ல ஜொலிக்கும் சிகப்பையும் காட்டும். இந்தியாவில் தரம் குறைந்த ரூபிகளும் மற்றும் நல்ல அரிய வகையுள்ள ரூபிகளும் கிடைக்கின்றன. தரம் குறைந்த ரூபிகளுக்கு மைசூர் ரூபி என்று பெயர். இதில் ஒளியோ கவர்ச்சியோ இருக்காது. நேராக பூமியிலிருந்து கிடைக்கும் எந்தவொரு இரத்தினமும் ஒழுங்கற்றதாகத்தான் இருக்கும். அவற்றைச் சரியான முறையில் பட்டை தீட்டினால் மட்டுமே கற்களுக்கு அழகும் கவர்ச்சியும் உண்டாகும்.

மாணிக்கம் 'அலுமியம் டிரை ஒக்ஸைடு' என்ற வேதிப் பொருளால் ஆனது. 'கொராண்டம்' என்கிற வகையைச் சேர்ந்த மாணிக்கக் கற்கள் புறா இரத்த நிறத்தில் கிடைப்பது முதன்மைத் தரம் ஆகும். கரும்புள்ளிகள் உடைய மாணிக்கத்தை அணிந்தால் நிறையப் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். பலவாறு பழுதடைந்த மாணிக்கம் இறப்பைக்கூட ஏற்படுத்தி விடும். மாணிக்கத்தைக் கையில் அணிந்திருக்கும் போது அதன் நிறம் மங்கினால் துன்பங்கள் ஏற்படும். அந்தத் துன்பம் நீங்கி விட்டால் மாணிக்கக்கல் மீண்டும் தன்னுடைய பழைய நிறத்தை அடைந்து விடும்.

**எவர் மாணிக்கக்கல் அணியலாம்?**

சூரியனுடைய பிரதிநிதிக் கல்லாக மாணிக்கம் உபயோகப்படுகிறது. சூரியனின் வீடான சிம்ம ராசியில் பிறந்தவர்களும் சூரிய திசை நடப்பில் உள்ளவர்களும், எண் கணிதப்படி 1,10,19, 28 ஆம் எண்ணில் பிறந்தவர்களும், மாணிக்க கல்லை அணிந்து கொள்வது நல்லது. இதனால் சூரியனுடைய கதிர்கள் ஒழுங்கு செய்யப்பட்டு உடலில் நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்கு கின்றது.

**மாணிக்கக் கல்லின் நன்மைகள்:**

மருத்துவ ரீதியாக உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய் கள், காய்ச்சல், வயிற்றுக் கோளாறு, மூலம் இருதய நோய், தோல் வியாதி, கண் நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மாணிக்கக் கல்லை அணிந்தால் நோய்களின் பிடியிலிருந்து ஓரளவுக்குத் தப்பித்துக் கொள்ளலாம்.

மாணிக்கக் கல்லைத் தங்கத்தில் பதித்து உடலில் படும்படி அணிந்து கொண்டால் நல்ல உடல் நலம், உள உறுதி, நட்பு, காதல், பாசம் போன்ற அனைத்தும் சிறப்பாக அமையும். இருதயத்தையும், ரத்த ஓட்டத்தையும் வலுவடையச் செய்கிறது. மன அழுத்தம், சோகம், தேவையற்ற புலனின்ப நாட்டம் போன்றவற்றைக் குறைத்து தைரியத்தையும் வீரத்தையும் தருகிறது. மாணிக்கம் சூரியனின் ஆதிக்கம் என்பதால் பெயரையும் புகழையும் உயர்த்துவதுடன் சமுதாயத்தில் கௌரவமிக்க பதவிகளை வகிக்கும் ஆற்றலையும் கொடுக்கிறது. மழலைச் செல்வமும் சிறப்பாக அமையும்.

ஒரு சில மாணிக்கங்களை வெட்டிப் பார்த்தால் ஆறு கீற்றுகள் உடைய நட்சத்திரத்தைப் பார்க்கலாம். இந்த வகை மாணிக்கக் கல்லை நட்சத்திர மாணிக்கம் என்று அழைக்கிறார்கள். மாணிக்கம் ஒரு பிரகாசமான, கடினமான, காலமெல்லாம் நிலைத்திருக்கக்கூடிய, அணியத் தகுந்த ஓர் அபூர்வ இரத்தினமாகும்.

மாணிக்கத்தை தங்கத்தில் பதித்து உடலில் படும்படியாக மோதிர விரலில் அணிந்து கொள்ள வேண்டும். அதன் எடை 3 அல்லது 5 ரத்திகள் இருப்பதே நல்லது. மிக விலை உயர்ந்த மாணிக்கக் கல்லை வாங்க இயலாதவர்கள் அதற்குப் பதிலாக கார்னட் என்ற கல்லை வாங்கி அணியலாம். இந்த கல் சிவப்பு நிறத்தில் பவளத்தைப் போன்று சற்று கூடுதலாக கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். குற்றமில்லாத கார்னட் கற்கள் மாணிக்கத்தை போலவே நற்பலனை அளிக்கும் தன்மை வாய்ந்தவையாகும். மாணிக்கக் கல்லை அணியும் போது சூரியனுக்கு உரிய ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய ஓரையில் அணிந்துகொள்வது நல்லது.

(தொடரும்)

# தமிழர் பாரம்பரியத்தில் நகைகள்



நகைகள் என்பது தமிழர் பாரம் பரியத்தில் மிக முக்கியம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகிறது. அழகுக்கும் ஆடம் பரத்துக்கும் மட்டுமே நகைகள் என்று நினைப்பது முற்றிலும் தவறான விட யம். தமிழர் பாரம்பரிய நடவடிக்கைகள் மறைமுகமாக விஞ்ஞானக் கருத்துக்களைக் கொண்டிருப்பவை. அது போல நகைகள் எம்முடைய உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்டவை என்பதே உண்மை. நகைகள் அணிவதன் மூலமாக எமது உடலில் உள்ள முக்கிய வர்மப் புள்ளிகள் தூண்டிவிடப்பட்டு உடலின் ஒவ்வொரு உறுப்புகளும் பராமரிக்கப் படுகின்றன. எத்தனையோ பெறுமதியான பொருள்கள் இருந்த போதிலும் அதிகமாகன ஆபரணங்கள் தங்கத்தில் அணியப்படுகின்றன. இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகள், பூமத்தியரேகைக்கு அண்மையில் இருப்பதால் வெப்பமான நாடுகளாகும். இந்த வெப்பத்தை குறைத்து, உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க தங்கம் மட்டுமே [illegible] தங்கம் எப்பொழுதும் [illegible] தொட்டுக்கொண்டிருப்பதால் நாளடைவில் உடலின் அழகை அதிகரிக்கும் ஆற்றலுள்ளது.

இன்று தங்கத்தை சாதாரண மக்கள் உபயோகிப்பது குறைந்து வருகிறது. ஏன் என்றால் தங்கத்தின் விலை மிக உயர்ந்து விட்டதும் நாகரிகமான நகைகள் சந்தைக்கு வந்துள்ளதுமே காரணமாகும். எமக்கு நோய்கள் உருவாவதைத் தடுப்பதற்கு மருந்துகளை உபயோகிப்பதை விட நகைகளை நாம் அணிந்தால் அது நல்ல பயன் தரும். தங்கத்தில் என்று இல்லாமல் (முத்து, வெள்ளி போன்றவற்றில்) நாம் நகை அணிதல் கட்டாயமாக இருந்தமை எமது ஆரோக்கியத்தை முன் நிறுத்தியே ஆகும்.

**கொலுசு அணிதல்**

ஆரம்ப காலத்தில் நாம் எல்லோரும் கொலுசு அணிந்தோம். பின்னர் இடைப்பட்ட காலத்தில் அது பழங்காலப் பழக்கம் என்று கைவிடப்பட்டது. தற்பொழுது அது மீண்டும் வழக்கத்துக்கு வந்துள்ளது. அதிலும் ஒற்றைக் காலில் கொலுசு அணிவதுதான் நாகரிகம். பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம், காலில் அணியும் நகைகளை வெள்ளியில் தான் அணிகிறோம். தங்கத்தில் மகா லட்சுமி இருப்பதால் நாம் காலில் அணியும் நகைகளைத் தங்கத்தில் அணிவதில்லை. அத்துடன் வெள்ளி நகைகள் எமது ஆயுளை விருத்தி செய்யக் கூடியவை. எமது உடல் சூட்டை அகற்றி குளிர்ச்சியாக்கி சருமத்தை ஆரோக்கியமாக்கக் கூடியவை. சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு கொலுசு அணிவித்து விடுகின்றோம். குழந்தைகள் நடக்கும்போது எப்போதும் சங்கீதம் கேட்க வேண்டும் என்பதாலும் குடும்பத்தினர் குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பதற்கும் கொலுசு அணிவிக்கப்படுகிறது. உணர்ச்சி வசப்படுதல் என்பது எப்பொழுதும் ஆண்களை விட பெண்களுக்கே அதிகம். வெள்ளிக் கொலுசு குதிகால் நரம்பைத் தொட்டுக் கொண்டிருப்பதால் குதிகால் பின் நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்ச்சிகளைக் குறைத்துக் கட்டுப்படுத்துகிறது.

மேலும் பெண்களின் இடுப்புப் பகுதியை ஸ்திரப்படுத்தவும் கொலுசு பயன்படுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை



கடற்கரை ஓரமாக பெரிய மரம் ஒன்று வளர்ந்திருந்தது. அதன் கிளை ஒன்று மிக நீண்டு கடல் நீருக்கு மேலாக நீட்டிக் கொண்டிருந்தது. அதன் உச்சியில் கடற்குருவி ஒன்று கூடு கட்டி முட்டைகளை இட்டு அடைகாத்து வந்தது. ஆண் குருவியும் பெண் குருவியும் அதே கூட்டில் வசித்தபடி தங்கள் குஞ்சுகள் வெளிவரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. ஒரு நாள் பெரும் கடற் காற்று வீசியது. பெரிய அலைகள் பொங்கி எழுந்தன. கிளையில் இருந்த கூடு நழுவி கடலில் விழுந்து மூழ்கியது. குருவிகள் மனம் பதறிக் கதறின. கடலில் கூடு மூழ்கிய இடத்துக்கு மேலாக கீச், கீச் என்று அவை கத்திய படியே சுற்றிச் சுற்றி வந்தன.
பெண் குருவி மனம் உடைந்த நிலையில் எப்படியாவது முட்டைகளை மீண்டும் நான் காண வேண்டும், இல்லையேல் நான் உயிர் வாழ மாட்டேன் என்றது. அதற்கு ஆண் குருவி அவசரப்படாதே ஒரு வழி இருக்கிறது. எமது கூடு கரையின் ஓரமாகத் தான் விழுந்துள்ளது. கூட்டுடன் சேர்ந்து முட்டைகள் விழுந்ததால் நிச்சயம் அவை உடைந்திருக்க மாட்டா. எனவே இந்தக் கடலிலுள்ள தண்ணீரை வற்ற வைத்து விட்டால் போதும். முட்டைகளை நாம் மீட்டு விடலாம் என்று பெண் குருவிக்கு தன்னம்பிக்கை ஊட்டி யது. கடலை எப்படி வற்றவைப்பது? என்று கேட்டது பெண் குருவி.
முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளிவர இன்னும் பல நாள்கள் ஆகலாம். எனவே நாம் இடைவிடாமல் சில நாள்கள் முயல வேண்டும். எம் வாய் கொள்ளும் அளவுக்குத் தண்ணீரை எடுத்துக் கொண்டு பறந்து சென்று தொலைவில் கொட்டுவோம். மறுபடியும் திரும்பி வந்து மீண்டும் நீரை நிரப்பிக் கொண்டு போய் தொலைவில் உமிழ்வோம். இப்படியே இடைவிடாமல் செய்து கடல் நீரை வேறு இடத்தில் ஊற்றினால் கடலின் நீர் மட்டம் குறைந்து தரை தெரியும். அப்போது எமது முட்டைகள் வெளிப்படும்என்றது ஆண் குருவி.
இதையடுத்து இரண்டு குருவிகளும் தன்னம்பிக்கையுடன் செயலில் இறங்கின. விர்ரென்று பறந்து போய் தங்களது சிறிய அலகில் இரண்டு விழுங்கு நீரை நிரப்பிக் கொண்டன. பறந்து சென்று தொலைவில் போய் உமிழ்ந்தன. மீண்டும் பறந்து வந்து இரண்டு வாய் தண்ணீரை அள்ளின. கொண்டு போய்த் தொலைவில் கக்கின.
இப்படியே இரவு பகல் என்று இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தது அவற்றின் நீர் அகற்றும் படலம்.
அப்போது அந்தக் கடற்கரை ஓரமாக முனிவர் ஒருவர் நடந்து வந்து கொண்டிருந்தார். மகா சக்திகள் நிறைந்த மகான் அவர். ஆளில்லாத அந்தப் பகுதியில் கீச் கீச் என்ற சத்தம் கேட்கவும் அவர் திரும்பிப் பார்த்தார். இரண்டு குருவிகள் பறந்து போவது கண்டு சிரித்தபடி மேலே நடந்தார். மீண்டும் கீச் கீச் என்ற சத்தம். குருவிகள் கடலுக்கு மேல் பறந்தன. எதையோ அள்ளின. மீண்டும் பறந்தன. இப்படி பலமுறை நடைபெறுவதைக் கண்டு முனிவருக்கு வியப்பு ஏற்பட்டது. கடலில் இருக்கும் எதனைக் கொத்துகின்றன இவை? அங்கு இரை ஏதும் இல்லையே என்று நினைத்தார் அவர்.
உடனே அந்த மகான் கண்களை மூடினார். உள்ளுக்குள் அமிழ்ந்தார். மறுகணம் அவர் மனதில் எல்லா நிகழ்ச்சிகளும் படம்போல் ஓடின. அவர் மனம் உருகியது. முட்டைகளை இழந்த தாயின் தவிப்பும் கடலை வற்ற வைத் தாவது முட்டைகளை மீட்க வேண்டும் என்ற அதன் துடிப்பும் அவரது உள்ளத்தை நெகிழச் செய்தன.
உடனே தனது தவ பலத்தை ஒன்று திரட்டிய முனிவர் கையை உயர்த்தினார். மறுகணம் கடல் சில அடிகள் பின் வாங்கியது. அங்கே கூட்டுடன் இருந்த முட்டைகள் தென்பட்டன. குருவிகள் அதைப் பார்த்துக் குதூகலத்துடன் கீச்சிட்டன. ஆளுக்கொன்றாக முட்டைகளைப் பற்றிக் கொண்டு போய் வேறிடத்தில் சேர்த்தன. நான் அப்போதே சொன்னேன் பார்த்தாயா? எமது ஒரு நாள் உழைப்பில் கடல் நீரைக் குறைத்து முட்டைகளை மீட்டு விட்டோம் பார்த்தாயா? என்றது ஆண் குருவி பெருமிதத்துடன்.
முனிவர் சிரித்தபடி தொடர்ந்து நடந்தார். இங்கே குருவிகள் முட்டைகளை மீட்டது அவற்றின் உழைப்பாலா? அல்லது முனிவராலா. அந்தக் குருவி களுக்கு முனிவர் என்ற ஒருவரைப் பற்றியோ அவரின் தவ வலிமை பற்றியோ, எதுவுமே தெரியாது. ஆனால் தன்னம்பிக்கையுடன் மட்டும் கடல் நீரை அள்ளின .
அதே சமயம் குருவிகள் கடல் நீரை மொண்டு சென்று ஊற்றிக் கொண்டிருக்காவிட்டால் முனிவர் தம் பாட்டிலேயே போயிருப்பார்.
அவரை மனம் நெகிழ வைத்தது அவற்றின் உழைப் பும் முயற்சியும்தான். இங்கே முட்டைகள் மீட்கப்பட்டது குருவிகளாலும் முனிவராலும் தான். முனிவரின் ஆற்றல் அவற்றுக்குப் பக்க பலமாக வந்து சேர குருவிகளின் உழைப்புத்தான் அதற்கு அடிப் படையாக அமைந்தது.
எல்லையில்லா ஆற்றல் பெற்றவர்களே! பிள்ளைப் பருவம் வாழ்வின் இன்றியமையாப் பருவம்.
பருவத்தே பயிர் செய் என்பார்கள். இந்த வயதில் நன்றாகப் படிக்காவிட்டால் பின்னர் கண்ணீர் சிந்தவேண்டி இருக்கும்.
இந்தக் கதை, எழுத்தாளர் பாலகுமாரனனின் கடலோரக் குருவிகள் நாவலின் அடிப்படையில் அமைந்தது.







## ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட உயிரினங்களின் பட்டியல்

ஆறறிவு கொண்ட மனிதர்களான எம்மை, மற்ற உயிரினங்களுக்கு எத்தனை அறிவு உள்ளது என்பதைப் பட்டியலிடச் சொன்னால் நிச்சயம் தடுமாறவே செய்வோம். சாதாரணமான விடயங்கள் எப்போதுமே எம்மை முட்டாள்களாக்கிவிடக்கூடியவை. எனவே ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட உயிரினங்களின் பட்டியலைத் தெரிந்து கொள்வோம்.

ஓர் அறிவு கொண்டவை : மரம், செடி, கொடி, புல், பூண்டு போன்ற தாவர இனங்கள்.
இரண்டறிவு கொண்டவை : நத்தை, சங்கு (இவற்றுக்கு உடல், வாய் ஆகிய இரண்டு உறுப்புகள் மட்டுமே உள்ளன.)
மூன்றறிவு கொண்டவை : எறும்பு, கறையான், அட்டை
நாலறிவு கொண்டவை : நண்டு, தும்பி, வண்டு
ஐந்தறிவு கொண்டவை : விலங்குகள், பறவைகள்
ஆறறிவு கொண்டவை : மனிதர்கள் மட்டும்





# சாத்தியமா ஆண்–பெண் நட்பு..!

ஆண் – பெண் நட்பு என்றதும் எம் மனதில் எழும் முதல் கேள்வி ஒரு ஆணும் பெண்ணும் கடைசி வரை நண்பர்களாக இருப்பது சாத்தியமா? என்பது தான். ஆண் பெண் நட்பு என்பது சமூகத்தின் பார்வையில் பலவிதமான கருத்துக்களைத் தோற்றுவிக்கிறது. அந்த வகையில் என்றும் விவாதிக்கக் கூடிய வகையில் தான் இந்த உறவு முறை அமைந்துள்ளது.
ஒருசில தமிழ் சினிமாக்களைத் தவிர மற்றயவை சாத்தியம் இல்லை என்றுதான் பெருமளவில் கூறியுள்ளன. நிறைய உதாரணங்கள் சொல்லலாம். பாலைவனச் சோலை படத்தில் சுகாசினிக்கும் நான்கு ஆண்களுக்கும் இடையே ஆழமான நட்பு நிலவும் கதையில் அதில் ஒருவர் மேல் காதல் ஏற்படும். பிரியாத வரம் வேண்டும் படத்தில் ஷாலினியும் பிரசாந்தும் இணை பிரியாத நண்பர்களாக இருப்பார்கள். ஷாலினிக்கு வேறு ஒருவருடன் திரு மணம் நிச்சயிக்கப்படும்போதுதான் இருவருக் கும் மனதில் காதல் ஒளிந் திருப்பது தெரியவரும். இப்படிப் பல திரைப்படங்கள் உள்ளன. நட்பு என்பது பின்னால் தோன்றும் காதலுக்கான அத்திபாரமாகத் தான் திரைப் படங்களில் பிரதிபலிக்கப்படு கிறது.
திரைப்படங்கள் மட்டுமன்றி எம் வரலாற்றிலும், இதிகாசத்திலும் இலக்கியத்தி லும், ஆண் – பெண் நட்பு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. ஆண்–பெண் நட்புக்கு எங்கேயும் எதிலும் எடுத்துக்காட்டுகள் இல்லை! ஆண் பெண் உறவு என்றாலே அது காதல் அல்லது உடல் சம்பந்தப்பட்ட உறவாகத் தான் இருக்கவேண்டும் என்கிற சமுதாய எதிர்ப்பார்ப்பு, சமுதாய ஆதரவின்மை மற்றும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருக்கும் பால் நிலை பாகுபாடு ஆகியவை யதார்த்தமான நட்பு மலர்வதைத் தடுக்கின்றன.
நட்பைப் பற்றி பல ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன. இரு பக்க வாதங்களும் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. பலருக்கு ஆண் – பெண் நட்பு என்பது சுவாரசியமாகத் தோன்றினாலும் விபரீதமாகிவிடும் என்கிற பயமும் இருக்கிறது. ஒரு ஆண் தன் தோழியுடனோ, ஒரு பெண் தன் தோழனுடனோ காலாற நடக்கையில், சேர்ந்து புத்தகம் படிக்கையில், மணிக்கணக்காகப் பேசுகையில் காதல் எப்படிக் குறுக்கிடாமல் இருக்க முடியும்? என்கின்றனர் சிலர். அப்படியே ஒரு ஆணும் பெண்ணும் நல்ல நண்பர்களாகத் தொடர்ந்து இருந்தால் கூட, அந்த நட்பை நல்ல விதமாகப் புரிந்துகொள்ளும் கணவன் அந்தப் பெண்ணுக்கும், அதே போன்ற மனைவி அந்த ஆணுக்கும் அமைவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு.
ஆண்–பெண் நட்பைப் பற்றி நம்பிக்கையான கருத்துக்களும் இருக்கின்றன. ஆண்கள், பெண்களின் நட்பை அதிகமாக விரும்புகிறார்கள். பெண்களிடத்தில் ஆண்களிடம் கிடைக்காத ஒரு மிருதுவான மனதை வருடும் அன்பு கிடைக்கிறது. பெண்களிடம் எங்களுடைய பலத்தையோ, செல்வாக்கையோ நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் பலவீனத்தைக் காட்டினாலும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று ஆண்கள் கூறியிருக்கிறார்கள்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.நாவின் அறிக்கைக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 19

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையை வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது அலுவலகத்தினால் வெளியிட்ட அறிக்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் போர்க் குற்றங்களும், மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்களும் பெரும்பாலும் இழைக்கப்பட்டிருப்பதாகக் கூறி இதற்கு ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தின் மூலம் விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

போரினால் பாதிப்படைந்து நீதி கோரி நிற்கும் எம்மக்களது ஆதங்கத்துக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஆணையாளரின் விசாரணை அறிக்கை அமைந்துள்ளது.

தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்து கூடிய விரைவில் எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் கிடைக்கச் செய்வதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்டவர்கள் துரிதகதியில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## சோனியா, ராகுல் விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, செப்.19

இந்தியத் தேசியக் காங்கிரஸின் தலைவி சோனியாகாந்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி ஆகியோர் இலங்கைக்குப் பயணம் செய்யக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான தரப்புக்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

வெகு விரைவில் இந்தப் பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பைச் சோனியா காந்தியும் ராகுல் காந்தியும் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் இருவரும் விரைவில் இலங்கைக்குப் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகி றது. (த-வ)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
021 493 1111

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 08.03.1939

மறைவு 22.08.2015

**இராமலிங்கம் குலசிங்கம்**
(ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்)

கடந்த 22.08.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராமலிங்கம் குலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.09.2015) சனிக்கிழமை கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை மறுதினம் (21.09.2015) திங்கட்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகளில் பங்கேற்று அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை தெற்கு,
கலிகைச் சந்தி, கரவெட்டி

குடும்பத்தினர்.

(C18891)(19.17)

## மரண அறிவித்தல்



**முத்துத்தம்பி வேலாயுதபிள்ளை**

புதுவீதி, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் தாமரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி வேலாயுதபிள்ளை நேற்று (18.09.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

1st நாவலடி வீதி, மானிப்பாய்.
வே.ஜெகன் (மகன்) யாழ் புத்தகசாலை
0778349507

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**திருமதி கமலாதேவி இரத்தினம்**

அண்ணாசிலையடி, கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கமலாதேவி இரத்தினம் நேற்று (18.09.2015) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் க.இரத்தினத்தின் (ஓய்வுநிலை கிராம அலுவலர், சமாதான நீதிவான், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிட்டினர்-மாணிக்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் சங்கர் பிறேமா, மணிமாறன் (சுவிஸ்), நெடுஞ்செழியன் (இடைக்காடு ம.வி) தமிழ்மாறன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்) கரிகாலன் (சுவிஸ்) சிவகாந்தன்-பாமிலா (புதுக்குடியிருப்பு பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தாயும், தேவராசா-பூமாதேவி, கிட்டினர்-ஆனந்தம் (ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர்) சோமசுந்தரம்- யோகாதேவி மாசிலாமணி- மல்லிகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாஸ்கரன்-சாந்தகலா, மணிமாறன்-கோமதி (சுவிஸ்) நெடுஞ்செழியன்-மதிவதனா, தமிழ்மாறன்-நந்தினி, கரிகாலன்-ராதா(சுவிஸ்) சுப்பு-சங்கர், சிவஞானம்-சிவகாந்தன் (முல்/ஒட்டுசுட்டான் ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமியும், பாஸ்கரன்-தயாளன் (கனடா), பாஸ்கரன்-நிஷாந்தன், பாஸ்கரன்-சுஜீபன் (யாழ். போதனா வைத்திய சாலை) பாஸ்கரன்-நிதர்சன், தமிழ்மாறன்-செந்தாளன், தமிழ்மாறன்-ஆர்த்திகன், தமிழ்மாறன்-ஆரணன், மணிமாறன்-அபிநயன், மணிமாறன்-நிதுனா, நெடுஞ் செழியன்-கலிபரன், நெடுஞ்செழியன்-நூர்ஜிகா, சங்கர்-சாருஜன், சங்கர்-சாரங்கா, சங்கர்-சிபிக்கா, சிவகாந்தன்-அம்சானி, சிவகாந்தன்-ஆரணிகா சிவகாந்தன்-ஆரபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வெல்லன்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அண்ணாசிலையடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(58540) T.P: 07[illegible], 07[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



**திருமதி தெய்வானைப்பிள்ளை இராசதுரை**

கோப்பாய் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை இராசதுரை 17.09.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூரணம், செல்லம், கார்த்திகேசு மற்றும் நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரவீந்திரகுமார், சுதாகரன் மற்றும் சிவசக்தி, சிவப்பிரியா, நிவாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தாயும், சுகுணகுமார், பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியும், கோபிகன், கேசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு. (64693) (10.17)

தகவல்: பிள்ளைகள்.
077967 2220

## மரண அறிவித்தல்

**திருமதி ஜெயலட்சுமி கையித்தாம்பிள்ளை**



07, புதுவீதி, அத்தியடியைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் முட்கொம்பனை வசிப்பிடமாகவும், 07, புதுவீதி, அத்தியடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெய லட்சுமி கையித்தாம்பிள்ளை 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமார் - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற இராயப்பு - கையித்தாம் பிள்ளையின் அன்பு மனைவியும் தாட்சாயினியின் அன்புத் தாயும் பத்மாவதி, தவமலர், தயாபர நாதன்(நோர்வே), அன்ன ஜோதி, சற்குணவதி, திலகவதி, சந்திரகாந்தி (நோர்வே), சத்தியபவானி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், அன்ரன் மரியநாயகம் மற்றும் ஜெயக்குமார், யோகநாதன் (நோர்வே) , கேதீஸ்வரன் (ஜேர்மனி) யோகினி (நோர்வே) ஆகியோரின் மைத்துனியும் முகுந்தன் காலஞ்சென்றவரான குகானந்தன் மற்றும் யசிந்தன், சயந்தன், துஷ்யந்தன், பிராங்லின் (பிரான்ஸ்), ஜெயகணேஸ், சரவணன், அபிராமி, அபிராமி(ஜேர்மனி), ஆரணி (ஜேர்மனி) ஆகியோரின் பெரியதாயும் சிறிய தாயும் கணேசன் (நோர்வே), பிரதாயினி(நோர்வே) ஆகியோரின் மாமியாரும் கம்சாயினி, உமாலினி, புகழினி ஆகியோரின் மாமியும் மயூராஜ், வர்மிஷா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(20.09.2015) ஞாயிற்றுக்கிழமை 07, புதுவீதி, அத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

07, புது வீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
மகள் (தாட்சாயினி)

## மரண அறிவித்தல்



**திருமதி சிவயோகம் (யோகக்கா) சற்குணநாதன்**

கலாசாலை வீதி, 2 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் சற்குணநாதன் 17.09.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகளும், சற்குணநாதனின் (கணக்காளர், கைதடி ப.நோ.கூ. சங்கம்) அன்பு மனைவியும், கமல்ராஜ், நிமல்ராஜ், சசிதா (சுவிஸ்), சர்மிளா, தர்சிஹா (லண்டன்), தனுஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், நித்திய பவித்ரா, மைதிலி, ரவிச்சந்திரன் (சுவிஸ்), அருள்ராஜன், பிரபாகரன் (லண்டன்), சிவனருட் செல்வன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும்,காலஞ்சென்ற ஞானசம்பந்தன் மற்றும் சிதம்பரநாதன் (கனடா), மகேஸ்வரா (கனடா), காலஞ்சென்ற ஞானப்பூங்கோதை மற்றும் தையல்நாயகி, காலஞ்சென்ற விசயலட்சுமி மற்றும் கங்காதேவி (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி), ஜெயந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றொசான்,கமலினி, பாவனா, அஸ்வினி, அர்ச்சனா, அஜகன், மீனுஜா, ஆர்யா, அஸ்வின், ஆதித்யா, சகானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2015) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(64682) (13.15)

தகவல்:
சற்குணநாதன்
(கணவர்)

Technical officers/Site Engineers/மேசன் தேவை
கட்டட நிர்மாணத்துறையில் அனுபவமிக்க Technical officers, Site Engineers, மேசன்மார் தேவை.
Building projects in Northern Province.
தொடர்பு : 077 344 4801

விற்பனைக்கு
Hero Honda வெள்ளை நிற ZMR விற்பனைக்குண்டு.
தொடர்பு : 078 616 9020

வாடகைக்கு உண்டு
யாழ் போதனா வைத்தியசாலைக்கு அருகில் வைத்தியர்கள் தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 968 7677

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை ஸ்ரான்லி பாடசாலைக்கு அருகில் நொத்தாரிஸ் ஒழுங் கையில் 3 பரப்புக் காணி பங்குக் கிணறு நல்ல தண்ணீருடன் ஒரு பரப்பு 13 லட்சம், நாவலடியில் 8 பரப்புக்காணி ஒரு பரப்பு 1¼ லட்சம் நாவலடியில் 22 பரப்பு வயல் ஒரு பரப்பு 15 000/= விற்பனைக் குண்டு.
தொடர்பு : 075 544 0503

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சையும் விசேட வகுப்பும்
• யாழ். பிரபல ஆசிரியரால் விசேட வகுப்பு.
• ஒவ்வொரு ஞாயிறும் மாதிரிப் பரீட்சை.
'புலமைச் சிட்டு'
(நாவலர் வெளியீடு)
• பரீட்சை விரும்பிய 6 நேரங்களில்
• 1ஆவது பரீட்சை - 20.09.2015 (ஞாயிறு)

| | |
|---|---|
| காலை 8.00 - 10.00 | மாலை 2.00 - 4.00 |
| காலை 9.00 - 11.00 | மாலை 3.00 - 5.00 |
| காலை 10.00 - 12.00 | மாலை 4.00 - 6.00 |

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 077 459 8440

விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு
DMI COMPUTER EDUCATION
After A\L
IT & English Diploma
Dip.in Information Technology DITEC
Diploma in Office Automation DOA
Dip. in Pre-Press Desktop Publicating DTP
Diploma in Pc Applications DPCA
Adv. Dip. in Hardware & Networking ADHN
Dip. in Video Production & Multimedia DVPM
Dip.in Web Designing & Development DWD
Dip. in Computerized Accounting DCA
புதிய பிரிவுகள் ஆரம்பம்
19/9/2015 (Sat) - 9.30 am.
21/9/2015 (Mon) - 9.30 am.
75% OFF



அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
No.113, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.111, A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

After A/Levels
மிகவும் பிரபல்யம் வாய்ந்த இரட்டை டிப்ளோமாக்களை நான்கே மாதங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்



Diploma in Information Technology
Duration : 4 Months
Text Book Free
IT & ENGLISH
Diploma in English
Duration : 4 Months
Text Book Free
சேமிப்பு Rs. 16,375
25% off 50% off
assured by PEARSON
SMS your Details to 077 309 9 308
வலுவான இரட்டைச் சான்றிதழ்
ESOFT + Pearson (UK)

Diploma in Business Management
Duration : 4 Months
Free Text Books
Diploma in Software Engineering
Duration : 6 Months
Free Text Books
Diploma in Web Engineering
Duration : 6 Months
Free Text Books
Diploma in Hardware & Networking
Duration : 4 Months
Free Text Books
Diploma in Computerized Accounting
Duration : 5 Months
Free Text Books
Diploma in Business English
Duration : 6 Months
Free Text Books
Diploma in Hospitality Management
Duration : 4 Months
Free Text Books
வார நாட்கள் 21.09.2015 | வார இறுதி நாட்கள் 26.09.2015
New Batches
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு

## விசாரணை அறிக்கைக்கு

எதாவது:-

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற் படுத்தல், குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் மற் றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் ஆகிய வற்றின் அடிப்படையில் ஐ. நா. மனித உரிமை கள் சபை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இலங் கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அறிக்கை யில் பரிந்துரைகள் செய்யப்பட்டுள் ளன.

சர்வதேச தரத்துக்கு அமைய குற்றச் செயல்க ளுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக் கத்தை ஏற்படுத்தல் ஆகியன தொடர்பில் யதார்த் தமான, நம்பகமான பொறிமுறைகளை உரு வாக்குவதன் மூலம் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முடியும். போர் கார ணமாக பாதிக்கப்பட்ட அனைத்து இனச் சமூகங் கள் மற்றும் அவர்களது உறவினர்கள் ஒரே விதமாக கவனிக்கப்பட வேண் டும்.

சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்தும் ஆக்கபூர்வ மான உறவுகளை இலங்கை பேணவேண்டும். இவ்வாறான முயற்சிகளின் மூலம் இலங்கை யில் அமை தியான, சுபீட்சமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும்- என்றார். (த-வ)

## இலங்கையில்

மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மோதல்கள் இடம்பெற்ற காலங்களில் இலங்கை தனது வரலாற்றின் மிகவும் இருண்ட பக்கங் களை அனுபவித்துள் ளது. இது சகல சமூகத்தவர்களுக்கும் மிக மோச மான துயரங்களை ஏற் படுத்தி யுள்ளது,

பொறுப்புக்கூறுதல் என்பது வெறுமனே நீதியுடன் மாத்திரம் தொடர்பு பட்ட விடயம் மாத்திர மல்ல. நல்லி ணக்கம், அமைதி மீள நிகழாமை ஆகியவற்றுட னும் தொடர்புபட்ட விடயம் இது. இலங்கையின் வரலாற்றில் புதிய சமாதான அத்தியா யத்தை ஆரம்பிப்பதற்கு இந்த காயங் களை உரிய முறையில் ஆற்ற வேண்டும்,

சர்வதேச மனித உரிமை சட்டத் தராதரங்களைப் பூர்த்தி செய்ய கூடிய பொறுப்புக்கூறும் மற் றும் நல்லிணக்கப் பொறிமுறை களை ஏற்படுத்தவேண்டும். இது மிகவும் கடினமான வழியை ஏற்படுத்தக் கூடிய செயற்பா டாக அமைய லாம். ஆனால் நாட்டின் நீண்ட கால ஸ்திரத் தன்மை மற்றும் அமைதிக்கு இது அவசிய மானது என அவர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, தனது மக்களைப் போர்க்குற் றங்கள், இனப்படு கொலை, இனச் சுத்திக ரிப்பு, மனித குலத்துக்கு எதிரான குற் றங்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கே முக்கியமாக உள்ளது. இதன் கார ணமாக அவற்றுக் குக் காரண மானவர் களை நீதியின் முன் நிறுத்தி – மீண்டும் இவை நிகழா மல் செய் யும் கடப்பாடும் –இலங்கை அரசுக்கு உள்ளது என பாதுகாப்பு, பொறுப்புக் குறித்த ஆலோசகர் ஜெனிபர் வெல்ஸ் தெரிவித்துள்ளார். (த-வ)

USAID VEGA/BIZ+தொடர்பான கலந்துரையாடல்

கடந்த 13.08.2015 ஆம் திகதி இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வர்த்தக தொழில்துறை மன்றத்தில் இடம்பெற்ற USAID VEGA/BIZ + கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இன்று (19.09.2015) முற்பகல் 10.00 மணியளவில் எமது மன்றத்தில் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை யின் யாழ்.அலுவலக அதிகாரிகள் மற்றும் USAID நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் விசேட கலந்துரையாடல் ஒன்று முதலீட்டாளர்களின் வேண்டுகோளிற்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் ஈடுபட ஆர்வமுடைய வர்கள் தவறாது கலந்து பயன்பெறும்வண்ணம் வேண்டிக்கொள்ளப் படுகின்றீர்கள். இக்கலந்துரையாடல் எமது மன்றத்தின் தலைவர் K.விக்னேஸ் தலைமையில் இடம்பெறும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம். (சி.18886) (13.15.17)

தகவல்: தலைவர், வர்த்தக தொழில்துறை மன்றம் யாழ்ப்பாணம்.

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் பணியாற்ற
ஆலய சிவாச்சாரியார்கள் தேவை
விண்ணப்ப முடிவு திகதி : 02-10-2015
SHRI KANAGA THURRKAI AMMAN TEMPLE TRUST
5, Chapel Road, London. W13 9AE
Tel: 0208 810 0835 Email : info@ammanealing.com

துயர் பகிர்கின்றோம்

எமது அலுவலகத்தில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி செ. ராதிகா அவர்களின் அன்புத் தந்தை

ஐயம்பிள்ளை கார்த்திகேசு

அவர்கள் இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரி வால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம் தீவகம் தெற்கு, வேலணை.
பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.
(64694) (10.17)

அரியாலை
சரஸ்வதி சனசமூக நிலையம்

அமரர் "கனகலிங்கம் மகாலிங்கம்" ஞாபகார்த்த வடமாகாண ரீதியிலான பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி - 2015

| பிரிவுகள்: | ஒற்றையர் | இரட்டையர் |
|---|---|---|
| ★ 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் | " | " |
| ★ ஆண்கள் (Open) | " | " |
| ★ 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் | " | " |
| ★ பெண்கள் (Open) | " | " |

விண்ணப்ப முடிவு திகதி: 23.09.2015
இடம்: அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய பூப்பந்தாட்ட மைதானம்
தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.
0776179030 ந.குகதாஸ்
0776214075 ப.பிரதீபன்
0773095745 நி.கவிந்தன்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய நிர்வாகம்.
19.09.2015 (64692) (10.17)

மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



விநாசித்தம்பி காசிலிங்கம்
(முன்னாள் பங்காளர்- No:1 மதுபானசாலை)
திதி பூர்வஷஸ்டி (19.09.2015)

ஆண்டுகள் மூன்றென்ன - மூவாயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமோ எம் இதயம் - எம்
ஆருயிர் அப்பா - ஆண்டவன் அடியில் இருந்து
எம்மை ஆசீர்வதியுங்கள் எம் ஆருயிர் அப்பா

64/4 போற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.
(64690) (10.17)

## சர்வதேச

நடைபெற்ற பின்னர், புதிதாக அமைந்துள்ள தேசிய அரசு பாதிக் கப்பட்ட மக்களுக்குநீதியை வழங் கும்என்றுஐநா.தவறாகநம்புகிறது.

இலங்கையில் தவறிழைத்தவர் கள் தண்டனையில் இருந்து தப்பும் கலாசாரம் நிலவுகிறது. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் பதவி வழங்கப்பட் டமை அதற்கு ஒரு எடுத்துக்காட் டாக அமைகிறது என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் பி.பி.சி. செய்திச் சேவையிடம் கருத்து வெளியிட்ட திருகோண மலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல், ஒற் றுமை இல்லாமல் சமாதானம் ஏற் படாது. அந்த ஒற்றுமை ஏற்பட நீதி வழங்கப்படவேண் டும். அப்படியான நீதி, சர்வதேச விசா ரணை ஒன்றின் மூலமே வழங்கப் பட முடியும் என்று நாங்கள் நம்பு கிறோம்.

உள்நாட்டு விசாரணை முறை யாக நடைபெறாது என்பதே எங் களது கருத்து. சர்வதேச விசா ரணை நடைபெறும் போது அது பாரபட்சமற்றதாக இருக்கும். அது பொறுப்புக்கூறல் மற்றும் நீதி வழங்குவதற்கு உதவும். சாட்சிகளுக்கு பாதுகாப்பான சூழல் உரு வாக்கப்படுவது மிக வும் அவசியம். அது இல்லா விடில் விசாரணை உரிய பயனை அளிக்காது என்று குறிப் பிட்டார். (சு-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை—சீனப் படைப் பயிற்சியில் மறைமுக நிகழ்ச்சி நிரல் கிடையாது

*சீனப் பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு*

கொழும்பு,செப்.19

சீன– இலங்கைப் படைகளுக்கு இடையிலான பயிற்சித் திட்டங்களில் எந்த மறைமுக நிகழ்ச்சி நிரலும் கிடையாது என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் மூத்த கேணல் லி செங்லின் தெரிவித்துள்ளார்.

புதிதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகப் பொறுப்பேற்ற ருவான் விஜேவர்த்தனவை பாதுகாப்பு அமைச்சில் நேற்றுச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அப்போது கருத்து வெளியிட்ட மூத்த கேணல் லி செங்லின்,

ஆண்டு தோறும் 200 இலங்கைப் படையினருக்குச் சீனாவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அத்துடன் இலங்கையின் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்திலும், பட்டலந்த அதிகாரிகள் பயிற்சி கல்லூரியிலும் சீனப் பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சி பெறுகின்றனர். இலங்கை படையினரால் நடத்தப்படும் நீர்க்காகம் என்ற கூட்டுப் போர்ப் பயிற்சிக்கும் சீனா தனது படையினரை அனுப்பியுள்ளது.

எமது இராணுவ உறவுகள் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலானது. இராணுவ உறவுகளை விட இரு நாடுகளுக்கும் இடையில் பாரம்பரிய உறவுகளும் இருந்துள்ளன என்று தெரிவித்தார். (த–வ)

# ஜெனிவாவில் இலங்கை குறித்த அவப்பெயரை அகற்ற வேண்டும்

## என்பதே தற்போதைய தேவை என்கிறார் பிரதமர்

நாடு பெரிய சிக்கலில் இருந்து விடுபட்டுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக காணப்படக்கூடிய ஜெனிவாவில் இலங்கை கொண்ட நிகழ்ச்சி நிரல் ஒன்று இருப்பதை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே எமது இப்போதைய தேவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும்போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இணைந்த, ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பு ஒன்று நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்தினால் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் யாருடைய பெயரும் குறிப்பிடப்படவில்லை. அந்த அறிக்கையில் பாரதூரமான எந்தவொரு விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை.

உள்ளகப் பொறிமுறை ஒன்றின் மூலம் தீர்வு காண்பதற்கு இணங்கியுள்ளோம். இவற்றையும் ஊடகங்கள் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இதேநேரம் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தொடர்ந்து இருந்திருந்தால் கடுமையான விளைவுகளை நாடு சந்தித்திருக்கும்.

நாடு பொருளாதார தடை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

எனினும் இந்த அரசினால் இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் ஏற்படவிருந்த பெரியளவிலான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது.

நாடு தற்பொழுது பயங்கர நிலையிலிருந்து விடுபட்டிருப்பதனால் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இது எமது நாடு. நாம் ஒருபோதும் நாட்டைக்காட்டிக்கொடுக்க மாட்டோம். அடுத்த கட்டமாக நாங்கள் முயற்சிப்பது என்னவென்றால், ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக காணப்படக்கூடிய அவப்பெயர் கொண்ட நிகழ்ச்சி நிரல் ஒன்று இருப்பதை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே எமது இப்போதைய தேவை என பிரதமர் குறிப்பிட்டார். (வ)

## ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு, செப்.19

ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் பிரான்க் வோல்டர் ஸ்டின்மியர் இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளதாக இலங்கைக்கான ஜேர்மனிய தூதரகம் அறி வித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் கிளிநொச்சிக்கும் பயணம் செய்ய உள்ளார். அடுத்த ஆண்டு மே மாதம் ஜேர்மன் இலங்கை பயிற்சி நிறுவகம் ஆரம்பித்து வைக்கப்பட உள்ள நிலையில், நிறுவகத்தின் கட்டுமானப் பணிகளை அமைச்சர் நேரில் பார்வையிட உள்ளார். (வ)


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



கடந்த 20.08.2015 வியாழக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தையா பொன்னுத்துரை**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.09.2015) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால்

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.

**பல புதிய மாற்றங்களுடன் புலமைச்சுடர்**

(2016இல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கானது)




தற்போது தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான புலமைச்சுடரானது. இது வரை புலமை 10 வரை வெளிவந்தது. இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சை முடிவடைந்தமையால் புலமை 11லிருந்து புதுமையான பல மாற்றங்களுடன் முழுமையாக பயிற்சிகளைத் தாங்கிய வண்ணம் வெளிவருகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதியிலிருந்து

புலமைச்சுடரைப் பெற்று உங்கள் பிள்ளைகளை பரீட்சைக்கு தயார்ப்படுத்துங்கள்.

நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு இன்றே எமது சுடர்ஒளி , உதயன் பத்திரிகை முகவர்களிடம் முன்பதிவு செய்துகொள்ளுங்கள். அழைப்புக்களுக்கு

யாழ்ப்பாணம் :- 07765[illegible] வவுனியா,மன்னார் :- 0772772726

மலையகம் :- 0718724056 கிழக்குமாகாணம்:- 0773661093 கொழும்பு:- 0718628379


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்விக்கு

காட்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.
இலங்கை புத்தக வெளியீட்டாளர்களின் சங்கம் 16 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள இந்தப் புத்தகக் கண்காட்சி நாளை மறுதினம் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## பரிந்துரைகளை

தொடர்பில் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றின் மூலமாகக் குற்றவியல் நீதிமன்ற விசாரணை நடத்தப்பட முடியாது என்பதை, தீர்க்கமாக அறிக்கை குறிபிட்டுள்ளமையை நாம் வரவேற்கிறோம்.
உள்நாட்டுப் பொறிமுறை மூலம் குற்றவியல் நீதிமன்ற விசாரணை சாத்தியம் இல்லை என்பதற்கு 30 வருடகாலப் போரினால், இலங்கையின் பாதுகாப்பு மற்றும் நீதித்துறை சிதைவடைந்தும் கறைபடிந்தும் போயுள்ளமை மட்டும் காரணமன்று.
மாறாக, அந்த விசாரணையைக் கொண்டு நடத்துவதற்கு அவசியமாகத் தேவைப்படும் அரசியல் விருப்பு புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட இலங்கை அரசிடமும் இல்லாமையே, உள்நாட்டுப் பொறிமுறை மூலம் குற்றவியல் நீதிமன்ற விசாரணை சாத்தியம் இல்லை என்பதற்கான முக்கிய காரணமாகும்.
கடந்த திங்கட்கிழமை ஐ.நா மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள, தம்மீது நம்பிக்கை வைக்குமாறு வினயமாக உறுப்பு நாடுகளைக் கோரியிருந்தார். ஆனால் தாம் நடத்தும் உள்நாட்டு விசாரணை மூலம் இலங்கையின் இராணுவத்தின் நற்பெயரைக் காப்பாற்றுவோம் என அவர் அதே உரையில் தெரிவித்ததன் மூலம் தம் மீது நம்பிக்கை வைக்கும் வண்ணம் அவர் கோரியமையின் உண்மைத் தன்மை இல்லாமல் போயிற்று.
கலப்புப் பொறிமுறை
கருத்தளவில் கலப்பு முறையின் பொருத்தப்பாடு தொடர்பாக நாம் இப்போது நிலைப்பாடெடுப்பது அவசியமற்றது. ஜெனிவா அறிக்கை கூறுவது போன்று எந்த வொரு பொறிமுறையும் பாதிக்கப்பட்ட மக்களோடு கலந்துபேசி அவர்களின் பங்குபற்றுதலுடன் உருவாக்கப்பட வேண்டியது. இலங்கை அரசு இது தொடர்பில் தனது முன்மொழிவுகளைப் பகிரங்கமாக முன் வைக்கும்போது நாம் எமது கருத்துக்களை முன் வைப்போம்.
ஓர் கலப்புப் பொறிமுறை உண்மையிலேயே கலப்பு முறையாக இருப்பதற்கு வெறுமனே வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் நியமிக்கப்படுவது போதுமானதன்று. அந்தப் பொறிமுறையானது பகுதியளவில் தானும் ஐ.நா.வால் தலைமை தாங்கப்படுவதாகவும் சர்வதேச சட்ட ஆணையின் அடிப்படையிலானதாகவும் இருக்க வேண்டும்.

**நம்பகத்தன்மை கேள்விக்குறியாகக் கூடாது**

உள்ளகப் பொறிமுறைக்குச் சர்வதேச நீதிபதிகளை இலங்கை அரசு நியமிப்பதானது கலப்புப் பொறிமுறையாக ஏற்றுக் கொள் எப்பட முடியாது. முன்வைக்கப்படும் எந்தவொரு கலப்புப் பொறிமுறையிலும் அதன் சர்வதேசப் பங்களிப்பானது உள்ளகப் பங்களிப்பை விட மேலோங்கியதாகவும் – முதன்மையானதாகவும் இருக்கவேண்டும். இதுவே, இலங்கையில் இடம்பெறக்கூடிய நியாயமான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான குறைந்தபட்சத் தகுதியாக இருக்கவேண்டும்.
அல்லாவிடில் கலப்புப் பொறிமுறையின், உள்ளூர் அங்கமானது கலப்புப் பொறிமுறையின் நம்பகத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும். இறுதியில் கலப்புப் பொறிமுறையின் சர்வதேச அங்கம் உயர்வானதாக இல்லாதவிடத்து, எந்தக் காரணங்களுக்காக உள்ளகப் பொறிமுறையை ஜெனீவா அறிக்கை நிராகரிக்கிறதோ அதே காரணங்களுக்காக கலப்பு முறையையும் நிராகரிக்க வேண்டிய நிலை உருவாகலாம்.

**ரோம் சாசனம்**

ரோம் சாசனத்தை ஏற்றுக் கொண்டு இலங்கை இணைந்து கொள்ள வேண்டும் என்ற அறிக்கையின் பரிந்துரையை நாம் வரவேற்கிறோம். இலங்கை அவ்வாறாக அந்தச் சாசனத்தில்; இணைந்து கொள்ளும் போது கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களுக்கான நியாயாதிக்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு வழங்கும் வகையில் ஒரு பிரகடனத்தையும் தாக்கல் செய்யவேண்டும் என நாம் கருதுகிறோம். பொறுப்புக்கூறல் தொடர்பான நியாயமான கரிசனையை வெளிப்படுத்துவதற்கு இது உதவும்.
மேலும் அறிக்கையின் நிலைமாறு நீதி தொடர்பிலான விரிவான பரந்துபட்ட அனைத்து பரிந்துரைகளையும் நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம். மேலும் ஜெனிவா அறிக்கையானது ஒடுக்கு முறைக்கு காரணமான கட்டமைப்புக்கள் தொடர்ந்தும் இலங்கையில் நிலவுகையில் இருப்பதைச் சுட்டிக் காட்டுவதை நாம் கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம். இந்தக் கட்டமைப்புக்கள் நீக்கப்பட்டால் அன்றி தொடர்ந்து குற்றங்கள் நிகழ்வதை தடுக்க முடியாது.

**தொடர் கண்காணிப்பு தேவை**

ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் தனது கவனத்தை தொடர்ந்து செலுத்த வேண்டும். தற்போதைய கூட்டத் தொடரில் முன்வைக்கப் படவிருக்கும் பிரேரணையில் ஜெனீவா அறிக்கை முழுமையாக அதன் சொல்லிலும் அர்த்தத்திலும் வெளிப்படவேண்டும்.
குறிப்பிட்டகால வரையறைக்குள் அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால் ஐ.நா அங்கங்களும், உறுப்பு நாடுகளும் ஐ.நா. பாதுகாப்பு சபை மூலம் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் நாம் கேட்டுக்கொள்கிறோம். – இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## புலி ஆதரவாளர்

சாட்டியுள்ளார்.
போரில் கொல்லப்பட்டவர்கள் சிவிலியன்கள் என்று ஐ.நா விசாரணை அறிக்கை கூறுகின்றது. ஆயினும் கொல்லப்பட்டவர்கள் சிவிலியன்கள்தானா என்று யாருக்குத் தெரியும்? புலிகள் சீருடை அணிந்து கொண்டா போர் செய்தனர்? இல்லை, சிவில் உடையிலும் போரில் ஈடுபட்டனர்.
இலங்கையின் 20 வருட நிலைமைகள் பற்றித் தெளிவற்ற நபர்களால் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து தயாரிக்கப்பட்டதே இந்த அறிக்கை. இதில் உள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நான் நிராகரிக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
பெரிய அளவிலான ஊழல், மோசடி குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகி வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–
போர் நடந்தபோது இருந்த நாட்டுத் தலைவர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளை தண்டிக்க வேண்டிய தேவை புலம்பெயர் தமிழர்களுக்கு உண்டு. அதனையே ஐ,நா அறிக்கை மூலம் செயற்படுத்த நினைக்கின்றனர்.
இலங்கை அரசு அதற்கு இடமளித்து இணக்கம் தெரிவிக்கும் என நான் நினைக்கவில்லை. ஆனால் இராணுவ வீரர்கள் எவரேனும் தவறு செய்திருந்தால் அவர்களைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்கவேண்டும். அதனை விடுத்து முழு இராணுவத்தையும் இராணுவத்தின் கட்டளையிட்ட செயல்களையும் தவறு என்று சொல்ல முடியாது.
எனவே அறிக்கையில் உள்ள சகல குற்றச்சாட்டுக்களையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் நிராகரிக்கிறேன். ஒரு இனத்தை இலக்கு வைத்து ஒருபோதும் தவறான கட்டளைகளை நாம் பிறப்பிக்கவில்லை. போரின்போது பாலியல் துன்புறுத்தலை ஒரு ஆயுதமாக பயன்படுத்தியதாக அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பெண்கள் பலரை இராணுவம் எப்படி வன்புணர்வுக்கு உட்படுத்தும்?
இலங்கையில் 20 வருடங்கள் ஏற்பட்ட நிலைமை குறித்து தெளிவு இல்லாதவர்கள் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளனர். புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய தகவலை வைத்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
30 வருட காலப் போரை முடித்து வைத்த எம்மை இன்று விசாரணைக்கு என்று அழைத்து அலைய வைக்கின்றனர். நேற்று (நேற்று முன்தினம்) எப்சிஐடி இன்று (நேற்று) ஜனாதிபதி ஆணைக்குழு. இதற்குப் போர்க் காலமே பரவாயில்லை. ஏன் போரை முடிவுக்குக் கொண்டு வந்தேன் என்று உள்ளது. போர் முடியாமல் இருந்திருந்தால் இப்படி வர வேண்டிய அவசியம் இல்லை தானே–என்றார்.
இறுதிப்போரின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய கோத்தபாய ராஜபக்ச, வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சுடுமாறு உத்தரவிட்டவர் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## நிரந்தர

பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–
ஐ. நா. மனித உரிமை சபையின் விசாரணை அறிக்கையை இலங்கைக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஐ. நா மனித உரிமைகள் சபைப் பிரச்சினை மிகுந்த நிதானத்துடன் கையாளப்படவேண்டும். படையினரைப் பாதுகாக்கும் நோக்கில் தனிநபர் சட்டப் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட உள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்த நடவடிக்கையானது பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். இந்த சட்டம் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை மன்னிக்கும் வகையிலானது. குற்றம் செய்யாதவர்களை நாமே மன்னிக்கும் வகையில் சட்டம் இயற்றுவது பிரச்சினைகளை உருவாக்கக் கூடும்.
ஐ.நா. அறிக்கை வெளியிடும்போது எந்த இடத்திலும் இலங்கையில் போர்க்குற்றம் இடம் பெற்றது என்றும் சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் திட்டவட்டமாக குறிப்பிடப்படவில்லை. மாறாக போர்க் குற்றம் இடம் பெற்றுள்ளதா? என்பது தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையில் ஆராய்ந்து பாருங்கள் என்றே பரிந்துரை செய்தது.
ஆனால் இதனை விளங்கிக் கொள்ளாத சில தரப்பினர் முன்னாள் தலைவர்களைத் தண்டிக்கப் போகிறார்கள் என்ற விதத்தில் பொய்யான கருத்துக்களை வெளியிடுகின்றனர். அதேவேளை அவர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் ஐ.நா. அறிக்கையைப் பூதாகரமாக காண்பித்து இனவாதத்தை கட்டவிழ்த்து விட முன்னெடுக்கும் முயற்சியை உடனடியாக நிறுத்தவேண்டும்.
அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1984 ஆம், 1985 ஆம் ஆண்டுகளில் போர் ஆரம்பித்த காலப்பகுதியில் நாட்டில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறியபோதும் மேற்குறித்த தரப்பினரே அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். அது மட்டுமன்றி குறித்த தரப்பு இந்து–லங்கா ஒப்பந்தம் தொடர்பில் பேச்சு இடம் பெற்ற போதும் எதிர்த்தது. ஆனால் இன்று அதனாலேயே எமது நாட் டைக் காப்பாற்றிக்கொள்ள முடிந் தது.
இவை அனைத்தும் எமக்கு சேறு பூசுவதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள். எம்மீது எவர் சேறு பூசினாலும் அதற்காக நாம் கவலையடையப் போவதில்லை. நாட்டின் மீது சேறு பூசப்படாமல் காப்பதே எமது தேவையாகும். அதனால் தான் சர்வதேச விசாரணையை தற்போது உள்நாட்டு பொறிமுறையாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். அதற்காகவே தேசிய அரசும் அமைத்தோம் – என்றார். (த-வ-5)

## கரையோரத்தை

கட்கிழமை காலை 7மணி முதல் மு.ப.11 மணி வரை அரச அதிபர் தலைமையில் யாழ். கோட்டைப் பகுதியை அண்டிய கடற்கரை யோரப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.
மேலும் யாழ்.மாவட்டத்தின் ஏனைய கரையோரப் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புடன் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலகத்தின் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (த-ரி5)

## 1000 மடங்கு

சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை நேற்றுப் பிற்பகல் சந்தித்துப் பேசினர்.
இதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தினால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி கருத்து தெரிவித்தார்.
இதன்போது அவர் தெரிவிக்கையில்,
ஜனவரி 8ஆம் திகதி நான் ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் எமது வெளிநாட்டுக் கொள்கைகளில் பெரியளவில் மாற்றம் ஏற்பட்டது. சர்வதேசத்துக்கு எமது நாடு தொடர்பில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குத் தேசிய பொறிமுறை ஒன்றினூடாக தீர்வு பெற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டிலேயே அரசு இருக்கின்றது. ஒருவேளை நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படாமல், மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்திருந்தால், ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தினால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையானது பல மடங்கு கடினமானதாக இருந்திருக்கும்.
அது மிகவும் பயங்கரமானதாக இருந்திருக்கும். நாடு பல்வேறு விளைவுகளைச் சந்திக்க நேரிட்டிருக்கும். மகிந்த ராஜபக்சவின் அரசுதான் சர்வதேசத்துக்குச் சென்று பொய் வாக்குறுதிகளை வழங்கியது. உள்ளக விசாரணை நடத்துவதா கக் கூறியது. இறுதியில் சர்வதேசத் தைப் பகைத்துக் கொண்டது. தற்பொழுது நாடு ஆபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை 1000 மடங்கு கடினத்தன்மை குறைக்கப்பட்டுள்ளது. சர்வதேசம் தற்பொழுது இலங்கை தொடர்பில் தெளிவான நிலையில் உள்ளது. எங்களுக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. நாம் சிறந்த வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுத்து வருகின்றோம்.
ஆகவே இதே நிலைமை தொடர வேண்டுமானால் நாட்டின் தற்போதைய தேவை மகிந்த இல்லாத அரசே–என்றார். (த-வ)

## 2016

வர் துஷ்பிரயோகம், பாலி யல் துஷ்பிரயோகம், குற்றச் செயல்கள் அதிகரிப்பு தொடர்பில் புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனப் பெரிதும் பேசப்படுகிறது. சட்டத்தைக் கடுமையாக்குவது தொடர்பில் கதைக்கப்படுகிறது.
அண்மையில் நான்கரை வயதுச் சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னணியில் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றுமாறு சமூகத்தில் அழுத்தம் எழுந்துள்ளது. இதற்கு முன்னரும் கடந்த வருடங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றபோது சாவுத் தண்டனை நிறைவேற்றம் தொடர்பில் பேசப்பட்டது. நான்கரை வயது சிறுமியின் இறுதிக் கிரியைகளிலும்ஜனாதிபதி அவர்களே சாவுத் தண்டனை விதிக்கவும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
சாவுத் தண்டனை நிறைவேற்றத்தின்போது மனித உரிமை தொடர்பில் குரல் எழுப்பும் சர்வதேச நிறுவனங்கள் இடையூறு ஏற்படுத்தும். ஆனால் உலகில் பிரபல சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சாவுத் தண்டனை விதிக்கப்படுகிறது. அதனால் சாவுத் தண்டனை வழங்குவது தொடர்பில் எனக்கு எதிர்ப்பு இல்லை.
மேல் நீதிமன்றில் சாவுத் தண்டனைவிதிக்கப்பட்ட பின் ஜனாதிபதியின் கையொப்பத்தில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படும். அந்த அதிகாரம் எனக்கு இருக்கின்றபோதும் எதிர்வரும் சில மாதங்களுக்குள் நாடாளுமன்றின் விருப்பத்தை அறிந்து கொள்ள நான் எதிர்பார்க்கிறேன். நாடாளுமன்றில் யோசனை முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லை.
ஆனால் சாவுத் தண்டனை விதிப்பது தொடர்பில் நாடாளுமன்றில் இணக்கம் ஏற்பட்டால் அடுத்த வருடம் தொடக்கம் சாவுத் தண்டனை செயற்படுத்த நான் எதிர்பார்த்துள்ளேன்.
இலங்கை போன்ற நாடுகள் அல்லாது உலகில் மிகவும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சாவுத் தண்டனை செயற்படுத்தப்படுகிறது. மின்சார நாற்காலி, ஊசி ஏற்றல், தூக்கில் போடுதல், சுட்டுக் கொல்லல் போன்ற வழிகளில் சாவுத்தண்டனை செயற்படுத்தப்படுகிறது– என்றார். (த-வ-4)

## புலனாய்வு

செய்துள்ளனர்.
பிரகீத் எக்னெலிகொட காணாமற் போகச் செய்யப்பட்ட காலப் பகுதியில், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகப் பிரிகேடியர் அருண வன்னியாராச்சியே பணியாற்றியிருந்தார்.
இந்த விவகாரம் தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய 10 அதிகாரிகள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளகப் பொறிமுறை என்ற பெயரில் சர்வதேச விசாரணை

## சாடுகின்றார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, செப் 19

இலங்கை இராணுவத்தினரைத் தண்டிப்பதற்காகவே உள்ளக விசாரணை என்ற பெயரில் சர்வதேச விசாரணையை முன்னெடுக்கவே ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை – சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் கிளையாகவே குறித்த விசேட கலப்பு நீதிமன்றம் அமையப்பெற்றுள்ளதாகவும், இதில் மேற்கத்திய வாதத்துக்கு அடிமையான இலங்கையர்கள் ஓரிருவரை உள்ளடக்குவதன் மூலம் அது உள்ளக விசாரணையாக அமையப்பெறாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் இலங்கையர்கள் இன, மத, கட்சிப் பேதங்களுக்கு அப்பால் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த அவர், எதிர்வரும் 27ஆம் திகதி முதல் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய இராணுவத்தின் மீது கைவைக்காதே என்றதொனிப்பொருளில்நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

2001– 2011 க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் சாட்டுகள் தொடர்பில் 255 பக்கங்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஐ.நா. அறிக்கையில் இலங்கை இராணுவத்தின் மீதே கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ள ஒரே ஒரு குற்றச்சாட்டு சிறுவர்களை இயக்கத்தில் இணைத்துக் கொண்டமையாகும். அந்தக் குற்றச் சாட்டுகளும் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றதாகவும், அதனுடன் கருணா தொடர்புபட்டிருந்ததாகவும் பெயர் குறிப்பிடப்பட்டு அந்தக் குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கருணா அரசில் இணைந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பங்குகொண்டமைக்காக அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தித் தண்டிக்கப்பார்க்கின்றனர்.


இருதரப்பும் குற்றம் செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஐநா.அறிக்கையில், இராணுவத் தரப்பினரையே கடுமையாகச் சாடியுள்ளனர். விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டமையால் இருதரப்பு என்று எதுவும் இப்போது இல்லை. ஆகவே, இந்த அறிக்கை ஒருதரப்பை இலக்காக வைத்தே முன்வைக்கப்பட்டுள்ளது. சிறப்புக் கலப்பு நீதிமன்றத்தின் மூலமே அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனைச் சர்வதேசச் சட்டங்களுக்கு அமையவே முன்னெடுக்கவுள்ளனர். சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் கிளையாக செயற்படவுள்ள இதில் உள்ளக விசாரணை என்ற வார்த்தைக்கே இடமில்லை. பெயரளவில் அது குறிப்பிடப்பட்டாலும் ஓரிரு மேற்கத்தியவாதத்துக்கு அடிபணிந்துள்ள இலங்கையர்களை இணைத்துக்கொண்டு அதனை முன்னெடுப்பார்கள். அதனால், ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானத்துக்கு இதன் மூலம் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சர்வதேச விசாரணையிலிருந்து நாட்டைப் பாதுகாத்துள்ளோம்" எனப் பிரதமர் ரணில் கூறுகின்றார். எனினும், இவர்களே மக்களை ஏமாற்றும் வடிவில் சர்வதேச விசாரணையை இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

சர்வதேசத்தின் பொம்மையாகியுள்ள இலங்கை அரசு தொடர்பில் நாங்கள் விழிப்பாக இருக்கவேண்டும். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சர்வதேசத்தைத் திருப்திப் படுத்தும் வகையில் முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பிலும் சிக்கல்கள் உள்ளன–என்றார். (த–சி)

# உண்மை கண்டறியப்பட்டு நீதி வழங்கப்படவேண்டும்

## ஐ.நா அறிக்கை குறித்து சம்பந்தன் கருத்து



கொழும்பு, செப் 19

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைவாக உண்மை கண்டறியப்பட்டு நீதி வழங்கப்படவேண்டும். இதுவே தமிழ் மக்களினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் நிலைப்பாடாக உள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 2001ஆம் ஆண்டுக்கும், 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத் தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நடத்திய விசாரணையில் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஜெனிவாவில் வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது. இதனை நான் முழு மனதுடன் வரவேற்கின்றேன்.

இந்த அறிக்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும், இலங்கை வெளிவிவகார அமைச்சரும் தமது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இந்த அறிக்கையின் ஊடாக இலங்கையில் நீண்டகாலமாகத் தொடரும் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வாய்ப்பு உருவாகியுள்ளது.

தமிழ் மக்கள் சார்பில் எமது நிலைப்பாடு என்னவெனில், ஐ.நா. விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைவாக உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் வழங்கப்படவேண்டும். நடைபெற்ற அக்கிரமங்கள் மீண்டும் நடைபெறாமல் உறுதியளிக்கப்படவேண்டும். இதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

இவை நடைபெறுவதாக இருந்தால் நியாயமான–நிரந்தரமான– நடைமுறைப்படுத்தக்கூடிய – நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வை ஏற்படுத்தலாம். இந்தத் தீர்வு கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்விதமான தீர்வின் ஊடாகத் தான் நாட்டில் நிரந்தர நல்லிணக்கம் ஏற்படும். இதனைஅடைவதற்குநாம்எல்லோரும் உழைக்கவேண்டும்– என்றார். (த–சி)

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விநியோகம்

## இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, செப் 19

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்துப் போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவரைக் கினிகத் தேனைப் பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

இதன்போது அவர்களிடம் இருந்து 370 போதைப்பொருள் மாத்திரைகள் மீட்கப்பட்டதாகக் கினிகத்தேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்துக் கஞ்சா கலக்கப்பட்ட மதன மோதகப் போதைப்பொருள் மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து, பொலிஸார் மாத்திரை கொள்வனவுக்காக ஒருவரை மேற்படி சந்தேக நபர்களிடம் அனுப்பும்போதே மேற்படி இருவரும் கையும் களவுமாகப் பொலிஸாரிடம் மாட்டியுள்ளனர்.

இதன்போது கைதானவர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்கள், கினிகத்தேனைக்குட்பட்ட பல பகுதிகளில் போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இருவரும் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, செப் 19

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தவுள்ள குழுவினர் தன்னிடம் விசாரணைகளை மேற்கொள்வார்களாயின் அதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதேவேளை, இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதன் மூலம் உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும் எனத்தெரிவித்த அவர், தான் தொடர்ந்தும் இராணுவத்தளபதியாக இருந்திருந்தால் அவ்வாறான ஏதும் இடம்பெற்றிருக்குமாயின் விசாரணைகளை நடத்தியிருப்பேன் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

2009, மே.18 இறுதிக் கட்டப் போரின் போது சரணடைந்தவர்களை இலங்கை இராணுவம் கொலை செய்ததாக ஐ.நா. தொடர்ந்தும் குற்றச்சாட்டி வருகின்றது. அவ்வாறான ஏதும் இடம்பெற்றிருக்குமாயின் விசாரணை நடத்தப்படவேண்டும். இது தொடர்பில் பேசியமையினாலேயே நான் சிறையில் அடைக்கப்பட்டேன். குற்றம் இழைத்தவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படவேண்டும். நான் இராணுவத் தளபதியாக இருந்த போது எனக்குத் தெரியாமல் அவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருப்பின், நான் அப்பதவியில் தொடர்ந்தும் இருந்திருப்பின் விசாரணைகளை முன்னெடுத்திருப்பேன். சித்திரவதை செய்தல், காணாமல் [illegible] [illegible] களுக்கான நிவாரணப் பொருள் களைத் தடுத்தல்,பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் தடுத்து வைத்தல், அதில் சிலர் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளானமை போன்ற குற்றச் சாட்டுக்களை நான் நிராகரிக்கின்றேன்.

ஆனால், அவற்றுக்கான சாட்சியங்கள் இருக்குமாயின் அதன் மூலம் குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை பெற்றுக்கொடுக்க முன் வரவேண்டும்.

ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் உண்மை என எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அனைவருக்கும் கருத்துரிமை உள்ளது. இது தொடர்பில் இலங்கை அரசோ, அரசியல்வாதிகளோ அச்சமடைந்து புலம்பத் தேவையில்லை. இது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒன்றல்ல.

இலங்கை மீதுள்ள அபகீர்த்தியை சரிசெய்யக்கூடிய சந்தர்ப்பமாகவும் இதனைப் பார்க்கலாம்.நான் தொடர்ந்தும் இராணுவத் தளபதியாக இருந்திருந்தால் சட்டத்துக்கு எதிரான செயற்பாடுகள் எனக்குக் கீழ் இடம்பெற்றிருக்குமாயின் அவற்றுக்கு உச்சகட்டத் தண்டனையைப் பெற்றுக் கொடுத்திருப்பேன்.

போர்க்குற்றம் தொடர்பாக என்னிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு எந்த விதமான அச்சமும் இன்றிப் பூரண ஒத்துழைப்பை வழங்குவேன். நான் அறிந்த வகையில் இராணுவத்தில் அவ்வாறான ஏதும் இடம்பெறவில்லை. நான் அறியாது ஏதேனும் இடம்பெற்றிருக்குமாயின் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்– என்றார். (த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாச்சித்தொடர்கள் மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்படும் ஆரம்பக் கட்டப் பணிகள் யாழ்.மாவட்டதாச்சிச் சங்கத்திடம்

## அமைச்சர் குருகுலராஜா தெரிவிப்பு

வலி.வடக்கு, செப். 19
தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான தாச்சி விளையாட்டும் அடுத்தாண்டு முதல் மாகாண மட்டத்தில் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் என வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்: மேலும் தெரிவிக்கையில் – எமது பாரம்பரிய விளையாட்டுக்களை வளர்த்தெடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எமக்கு உண்டு. இந்த வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தாச்சி விளையாட்டை வளர்த்தெடுக்கும் வகையில் ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளேன். இதன் அடிப்படையில் அடுத்தாண்டு முதல் வடமாகாண பிரதேச செயலாளர் பிரிவுகளில் தாச்சி விளையாட்டை நடத்துவதுடன் இதனை மாவட்டம் மாகாணம் என்று முன்னெடுத்துச் செல்லவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளேன். இந்தப் போட்டிகளை பாடசாலைகள் மட்டத்திலும் அறிமுகம் செய்து நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொடர்களை நடத்தும் பொறுப்புக்கள் முதற் கட்டமாக தாச்சி சங்கத்திடம் ஒப்படைக்கப் படவுள்ளது – என்றார். (ம–86)



# ஞானம்ஸ் வி.கழகத்தின் இறுதியாட்டங்கள் நாளை



மாங்குளம், செப். 19
ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் மூன்று பிரிவாக நடத்தப்பட்டுவந்ததுடுப்பாட்டத்தொடரின் இறுதியாட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் பிற்பகல்ஒரு மணிக்குநடைபெறவுள்ளது.
10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரின் இறுதியாட்டத்தில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும், 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரின் இறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகமும், 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரின் இறுதியாட்டத்தில் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மைக்கல் அணி அல்லது இணுவில் கலையொளி அணியும் (இரண்டாவது அரையிறுதிஎயாட்டத்தில் வெற்றி பெறும் அணி) மோதவுள்ளன.
(ம–422)



பூப்பந்தாட்டத் தொடரில் நடப்பு வருடத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி தரப்படுத்தலில் முதலிடம் பெற்ற சாய்னா நேவாலை இந்தியப் பிரதமர் மோடி நேரில் அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். மோடிக்கு சாய்னா பூப்பந்தாட்டத் துடுப்பு ஒன்றை பரிசாக வழங்கினார். (ம)

## மாவத்தை அணி இலகு வெற்றி

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளை ஞர் கழகமும் இணைந்து சங் கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை அணியை எதிர்த்து அராலி மாவத்தை அணி மோதிக் கொண்டது. இதில் அராலி மாவத்தை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

# தேசியத்தில் முல்லையை பிரதிநிதித்துவம் செய்யும் வீர, வீராங்கனைகளுக்கு சீருடைகள்

வலி.வடக்கு, செப். 19
நடைபெற்றுவரும் தேசிய மட்ட போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ள வீர, வீராங்கனைகளுக்கு வட மாகாண உடற்கல்வி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.
போரினால் பொருளாதார ரீதி யாக சிக்கல்களைச் சந்தித்துள்ள வீர வீராங்கனைகளின் பின்னடைவுகளைத் தவிர்க்கும் வகையில் புலம்பெயர் நாட்டில் வாழும் எஸ். விஜயகுமார் என்பவரின் ஆதரவுடன் பெறப்பட்ட நிதி உதவியின் மூலம் இந்தச் சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டு நேற்றுமுன் தினம் குறித்த வீர, வீராங்கனைகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
(ம–23–86–433)



# சம்பியனானது நல்லூர் பிரதேச இளைஞர் மன்றம்

வலி.வடக்கு, செப். 19
யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண் களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் நல்லூர் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி மாவட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வலைப்பந்தாட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இறுதியாட்டத்தில்உடுவில்பிரதேசஇளைஞர் சேவைகள் மன்ற அணியும் நல்லூர் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணியும் மோதிக் கொண்டன.
ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை ஆதிக்கம் செலுத்திய நல் லூர் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி 15:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணியை வீழ்த்தி, யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ம–86)



## இன்றைய மோதல்கள்



**ஏ.எல். வி.கழகத்தொடர்**
யாழ்ப்பாணம், செப். 19
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித் துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அராலி அணி மோதவுள்ளது.
அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கா[illegible] பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில்இன்றுசனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதவுள்ளது. (ம–23)

**நியூட்டன் வி.கழகத் தொடர்**
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளை யாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம–108)

## கலைமதியிடம் வீழ்ந்தது நியூஸ்ரார்

யாழ்ப்பாணம், செப். 19
அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.நியூஸ்ரார் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக்கொண்டது. இதில் நவிண்டில் கலைமதி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தாரகை வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 19

பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கிராஞ்சி, செந்தாரகை விளையாட்டுக்கழகம் நடத்திவரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு: புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் அணியை எதிர்த்து பூநகரி அண்ணா அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென்.மேரிஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரணைமாதாநகர் . சென்.மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தோட்டவெளி ஜோசப்வாஸ் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து, சமநிலை தகர்ப்பு உதைகளில் தோட்டவெளி ஜோசப்வாஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.ஜேம்ஸ் அணியை எதிர்த்து கிராஞ்சி செந்தாரகை அணி மோதியது. இதில் கிராஞ்சி செந்தாரகை அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஐந்தாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென். மேரிஸ் பி அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் பி அணி மோதியது. இதில் இரணை மாதா நகர் சென்.மேரிஸ் பி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பூநகரி நண்பர்கள் அணியை எதிர்த்து பள்ளிக்குடா இளந்தளிர் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பூநகரி நண்பர்கள் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கலைஒளி அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிக்குடா இளந்தளிர் அணியை எதிர்த்து வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணி மோதியது. இதில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# சங்கா, மகேல மீது கடுமையான விமர்சனம்

## முன்வைத்தார் முன்னாள் தலைவர் ரணதுங்க




இலங்கையின் முன்னாள் நட்சத்திர வீரர்களான சங்கக்கார, மகேல ஜெயவர்த்தனஆகியஇருவர்மீதும்இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க கடுமையான விமர்சனங்களை மீண்டும் முன்வைத்துள்ளார். சங்கா, மகேலஆகிய இருவரும் இளம் வீரர்களுக்கான வாய்ப்புக்களை உரிய முறையில் வழங்காது துடுப்பாட்ட வரிசையில் இலங்கையின் எதிர்காலத்தை மழுங்கடித்தனர் என்பதே ரணதுங்கவின் விமர்சனத்தின் சாராம்சம் ஆகும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சரும், முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவருமான ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது; நீண்ட காலத்துக்கு சங்கக்காராவும், ஜெய வர்த்தனவும் துடுப்பாட்ட வரிசையில் முன்னணியில் விளையாடி வந்தனர். இதனால் இளம் வீரர்களுக்குப் போதியளவு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால் தற்போது துடுப்பாட்ட வரிசையில் இலங்கை அணி ஜொலிக்க முடியாமல் இருக்கிறது. நான் விளையாடிய காலத்தில் முதலில் 4ஆவது இடத்தில் களமிறங்கினேன். பின்னர் இறுதிக் காலங்களில் 7ஆவது இடத்தில் ஆடியிருந்தேன். தற்போது கிரிக்கெட் வீரர்களின் ஒழுக்கம் பற்றி திருப்தி அடைய முடியாது. சங்கக்கார 3ஆவது இடத்திலும், மகேல ஜெயவர்த்தன 4ஆவது இடத்திலும் நீண்ட காலம் துடுப்பெடுத்தாடியிருந்தனர். இளம் வீரர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள இவர்கள் இருவரும் சந்தர்ப்பம் வழங்கவில்லை. இதற்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் பொறுப்புச் சொல்ல வேண்டும். நாட்டை முதனிலைப்படுத்தியே விளையாட்டு வீரர்கள் தொடர்களில் பங்கேற்க வேண்டும். பணத்தையும் ஏனைய நலன்களையும் முதன்மைப்படுத்தக் கூடாது. என்றார். (ம)







## ரொனால்டோவை விட மெஸ்ஸி திறமையானவர்

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸிக்கு எவரும் இணையாக மாட்டார்கள் என பார்சிலோனா அணியின் பயிற்சியாளர் லூயிஸ் என்ரிக் தெரிவித்துள்ளார்.

மெஸ்ஸி தொடர்பாக அவரது பயிற்சியாளர் தெரிவித்ததாவது உதைபந்து உலகின் மிகச்சிறந்த வீரர் மெஸ்ஸி, அவருக்கு எவரும் இணையில்லை. ரியல்மட்ரிட் நட்சத்திர வீரர் ரொனால்டோவைக் கூட அவருடன் ஒப்பிட முடியாது.

ரொனால்டோ சிறந்த வீரர். அவர் ஏராளமான கோல்களை அடித்துள்ளார். அவர் முழுமையான வீரர்தான். ஆனால், இதுவரை எவரும் செய்யாததை, எவராலும் முடியாததை மெஸ்ஸி செய்கிறார். மெஸ்ஸியை வேறு எவருடனும் ஒப்பிட முடியாது. உலகின் மிகச் சிறந்த வீரர் மெஸ்ஸி. மெஸ்ஸி களத்திலிருக்கும்போது, அனைத்துமே பார்சிலோனா அணிக்குச் சாதகமாக மாறிவிடும். என்னைப் பொறுத்தவரை அவர் மற்ற வீரர்களை விட ஐந்து அடிகள் மேலே இருக்கிறார். அவர் களத்தில் செய்வதை வேறு எவராலும் செய்ய முடியாது. அது ஒப்பிடமுடியாதது-என்றார். (ம)

# மற்றுமொரு களச் சாவு



தென்னாபிரிக்காவின் குத்துச்சண்டை வீரரான மிஸ்வான்லே கோம்போலா போட்டியொன்றின் பொழுது நொக் – அவுட் செய்யப்பட்டுச் சாவடைந்த சம்பவம் குத்துச்சண்டை உலகில் பெரும் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த குத்துச்சண்டைப் போட்டியில் 22 வயதான மிஸ்வான்லே கோம்போலா முதல் சுற்றில் எதிராளியால் நொக்–அவுட் செய்யப்பட்டார். இதில் காயம் அடைந்த மிஸ்வான்லே மைதானத்திலேயே மயங்கிச் சரிந்தார். உடனடியாக அவருக்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அங்குள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். நினைவு திரும்பாமலேயே அவரது உயிர் பிரிந்தது. இந்தத் தகவலை தென்னாபிரிக்க விளையாட்டு அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் நடந்த பிராந்திய குத்துச்சண்டைப் போட்டியில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 28 வயதான டேவிட் பிரவுன் சாவடைந்திருந்தார்.

ஒரே வாரத்தில் குத்துச் சண்டை வீரர்கள் இருவர் களத்தில் மடிந்திருப்பது குத்துச்சண்டை உலகைக் கவலையில் ஆழ்த்தி உள்ளது. (ம)

# தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடர்; மைதானங்களின் விவரங்கள் அறிவிப்பு

வலி வடக்கு, செப். 19

இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட உதைபந்தாட்டத்தொடர் இன்றுமுதல் ஆரம்பமாகி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நிலையில், தொடர்கள் நடைபெறவுள்ள மைதானங்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

15 வயது ஆண்கள் பிரிவுக்கான ஆட்டங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும், 17வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவுக்கான ஆட்டங்கள் அனைத்தும் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானங்களிலும், 19 வயது ஆண்கள் பிரிவுக்கான ஆட்டங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் மைதானங்களிலும் நடைபெறும்.

19 வயது பெண்கள் பிரிவுக்கான முதல்நாள் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும் 20ஆம், 21ஆம் திகதிகளின் ஆட்டங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமாகாணத்தில் திறமையின் தேடல்

உயர்தரம் முடித்து விட்டீர்களா? ஊடகத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கான அழைப்பு இது...... (ஊடக கற்கை நெறி)

வானொலித்துறை, பத்திரிகைத்துறை, விளம்பரத்துறை, செய்தித்துறை, ஒலிப்பதிவுத்துறை மற்றும் சந்தைப் படுத்தல் துறைகளில் தரமான பாடநெறிகள்.

தயாராகுங்கள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க அறிவிப்பாளராக, ஊடக வியலாளராக மிளிருங்கள். இக் கற்கைநெறி இம்மாதம் ஆரம்பம்.

எமது கல்லூரியில் படித்து சான்றிதழ்களைப் பெறாத மாணவர்கள் உடன் தொடர்பு கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும் -
நபீஸ் ஆசிரியர்

ஊடகத்துறை அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.....
பதிவுகளுக்கு முந்துங்கள்
North mass media college (Reg:-3755)
28/3, Vairavapuliyankulam, Station Road,
Vavuniya.
0245615610, 0777475783


## டால்மியாவுக்கு மாரடைப்பு

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரும் இந்திய தெரிவுக்குழுவின் தலைவருமான டால்மியா திடீர் மாரடைப்பு காரணமாக மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமீப காலமாக உடல்நலம் குன்றியிருந்த டால்மியா நேற்று ஏற்பட்ட திடீர் மாரடைப்பு காரணமாக கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. நாளை இந்திய தெரிவுக்குழு டால்மியாவின் தலைமையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கான இந்திய அணியை தெரிவு செய்ய திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



ரியோ ஒலிம்பிக் தொடருக்கான பயிற்சித் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார் இந்தியாவின் தீபிகா குமாரி. (ம)


# After A/L?

IIS உடன் இணைந்து உங்கள் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**BTEC HND in Civil Engineering**
(Construction and the Built Environment)

**BSc. Civil Engineering**

Hotline 071 777 5666

New Batch Starts on **28.09.2015**

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்


**IIS CITY CAMPUS**
200, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்
Tel: 222 8060 Web: www.iis.edu.lk


## முதல்தர வீராங்கனைகளின் ஆட்டம் கிவித்தோவா இடம்பெற வேண்டும்



எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள முதல் எட்டு இடத்திலும் உள்ள முதல்தர வீராங்கனைகள் மட்டும் பங்கெடுக்கும் ரென்னிஸ் தொடரில் கிவித்தோவா இடம்பெற வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் அமெரிக்கன் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்ற பென்னட்டா.

கிவித்தோவா தொடர்பாக பென்னட்டா தெரிவித்ததாவது 'கிவித்தோவா ஒரு திறமையான வீராங்கனை. தொடரின் பாதியில் ஏற்படும் காயங்கள், விலகல்கள் இவையே கிவித்தோவாவின் வாய்ப்புக்களை அதிகமாகப் பறித்துள்ளன. இவை அனைவருக்கும் தெரியும். மற்றும்படி அவர் ஒரு முதற்தர வீராங்கனைதான். இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள முதற்தர வீராங்கனைகளின் தொடரில் கிவித்தோவா இடம்பெறவேண்டும். சொனா, செரபோவா இவர்களின் ஆட்டத்தைவிட கிவித்தோவாவின் ஆட்டத்தை மிகவும் ரசிக்கிறேன்.' – என்றார். (ம)



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இங்கிலாந்து போர் வீரர்களுக்கு உதவும் முகமாக நடத்தப்பட்ட காட்சிப் போட்டியில் உலக லெவன் அணியை எதிர்த்து விளையா[illegible] ஹிரோஸ் லெவன் அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த ஆட்டத்தில் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களை (22 பந்துகளில்) விளாசிய டோனி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (ம)


## நீங்காத நினைவலைகளும் நன்றி நவில்லும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்



கடந்த 16.08.2015
ஞாயிற்றுக்கிழமை
அதிகாலை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி. பொன்மலர் இராசேஸ்வரன்**

மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான முகாமையாளரும், சிறுவர்கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் (INS-GD) இயக்குனரும்

மண்ணில் 03.05.1943
விண்ணில் 16.08.2015

எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய குடும்பத் தலைவி அமரர் திருமதி. பொன்மலர் இராசேஸ்வரன் அவர்கள் இவ்வுலகியலில் வாழ்ந்தபோது அவரை அன்போடு நேசித்துப் பழகியோருக்கும், அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடனடியாக வந்து உரிய உதவிகள் செய்தவர்களுக்கும், அவரின் இறுதிக் கிரியைகளில் பெருந்திரளாகக் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியோருக்கும், தொடர்புசாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்துத் துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளின் போது மயானம் வரைவந்துஆறுதல் அளித்தோருக்கும் மற்றும் இன்றைய அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்டு அமரர் அவர்களுடைய ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோருக்கும், மற்றும் எல்லாவழிகளிலும் எல்லா உதவிகளும் புரிந்து எமக்கு அமைதியைத் தந்தவர்களுக்கும் நாம் எமதுகாலத்தால் அழியாத நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்த தகவலை வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ் கிடைக்கத் தவறிய அனைவரையும் அன்புடன் ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். வீட்டுக்கிருத்திய கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அமரரின் நினைவு மலர் வெளியீடும் இன்று (19.09.2015) சனிக்கிழமை முற்பகல் 10.50 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், நினைவுமலர் வெளியீட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையடி,
யாழ்-காரைநகர் பிரதான வீதி,
மூளாய், சுழிபுரம்.

சகோதர சகோதரிகள் குடும்பமும்,
மருமக்கள், பேறாக்கள்,
பேரப்பிள்ளைகளும்.



# Study in Latvia

(Schengen Visa valid for 27 Countries)

ஐரோப்பிய நாடான Latvia வில் குறைந்த செலவில்
படிக்க, உழைக்க, குடியேற

- No IELTS
- G.C.E A/L 3 Pass
- Very low Course fees
- High Visa Success rate
- English Medium
- 20 Hours Part time Allowed

Next Intake Feb 2016

Application dead line 25-09-2015

ICS Study Overseas
107 B 1/1, Galle Road, Wellawatte, Colombo 06
076 7013060
77, Clock Tower Road, Jaffna
021 4926222, 077 3013060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.